உள்ளே...

ம் 9

..... 88

ம் 117

இரும்புத் தோட்டம்

1

பெரிய தொழிற்சாலை அது!

ஏறத்தாழ ஐம்பது ஏக்கர் விஸ்தீரணம். ஆயிரத்துக்கும் மேல் தொழிலாளர்கள். 'ஆசியப் பிரசித்தம்' என்கிற அந்தஸ்து... எல்லாம் கொண்ட ஒரு இரும்புத் தோட்டம் அது!

அங்கே பசுமைக்கும் பஞ்சமில்லை. சேர்மன் ராமகிருஷ்ணனின் மனசுக்கு சளைக்காத பசுமை.

அங்குலத்துக்கு துளி கூடினாலும் வெட்டி எறியப்படும் சீரான புல்வெளி. அகட்டி கிளைபரப்பி எழும்பி நிற்கும் வேப்பமரக்கூட்டம். வாதநாராயண புன்னைகளும் நடுநடுவே...

கோபுரம்போல் குழாய் மரங்கள். அதில் குபுகுபு புகை.

தொழிற்சாலைக்கு வெளியே நெளியும் பிரதான தேசிய நெடுஞ்சாலை மேல் யார் போனாலும் வந்தாலும் விழியை விரிக்கவிடும் அந்த இரும்புத் தோட்டம் முன் ஏக்கப் பெருமூச்சுடன் நின்று கொண்டிருக்கிறான். கண்ணன். கையில் வேலையில் சேரச்சொல்லும் ஆர்டர்.

அவன் பார்வையில் செக்யூரிட்டி கேட்டை தாண்டி நடமாடிக் கொண்டிருக்கும் தொழிலாளர் கூட்டம் தெரிகிறது.

'காக்கிச் சட்டை-கையில் ஸ்பேனர் செட்-அங்கங்கே கிரீசும், மையும் பரவிய அழுக்குக் கசடு ஆறாக வியர்வை' அந்த கூட்டம் அவன் மனதை நிரடுகிறது.

அப்பா மணவாளன் முகம் அந்த நிரடலில் முந்துகிறது. அந்த நிறுவனம் தயாரிக்கும் ஒளிமிகுந்த பல்புகளையும், எந்திர உபகரண பாகங்களையும் மிகப் பெருமையோடு கண்ணனிடம் எடுத்துச் சொன்னவர் மணவாளன். 'பளீரென்று நெற்றியில் திருமண் நாமத்துடன் அவர் வேலைக்குப் புறப்படும் அழகே தனி அழகு!

காக்கி உடுப்புக்கென்றே பிறந்த மாதிரி ஒரு நெகு நெகுத்த சரீரம். ஒற்றை நாடியில் பளபளப்பான அந்த விழிகளில் மட்டும் அசாத்ய ஒரு ஒளி.

ஆனால் வழுக்கை விழுந்த சுருள் முடிகள் உதிர்ந்து போனதில் அவர் களைத்து விழுமளவு நைட் ஷிப்ட் பார்த்த அத்தாட்சி பளிச்!

-கண்ணன் மனசில் எழுந்த அப்பா மணவாளனின் முகம் இப்பொழுது மெல்ல மறைகிறது.

"கண்ணா நல்லா படி... நிறைய படி... எவ்வளவு படிக்க முடியுமோ அவ்வளவு படி... அப்பா நானிருக்கேன்! இந்த அப்பா உடம்புல அறுபது கிலோ எடைல எலும்பும் சதையும் இருக்கு. கைல வித்தை இருக்கு. அதை வெச்சு உன்னை எவ்வளவு முடியுமோ அவ்வளவு படிக்க வைப்பேன்.

தப்பித் தவறி கூட சரியா படிக்காம என்னை மாதிரி ஆகிடாதே. உனக்கு இந்த உத்யோகம் வேண்டாம். இது நாய்ப் பிழைப்பு. என் கஷ்டம் என்னோடபோகட்டும்."

அவர் அடிக்கடி பாடும் முகாரி அவன் காதுகளில் ஒலித்து அடங்கும் போது தொழிற்சாலை ஆபீசிலிருந்து அழைப்பு. விறைப்பான செக்யூரிட்டி கண்ணனை உள்ளே போகும்படி சைசை காட்டுகிறார்.

-பொம்மைபோல் நடந்து உள்ளே நுழைகிறான்.

-எதிர்ப்படும் சில தொழிலாளர் முகங்களில் சற்று சோகமான பார்வை.

"நீ மணவாளன் சார் மகன்தானே?" சிலர் கேட்டு ஊர்ஜிதம் செய்து கொள்ள இன்னும் சிலரோ வேறு மாதிரி சலிக்கின்றனர்.

"நீ எந்த வேலைக்கு வரக்கூடாதுன்னு உங்கப்பா நினைச்சாரோ அந்த வேலைக்கே வரும்படி விதி உனக்கு அமைஞ்சிருச்சு! ஹூம் தலையெழுத்தை யார் மாத்த முடியும்?"

-அனைத்தையும் காதில் வாங்கிப் போட்டுக் கொண்டு பர்சனல் டிபார்ட்மென்ட் நோக்கி நடக்கிறான். உள்ளே ஓய்வின்றி ஓடும் எந்திரங்களின் ஏகாண்ட இரைச்சல் அவன் மன இரைச்சலுக்கு ஒத்து ஊதுகிறது.

'பழுத்த இரும்புத் துண்டங்கள்-உருகி ஓடும் எஃகு நதி-அதை மோல்ட் எடுக்கும் விதவிதமான எந்திர பாகங்கள் - ஒரே வெப்ப வளாகம். வியர்வை வழித்துப் போட்டே தேய்ந்துபோன கைவிரல்களோடு தொழிலாளர் கூட்டம்'-தாண்டி நடக்கிறான் கண்ணன்.

இடையிட்டு மளுக்கென்று ஒரு கண்ணாடி கதவு திறந்து வழிவிட சிலீரென்று முகத்தில் அறைந்தது அறையின் ஏ.சி. குளிர். சப்தம் சுத்தமாகத் தேய்ந்து உள்ளே போதுமான அமைதி.

-எதிரே ஆசனத்தில் பர்சனல் மேனேஜர் கிருஷ்ணராஜ்.

-அநியாயத்துக்கு ஒரு இளம் வயது.

-அதிகார வேலைக்கென்றே அவதாரம் எடுத்த மாதிரி ஒரு தோரணை.

"வாங்க மிஸ்டர் கண்ணன். ப்ளீஸ் டேக் யுவர் சீட்." -என்கிற அந்த நபரின் குரலில்கூட நல்ல ரிதம் + அட்சர சுத்தம்! தயங்கித் தயங்கி அமருகிறான் கண்ணன். கிருஷ்ணராஜை இப்பொழுது இண்டர்காம் அழைக்க, அவர் கவனம் அங்கே தாவியதில் கண்ணனால் மௌனமாக அந்த அறையை ஊன்ற முடிகிறது. தவழும் பெர்ஃப்யூம் வாசத்தை உணர முடிகிறது. கூடவே இண்டர்காமுக்கு பதில் தரும் சாக்கில் கிருஷ்ணராஜ் பேசும் ஆங்கிலம் கேட்டு கொஞ்சம்போல் சொக்கல்.

உலகிலேயே ஒரு மகா கஞ்சத்தனமான மொழி இந்த ஆங்கிலம். எண்ணி இருபத்து ஆறு எழுத்து. ஆனால் அதற்குள் ஆயிரமாய் சொற்கள்! இது ஒருவன் நாவில் பிடிபட்டுவிட்டால் அவனால் பெரிய பெரிய உயரங்களை சாதாரணமாகத் தொடமுடிந்துவிட்ட சாமர்த்தியம் குறித்து கண்ணனிடம் ஏக்கப் பெருமூச்சு.

"கண்ணா நீ நல்லா இங்கிலீஷ் பேசணும். தமிழை தேனு சக்கரைங்கறாங்க. பேச்சோட சரி. ஆனா மரியாதையே கிடையாது. இங்கிலீஷுக்கு அப்படி இல்ல... சமயங்கள்ள கம்பெனில இங்கிலீஷ்ல டைப் பண்ணி சில சங்கதிகளைப் படிக்க வேண்டி வரும். அப்ப உளறிக் கொட்டுவேன். ஈசுக்கும், வாசுக்கும் வித்யாசம் தெரியாத தற்குறிப்பா உங்கப்பன்.

நீ அப்படி இருக்காதே. உன் இங்கிலீஷ் கேட்டா அமெரிக்க கிளின்டனே வாய் பிளக்கணும்."

-அப்பா மணவாளன் கருத்து இப்பொழுது ஏனோ முந்திரிக் கொட்டையாய் நினைவில் முந்துகிறது. அதன் நிமித்தம் கண்களில் நீர்ப்பசை.

'அப்பா...

ஆசை அப்பா...

உழைத்து ஓடாகிப் போய் குடும்பம் தாங்கிய

அப்பா...

தன் குடும்பம் என்றில்லாமல் தொழிலாளர் குடும்பம்

அத்தனையையும் தலையில் சுமந்த அப்பா...

அப்பா என்றால் கனவு.

அது கண்ணனின் வளமான எதிர்காலம் பற்றிய

கனவு.

தொழிலாளர் கூட்டத்தின் சுபிட்சம் பற்றிய கனவு.

இத்தனை கனவுச் சுமையோடு எப்படித்தான்

அப்பாவால் சாக முடிந்ததோ?

அதுவும் தொழிற்சாலையில் வேலை பார்த்துக்

கொண்டிருக்கும் போதே...!

2

நினைவில் நெளிந்தவன் பொலபொலவென்று கண்ணீர்விட இண்டர்காம் முடக்கி கிருஷ்ணராஜும் அதை கவனிக்கிறார்.

"என்ன கண்ணன் அப்பா ஞாபகம் வந்திரிச்சா?"

-கச்சிதமாக கேட்கிறார்.

"ஆமாம் சார்..." -திணறலான பதில் கண்ணனிடம்.

"உங்கப்பா மாதிரி ஒரு டெடிகேடிவ் சர்வன்ட்டை பாக்கறது ரொம்ப கஷ்டம். அவரை இழந்ததுல இந்த தொழிற்சாலைக்கு பெரிய நஷ்டம். அதை ஈடு செய்யத் தான் உங்களுக்கு வேலைபோட்டு தந்துருக்கோம்..." ஸ்ரீ கிருஷ்ண ராஜின் பேச்சில் வருத்த இழைவு.

"இது ஒரு பிரைவேட் கம்பெனி. ஒருத்தருக்கு வேலை கொடுக்கறதுங்கறது கம்பெனி விருப்பு வெறுப்பை பொறுத்த விஷயம். ஆனாலும் தொழிலாளர்கள் மரணத்தை சேர்மன் எப்பவுமே ரொம்ப சீரியஸா எடுத்து சிந்திக்கிறவர். அதனால்தான் வாரிசுகளுக்கு வேலைங்கற ஸ்கீம் இங்க ரொம்ப ஆக்டிவா செயல்பட்டுகிட்டிருக்கு.

உங்கப்பா எந்த டிபார்ட்மென்ட்ல வேல பார்த்து கிட்டிருந்தாரோ அங்க அதே வேலையை உங்களுக்கும் அலாட் பண்ணியிருக்கோம். சர்வீஸ் பெனிஃபிட் நீங்கலா மற்ற எல்லாம் உங்கப்பா வாங்கின அளவுக்கே உங்களுக்கும் கிடைக்கும்.

உங்க கடுமையான உழைப்பால் இந்த கம்பெனியை முன்னேற்றுவீங்கன்னு நம்பறோம். மேற்கொண்டு இந்த தொழிற்சாலை பற்றி நான் உங்களுக்குத் ரொம்ப சொல்லத் தேவையில்லை. அப்பாவைப் பார்த்தே எல்லாம் தெரிஞ்சுகிட்டிருப்பீங்க.

இது ஒரு மினி சொசைட்டி. விதம்விதமான ஆசாபாசங்கள் கொண்ட மனிதர்களோட கட்டமைப்பு ரொம்ப ஜாக்கிரதையா உங்க உறவுமுறைகள் இருக்கணும். எல்லார்கிட்டையும் பாத்து பழகுங்க. சுபீரியர்ஸ்க்கு மரியாதை கொடுக்கறது ரொம்ப முக்கியம்.

உங்க வேலை திறமையைவிட உங்க ஒழுக்க உணர்வு தான் இந்த தொழிற்சாலைக்கு நீங்க தரவேண்டிய முதல் விஷயம். என் பி.ஏ. வெங்கடாஜலம் உங்களை இப்ப டிபார்ட்மெண்ட்டுக்கு கூட்டிகிட்டு போய் உங்க வேலையை... சூழ்நிலையை அறிமுகப்படுத்துவாரு. ஆல் தி பெஸ்ட்!"

-பணிச்சுத்தமான கிருஷ்ணராஜின் அந்த நீண்ட பேச்சில் ஒரு அநியாய தெளிவு! எதிராளியைப் பேசவே விடாமல் சொல்ல வேண்டியதை லகுவாகச் சொல்லி ஆல் தி பெஸ்ட் என்று முற்றுப்புள்ளியும் வைத்து 'உம் கிளம்பலாம்' என்று பார்க்கின்றவரை முதல் தடவையாக லேசான அதிர்ச்சியுடன் பார்க்கிறான் கண்ணன். இந்த எந்திர உலகத்தில் நீ சந்திக்கப்போகும் பலவிதமான அதிர்ச்சிகள் முன்னால் இதெல்லாம் கொசு என்பதுபோல் வெங்கி எனும் வெங்கடாசலம் வந்து நின்றான்.

"போலாமா சார்!" மரியாதையான ஆரம்பம் வெங்கடாஜலத்திடம் கதவை தாண்டி வெளியே வந்த மறுவிநாடி அது ஆவியாகிப்போக உதடில் வேறுமாதிரி தொனி.

"நம்ப மணவாளன் சார் மகன்தானே நீ...?"

"ஆமாம் சார்!"

"உங்கப்பா எனக்கு ரொம்ப பெட். உன் படிப்புக்காக எங்கிட்ட எத்தனை தடவை கடன் வாங்கியிருப்பார் தெரியுமா?"

"அப்படியா சார்..."

"என்ன அப்படியாங்கறே? ஆமா படிப்பை பாதியில அம்போன்னு உட்டுட்டு இந்த வேலைக்கு வந்துட்டியே,

எஞ்ஜினியரிங் காலேஜ் சீட் என்ன உனக்கு இனாமாவா கிடைச்சது?''

''என்ன சார் பண்ண... குடும்ப சூழ்நிலை அப்படி. அப்பா இப்படி எங்களை தவிக்க விட்டுட்டு போவார்னு நாங்க கனவுலகூட நினைக்கலை...''

''உங்கப்பா கொடுத்து வெச்சவர். அதான் சர்வீஸ் முடியும் முன்னால போய் சேர்ந்துட்டார். இந்த தொழிற்சாலை உத்யோகம் பார்க்கறது சாதாரணம் இல்லை தம்பி. இதுக்கு ஆடுமாடு மேய்க்க போகலாம். எல்லாம் போகப்போக தெரிஞ்சுப்பே...'' வெங்கி அப்படி சலித்துக்கொண்டபோது கண்ணன் பணியாற்ற வேண்டிய அந்த டிபார்ட்மெண்ட் வந்து முட்டவே வெங்கியின் நடையில் தேங்கல்.

''இதான் உன் ஒர்க் ஸ்பாட். அதோ அவர் தான் உன் சுபீரியர். பேர் ரங்கபாஷ்யம்! அவரை எப்ப பார்த்தாலும் முதல்ல குட்மார்னிங் சொல்லிடு. இல்லேன்னா. அதை நெனைச்சே சொதம்பிப் போயிடுவான். கண்ணா நீ என் மகன் மாதிரி. ரொம்ப உரிமையா சொல்றதை தப்பா எடுத்துக்காதே. அப்படியே அங்க போட்டும் விட்டுடாதே...''

வெங்கி பேச்சோடு பேச்சாக ரங்கபாஷ்யத்தை நிமிர்ந்து பார்க்க அவர் பார்த்தும் பார்க்காத மாதிரி ஒரு இரும்புத்துண்டை கலிலியோத்தனமாக ஆராய்ந்து கொண்டிருந்தார்.

''இவன் நாம வந்ததை அப்பவே பார்த்துட்டான். ஆனா கண்டுக்காதமாதிரி நிக்கறான். யாரா இருந்தாலும் அவன்கிட்டபோய் குட்மார்னிங் சொல்லி வழிஞ்ச நெளிஞ்சாதான் ஐயா மெள்ள திரும்பிப் பார்ப்பாரு.

டிபார்ட்மெண்ட் ஹெட்டா இருக்கும்போதே இந்த ஈகோ...''

சலித்துக் கொண்டே வெங்கி ரங்கபாஷ்யத்தை நெருங்கி அவர் கவனத்தை கலைக்க பரந்த நெற்றியில் நிறைந்த நாமத்தோடு ரங்கபாஷ்யம் வெங்கியை ஒரு போலிப் புன்னகையுடன் பார்த்தார்.

''சார், இவர் கண்ணன். சமீபத்துல செத்த நம்ம மணவாளன் சார் மகன். மிச்ச விபரத்தை பி.எம். உங்களுக்கு இண்டர்காமில் சொல்லியிருப்பாரு. மணவாளன் சீட்டுக்கு இவர் வந்துருக்கார். ஆறுமாசம் ட்ரெய்னிங்... அப்புறம்தான். புராபேஷன், கன்ஃபர் மேஷன் எல்லாம். அதெல்லாம் உங்களுக்கு தெரியும். சார் இன்னிக்கு இப்பவே டூட்டில ஜாய்ன் பண்றார்.''

வெங்கி ரங்கபாஷ்யத்துடன் கண்ணனை சேர்த்து விட்டு கை சொடுக்கி நகர, ரங்கபாஷ்யம் நெடுநேரம் வரை கண்ணனை லட்சியமே செய்யவில்லை.

அவரைப் பொறுத்து அப்படி நடந்து கொள்வதென்பது கண்ணனுக்கு வைக்கும் ஒரு குட்டி பரிட்சை பார்ப்பவர்களுக்கு அது தலைகீழாகத் தெரியும்.

இந்த பரிட்சையில் கண்ணன் பாஸ் செய்தால் டிபார்ட்மெண்டில் ஓரளவு நிம்மதியோடு காலம் கழிக்கலாம். இல்லாவிட்டால் திகட்டல்தான்.

கண்ணனுக்கு நெடுநேரம்வரை எதுவுமே புரியவில்லை. 'எனக்கென்ன என்று இந்த மனிதர் இரும்பாராய்ச்சி செய்கிறார். தான் என்ன செய்ய? அவரது ஆராய்ச்சியை ரசிக்கவா? இல்லை தனது வேலை என்ன என்று கேட்டே விடவா? இல்லாவிட்டால் எந்திரத்துக்கு எந்திரம் நின்று

வேலை பார்ப்பவர்களை நோட்டம் போட்டு பெராக்கு பார்க்கவா?

பர்சனல் மானேஜர் உட்காரக்கூட விடாமல் எக்ஸ்பிரஸ் வேகத்தில் விஷயத்துக்கு வந்து கடமையை முடிக்கிறார். இங்கே இந்த ஆள் என்னடாவென்றால் மௌனமாய் அலட்சியம் காட்டுகிறார்.

உன் பேர் என்ன? படிப்பென்ன? இப்படி பரஸ்பரம் விசாரிக்க ஆயிரம் விஷயம் இருக்கிறதே... ஏன் அதை யெல்லாம் செய்யாமல் இப்படி நிற்க வைத்துக் கொல்கிறார்?''

''கண்ணன் தனக்குள் செருமாந்து போகிறான். தொழிலாளர் கூட்டமும் இதைக் கவனிக்காமலில்லை.

''மாப்ள நம்ம ஹெட்டை கவனிச்சியா. புது அப்பாய்ன்ட்மெண்ட் வந்து நின்னுக்கிட்டிருக்கான் எனக்கென்னன்னு இரும்புத்துண்டை பாத்துகிட்டிருக்கான் பார். இவனுக்கு இவன்கீழ வேலை பார்க்கறவன்னா என்னா ஒரு இளப்பம் கவனிச்சியா?''

''இவனை நாம என்னா இன்னிக்கி நேத்தா பார்க்கறோம். ஏண்டா இவன் தப்பி தவறி இந்த தேசத்துக்கு ராஜாவா இருந்தா என்னடா பண்ணுவான்? நமமளை மாதிரி மாதச் சம்பளம் வாங்கும்போதே இந்தத் திமிர்.''

''இவன் பரவால்லடா. புரொடக்ஷன் இன்சார்ஜ் அச்சு அசலா நாய்க்கு பொறந்தவனாம். இவன் மௌனமா கொல்லுவான். அவன் சப்தம் போட்டே நம்மளை கொல்றவன்.''

''பய யாருங்கறே? நம்ம மணவாளன் மகனப்பா! மணவாளன் மாதிரி ஒரு மனுஷனை நம்ப கூட்டத்துக்கு இனி நாம பாக்க முடியுமா சொல்லு.''

கூட்டத்தின் பிரஸ்தாபிப்புகள் நடுவே மெல்ல ரங்கபாஷ்யம் கண்ணன் பக்கம் திரும்புகிறார். மௌனம் உடைகிறது.

''ஒழுங்கா வேலை பார்க்கணும். எனக்கு டிசிப்ளின் தான் பெரிசு. உங்க அப்பா என்னைக்கண்டா நடுங்குவார். அவ்வளவு பயபக்தி. உங்கப்பா பேரை நீ காப்பாத்தணும். வேலை பார்க்கும் போது பேசினா எனக்கு பிடிக்காது. பேச்சே கூடாது. மத்ததை நீ போகப் போக புரிஞ்சுப்பே...''

கண்ணன் பெரிதாகத் தலையாட்டினான். சூப்பர்வைசர் வந்தார். மெஷின் பக்கம் அழைத்துச் சென்றார். ஒரு பக்கம் எந்திர அறிமுகம். மறுபக்கம் ரங்கபாஷ்யம் தலை மறைந்தது.

டிபார்ட்மெண்டிற்குள் இறுக்கம் தளர்ந்த மாதிரி ஒரு நிலை.

ஆனால் ரங்கபாஷ்யம் ஒரு மறைவில் நின்று டிபார்ட்மெண்ட்டை கவனிக்க ஆரம்பித்தார்.

''யார் ஒழுங்காக வேலை பார்க்கிறார்கள்... யார் பேசுகிறார்கள்? என்று ஒரு குட்டி லுக்கிங்...

''மாப்ள பிச்சைக்காரத் தனமா ஒளிஞ்சிருந்து பார்க்கறாண்டா. கேர்ஃபுல்!'' - இதற்குள் யாரோ பார்க்க விஷயம் கசிய மீண்டும் ஒரு இறுகிய நிலை!

கண்ணனுக்கு எல்லாமே வியப்பாக இருந்தது.

அவன் கற்பனையில் நினைத்து வைத்திருந்த தொழிற்சாலை வடிவம் வேறு. ஆனால் இங்கேயோ நிலையே வேறாக இருக்கிறது. இதன் உள்ளே வினாடிக்கொரு மனச்சிதைவு. வயிற்றுப் பாட்டின் நிமித்தம் உழைக்கும் உழைப்பின் நடுவே எதற்காக உள்ளே

நுழைந்தோமோ அந்த சிந்தனையை எழாதபடி எப்படி காலந்தள்ளப் போகிறோமோ என்கிற பயங்கலந்த மிரளல்.

அப்பா எப்படித்தான் இருபத்துநாலு வருஷம் காலம் தள்ளினாரோ?

3

கண்ணன் மருகியபடி சூப்பர்வைசருடன் சென்று அவர் காட்டிய எந்திரம் எதிரே நின்றான்.

"ஒரு வாரத்துக்கு இது ஓட்றதை கவனி. நல்லா கவனி அப்புறமா படிப்படியா வேலை பார்க்கலாம். இந்தாப்பா ராமு இவன் புது ஆப்பரேட்டர். பாத்துக்க." - சூப்பர் வைசர் திருக்குறள் மாதிரி பேசிவிட்டு நகர்ந்து கொண்டார்.

எடுத்த எடுப்பிலேயே எல்லாரும் 'வா போ நீ' என்று சகட்டுமேனி இளப்பத்தில் அழைப்பதில் கண்ணனுக்குள் வலி.

"ஏன் யாரும் வாங்க போங்கன்னு பேச மாட்டேங்கறாங்க?"

"வாடா போடா சொல்லலேல்ல. அத நினைச்சு சந்தோஷப்படு. இந்தா இந்த பக்கெட்டுல கூலன்ட் பிடிச்சுகிட்டு வா."

"கூலன்ட்டுன்னா...?"

"ஓ நீ புதுசா. வா காட்றேன்." - ராமு என்னும் அவனது புதிய சகா பக்கெட்டை தூக்கியபடி நடக்க கண்ணனின் கால்கள் பின் தொடர்கின்றன.

நடக்கும்போது பேச்சு...

"யார் கூடயும் பேசக்கூடாதுன்னு சொல்லியிருப்பானே அந்த தாண்டவராயன்?"

"தாண்டவராயனா யார் அது?"

"அதாம்பா நம்ப டிபார்ட்மென்ட் ஹெட் டினோசருக்கு பொறந்தவன்..."

"ஏன் அவரை இப்படியெல்லாம் பேசறீங்க..."

"அரக்கனை வேற எப்படி பேசறதாம். இப்ப நீ என்ன பண்றேன்னு வேவு பார்த்துகிட்டிருப்பான்..."

"பார்க்கட்டுமே. நாம வேலை பார்க்கறதை பாக்கறது தானே அவன் வேலை?"

"இவன் பாக்காட்டி நாம வேலை பார்க்க மாடடோமா?"

"தெரியலை... நான் புதுசு."

"தெரிஞ்சுக்குவே... போகப்போக தெரிஞ்சுக்குவே. ஆனா ஒண்ணு நீ உன் அப்பா மாதிரி இளிச்சவாயனா இருந்துடாதே. இந்த தாண்டவராயன் உன்னை தரையில போட்டு தேச்சிடுவான்."

"அண்ணே, உங்க பேரு..."

"ராமுன்னு சூப்பர்வைசர் சொன்னப்ப கேக்கலியா உன் காது."

"சரியா கவனிக்கலை."

"கவனிக்கணும்... நம்பளைச் சுத்தி நடக்கறதை இங்க நல்லா கவனிச்சாதான் நாலு விஷயம் தெரியும். எதுவும் தெரியலைன்னா உன்னை தரைல போட்டு தேச்சிடுவாங்க..."

-அடிக்கடி ராமு என்னும் அவன் 'தரையில போட்டு தேச்சிடுவாங்க' என்று சொல்லியே பயமுறுத்த கண்ணனுக்கு என்னவோ போல் ஆனது.

அப்பொழுது அவனைத் தாண்டி இன்னொரு சகா சிரித்தபடியே சென்றவாறு...

"ஆரு ராமு ஆளு புதுசா இருக்கு?"

"அதான் ஆசிட் டாங்கில விழுந்து செத்தாரே நம்ப மணவாளன்..."

"ஆமா நம்ப நைனா! நல்ல மனுஷனாச்சேப்பா..."

"நல்ல மனுஷனங்களைத்தான் இந்த கம்பெனிக்கு பிடிக்காதே... அவரோட மகன்தான் இவன். சான்ஸ் ஆஃப் எம்ப்ளாயிஸ் ஸ்கீம்ல பய்யனுக்கு வேலை கொடுத்துட்டாங்கோ பெரிய மனசு பண்ணி."

"அப்படியா... ஏம்ப்பா உன் பேர் என்ன?"

"கண்ணன்."

"நீ இன்ஜினியரிங் படிக்கறதால்ல உன் அப்பா சொல்வாரு."

"ஆமா! இப்ப ஸ்டாப் பண்ணிட்டேன்."

"சுத்த பைத்தியக்காரனா இருக்கியே. இந்த காலத்துல சீட் வாங்கறது எவ்வளவு கஷ்டம் தெரியுமா?"

அப்பொழுது அங்கே ரங்கபாஷ்யத்தின் குறுக்கீடு... உடனே அனைவரும் குழிக்குள் பதுங்கிய சுண்டெலியாய் சரட்டென்று ஓடி ஒளியப் பார்த்தார்கள்.

அவரும்கூட அதை குரூரமாய் ரசித்த மாதிரிதான் தெரிகிறது. "என்ன பேச்சு... வந்து சேர்ந்து முழுசா பத்து நிமிஷம் ஆகலை. அந்த பத்து நிமிஷமும் பேச்சு. வேலை பார்க்க வந்தியா பேச வந்தியா?"

-கண்ணன் ரங்கபாஷ்யத்தின் தடாலடி வினாமுன் தடுமாறினான்.

"எல்லாத்தையும் அஞ்சு மணிக்கு மேல கேட்டுக்கு வெளியவெச்சு சொல்லு. ஒர்க் ஸ்பாட்ல எதுக்கும் பேசக் கூடாது."

-ரங்கபாஷ்யம் பார்வை ராமுவை அடுத்து ஊடுருவியது.

"சீனியர் ஆப்பரேட்டர்ஸ் முன்னுதாரணமா நடந்துக்கணும். இப்படித்தான் வந்த ஆள் கிட்ட வளவளன்னு பேசுவியா?"

"எங்க சார் பேசினேன். பேரென்னன்னு கேட்டேன்."

"பேரை தெரிஞ்சிக்க பத்து நிமிஷமா? எனக்கு தெரியும்யா உன்னை பத்தி... உன் வாயாலதான் நீ அழியப் போறே..."

-கடூரமாய் கத்திவிட்டு சுற்றி ஒரு கருட பார்வை பார்த்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தார் ரங்கபாஷ்யம்.

ராமு முகம் கும்பி விட்டிருந்தது.

எள்ளும் கொள்ளும் போட்டி போட்டு வெடித்தது.

கண்ணனுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.

"உள்ள நுழைஞ்சிட்டா எட்டு மணி நேரம் அப்படி இப்படி திரும்பாம வேலை பார்க்கணும் இவனுக்கு. ஒண்ணுக்கு போனாகூட சொல்லிட்டு போகணும்பான். இவனுக்கு என்ன? ஏ.சி.ரூம் சுழல் நாற்காலி பன்னிரண்டாயிரம் சம்பளம் அலுப்பா சலிப்பா சொல்லு...?"

வாஸ்தவம்தான் என்கிற மாதிரி ரங்கபாஷ்யம் ஏ.சி.அறையில் தன் சுழல் நாற்காலியில் இப்போது இப்படியும் அப்படியுமாக ஆடியபடி புரொடக்ஷன் சூபர் வைசர் ஜெயசந்திரனோடு பேசிக் கொண்டிருந்தார்.

ஜெயசந்திரன் அவன் பாஷையில் சொல்வதானால் அவருக்கு கடலை கொடுத்துக் கொண்டிருந்தான்.

"சார், விஷயம் தெரியுமா? நம்ம பாய் சின்ன வீடு வெச்சிருக்கானாம்..."

"உனக்கு இப்பதான் தெரியுமா...? எனக்கு மூணு மாசத்துக்கு முந்தியே தெரியும்."

"சார், பெரிய ஆள் சார் நீங்க...?"

"சரி சரி ட்யூட்டி டயத்துல கதை பேசாம வந்த விஷயத்த சொல்."

"நாங்க எதுக்கு வருவோம்... கொஞ்சம் எங்க டூல்ஸை சர்வீஸ் பண்ணிக்கொடுத்தா நல்லா இருக்கும்..."

"ஒரு நாளைக்கு எத்தனை தடவையா பண்ணித் தர்றது...?"

"என்ன சார் பண்ண... எத்தனை தடவை சர்வீஸ் பண்ணினாலும் ஒழுங்கா ஓடமாட்டேங்குது."

"ஆப்பரேட்டரை குளிச்சுட்டு வேலைக்கு வரச் சொல்லு..."

"அதைக் கேட்டு ஜெயச்சந்திரன் பெரிதாக சிரித்தான். இந்தியாவிலேயே பெரிய ஜோக் அதுதான் என்கிற மாதிரி... ரங்கபாஷ்யத்துக்கும் இப்போதைய... தேவையே அதுதான். உடனேயே சர்வீஸ் ஸ்லிப்பில் கையெழுத்தைப் போட, ஜெயசந்திரனிடம் வந்த விஷயத்தை முடித்த மகிழ்ச்சி...

எழுந்து வெளியே வருகிறான்.

எதிர்ப்படுகிறான் அவனது சகா அரவிந்த்.

"என்னடா கடலை கொடுத்து காரியத்த முடிச் சிட்டியா?"

"உடுவோமா?"

"இதுக்கு நீ சிரைக்கப் போகலாம்..."

"உன்னை மாதிரி கக்கூஸ் கழுவறதுக்கு அதுமேல் தானே மாமா..."

அரவிந்த் முகத்தில் அடிபட்ட மாதிரி ஒரு உணர்ச்சி.

"கோவிச்சுக்காதே மாமா, இந்த கம்பெனியில ஆளுக்கு தகுந்தமாதிரி போனா தானே காரியம் நடக்குது?"

அரவிந்த் பதில் ஏதும் பேசவில்லை. ஆனால் அவர்கள் பேச்சு அருகில் இருக்கும் கண்ணனின் காதிலும் விழாமல் இல்லை.

அவன் மனம் முழுக்க இப்பொழுது இங்கே எப்படி காலம் தள்ளப்போகிறோம் என்கிற கேள்விதான் பிரதானமாக...

ஆளாளுக்கு நடிக்கிறார்கள்...

நிறைய பயப்படுகிறார்கள்...

முதுகுப்புறமாய் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பேசுகிறார்கள்!

இந்த விஷயத்தில் பெரியவரிலிருந்து சிறியவர்வரை பேதமே இல்லை.

இதற்கு நடுவிலும் ஏதோ தொழில் நடக்கிறது.

ஆனால் தொழிலைத் தவிர மற்றதெல்லாம்தான் பிரதானமாக இருக்கிறது.

கண்ணனுக்கு எது புரியவேண்டுமோ அது புரிந்து போனது.

அதேசமயம் எப்படி நடந்து கொள்வது என்பதில் ஒருவகை குழப்பம் வந்து நின்றது.

அப்போதுதான் அவன் வந்தான்.

வில்லியம்.

புரொடக்ஷன் சீனியர் மேனேஜர்.

"டேய் வந்துட்டாண்டா புன்னகை மன்னன்..."

"இங்க என்னடா வேலை அவனுக்கு... இந்த பக்கமே வரமாட்டானே..."

"அதானே... போனா ஜி.எம். ரூமுக்கு போவான். வேறு எங்கேயும் போகமாட்டானே. போனா கௌரவமும் குறைஞ்சு போயிடுமே... எதுக்கு வந்துருப்பான்...?"

எல்லாரையும் கேள்வி பிடுங்கித் தின்கிறது. அதிசயமாக வந்திருக்கும் வில்லியமின் பார்வையோ கண்ணனை மேலேயே இருக்கிறது.

இந்த நேரம் பார்த்து ஒருவன் கண்ணனை நெருங்கி நின்றான். வில்லியமை ஒரு பார்வையும் கண்ணனை மறுபார்வையும் பார்த்துவிட்டு கண்ணனின் காதோரமாக கிசுகிசுக்க ஆரம்பித்தான்.

"தம்பி... இவன்தான்... இவனேதான் நல்லா பாத்துக்க...!"

"எதுக்கு?"

"பாத்துக்க பிறகு சொல்றேன்..."

"என்ன சார் புதிர் போடறீங்க..."

"புதிர்தான்..." அவன் பேசப் பேச வில்லியம் பார்வை கண்ணனை அளந்து முடிந்திருக்கிறது. ரங்க பாஷ்யம்கூட வில்லியம் வந்திருப்பது தெரிந்து அப்படியே அமர்ந்த இடத்திலிருந்து எட்டி ஒரு பார்வை பார்த்துவிட்டு அப்போதுதான் நிறைய வேலை இருப்பது போல லாக்

நோட்டை விரித்துக்கொண்டு எதையோ எழுத ஆரம்பித்தார்.

இதை யார் கவனித்தார்களோ இல்லையோ - ஆப்பரேட்டர்கள் அத்தனை பேரும் கவனித்துவிட்டு ரகசியமாக சிரித்துக் கொண்டனர்.

"அதானே பார்த்தேன்... கடவுளே வந்தாலும் எங்க தாண்டவராயனை வந்தவங்கதான் என்னன்னு கேக்கணும். அவர் கேக்க மாட்டாரே... பிரஸ்டீஜ் என்னா வறது?"

கூடவே முணுமுணுப்புகள். கண்ணனுக்கு தலையை சுற்றியது. கடவுளே இதெல்லாம் என்ன... கண்டும் காணாமல் இருப்பதிலெல்லாமா பிரஸ்டீஜ் இருக்கிறது? அது நேர்மையாகவும் கண்யமாகவும் நடந்து கொள்கிறவர்களிடமல்லவா இருப்பதாக நினைத்துக் கொண்டிருக்கிறேன்?

4

டாய்லெட்டில் கூட்டம் வழிந்து கொண்டிருந்தது. பத்துக்கு எட்டு பார் வாயில் சிகரெட்... இதில் ஒரு சிகரெட்டை இரண்டு பேர் மூன்று பேர் அன்யோன்யத்துடன் ஊதித்தள்ளும் ஆரோக்ய கூட்டுறவு வேறு.

சிறுநீர் கழிக்கச் சென்ற கண்ணனுக்கு மூச்சையடைத்தது. பப்ளிக் டாய்லெட் தேவலாம் என்று தோன்றியது.

"யாருப்பா அது புதுமுகம்..." ஒருவன் கண்ணனை கிறத் தொடங்குகிறான்.

"நம்ப மணவாளன் மகன்ப்பா..."

"அட... மணவாளன் மகனா? செஞ்ச கொலைக்கு வேலை கொடுத்து அட்ஜஸ் பண்ணிட்டாங்களா?" எவனோ ஒருவனின் கருத்து கண்ணனை குத்தியது.

'கொலையா?' - அவன் பார்வை அந்த நபரை ஊடுருவியது. இப்போது அடுத்தவனிடம் கண்டனம்.

"டேய் ஓட்டவாயா... வாய வெச்சிகிட்டு சும்மா இருக்க மாட்டியா? நீ வாயாலேயே அழியப் போறே பாரு..."

கண்ணனுக்கு திக்கென்று. இது என்ன ஒருவன் புதிர் போடுகிறான். அடுத்தவன் அதைக் கட்டிப் போடுகிறான். கண்ணன் கலங்கிப் போனான்.

"தம்பி... இவன் கிடக்கிறான். போய் ஒழுங்கா வேலையை பார். சின்ன வயசுலேயே உனக்கு வேலை கிடைச்சிடிச்சு. எல்லாம் உன் அப்பா செஞ்ச புண்ணியம். அந்த வேலை நல்லா விளங்கி முன்னுக்கு வரப்பார்..." கண்டித்தவனிடம் இப்போது ஒரு மெலிதான பாசிடிவ் அப்ரோச்.

"ஆமா சூப்பரா முன்னுக்கு வந்துடலாம்... நல்லா கடுமையா உழைச்சுகிட்டே இரு. பிரமாதமா முன்னுக்கு வந்து வீடுவாசல் கார் எல்லாம் வாங்கிடலாம்." - கிட்டத் தட்ட கிண்டல் குரலில் இது இன்னொரு சிகரெட் உதட்டின் கருத்து.

கண்ணனுக்கு வலித்தது.

எந்திரத்தின் முன் நின்று வேலை பார்ப்பதை விடவும் இதுதான் கடினமாக இருந்தது. பர்சனல் மேனஜர் சொன்னது நினைவில் ஓடியது.

'இங்க ரொம்ப ஜாக்கிரதையா உங்க உறவு முறைகள் இருக்கணும். எலலார்கிட்டையும் பார்த்து பழகுங்க. இது

ஒரு மினிசொஸைட்டி. விதம் விதமான ஆசாபாசங்கள் கொண்ட மனிதர்களோட கூட்டமைப்பு..."

ஆம்... விதம் விதமான ஆசாபாசங்கள் அபிப்ராயங் களின் கூட்டமைப்பு.

கண்ணன் மனதில் சுதாரித்து நிமிர்ந்தபடி டாய்லெட்டுக்கு வெளியில் வந்தான். மணி சப்தம் கேட்கத் தொடங்கியது. ஷிப்ட் முடிந்துவிட்டது.

சிறையை விட்டு சுதந்திர உலகம் நோக்கிச் செல்லும் மகிழ்வோடு தொழிலாளர் கூட்டம் வெளியே கிளம்ப ஆயத்தமாகிறது.

கண்ணனுக்கும் இறுக்கிக் கவ்விப்பிடித்திருக்கும் இந்த உலகினை விட்டு வெளியேறினால் தேவலை என்று தோன்றியது.

கிளம்ப ஆயத்தமானான்.

ரங்கபாஷ்யம் எதை கவனித்ததோ இல்லையோ இதை கவனித்தார். சூப்பர்வைசரை கூப்பிட்டார்.

"ஆமா என்ன அந்த புது மைனர் கிளம்பிட்டான்...?"

-சூப்ரவைசரும் அப்போதுதான் கவனித்தார்.

"ஆமா சார்..." - ஆமோதித்தார்.

"நான் என்ன உன்கிட்ட கன்ஃபர்ம் பண்ணிக்கவா கேட்டேன், போய் அவனை இருக்கச்சொல். நாங்கல்லாம் எங்க ஆரம்பத்தில ராத்திரி 10 மணிக்குதான் வீட்டுக்கு போவோம். தெரியும் தானே?"

சூப்பர் வைசர் அதற்குமேல் அங்கு நிற்கக்கூடாது. கிளம்பினார். செக்ஷன் கதவை தாண்டப் பார்த்த கண்ணனை கூப்பிடுகிறார்.

"என்ன கிளம்பிட்டே...?"

"பெல் அடிச்சிடிச்சே சார்..."

"பெல் அடிச்சா?"

"....."

"முழிக்காதே. வா இங்கே! இந்த மெஷினே நல்லா கிளினா தொடை பார்ப்போம். பத்து மணிக்கு முந்தி வீட்டுக்குப் போக ஆசைப்பட்டா கன்ஃபார்ம் ஆ மாட்டே, ஞாபகத்துல வெச்சுக்கோ..."

அவர் பேச்சு மிரட்டலா? அபிப்ராயமா? எதார்த்தமா? எது நிஜம் என்று புரியாத தினுசாக இருந்தது. கண்ணன் அவர் நீட்டிய அழுக்குத் துணியை வாங்கிக் கொண்டான். கசடு நிறைந்த எந்திரம் 'வா கண்ணா வா' என்றது.

இதென்ன பாலிசி? கேள்வி வந்து பிராண்டியது.

அழுகை கூட வந்துவிட்டது.

அழாமல் முதல் நாள் பொழுதை விரட்டியவர்கள் யார்?

கதவை சாத்திவிட்டு கவலையோடு படுக்கப்போன ராஜேஸ்வரி மகனைக் காணாத ஏக்கத்தோடு அப்படியே படுக்கையில் விழுகிறாள். அருகிலேயே வயதுக்கு வந்த பெண்கள் ஒருத்திக்கு மூன்று பேராக...! போதாக் குறைக்கு ஐந்து வயதில் ஒரு சின்ன பயல். பூச்சிபோல ஒரு மூலையில் சுருண்டு படுத்திருக்கிறான்.

தாவணி விலகியதுகூட தெரியாதபடி மூத்தவள் அதோ கிழிந்த பாயில்... மூன்று பேருக்கு ஒரே நிறத்தில் தாவணி. ராஜேஸ்வரி கிழிந்த புடவை எடுத்திருக்கும் அடுத்த வடிவம் அது.

"தாவணியை ஒதுக்கி சரிசெய்யும்போதுதான் அவளது பருவச் செழிப்பு கண்ணில் படுகிறது. பகீர் என்கிறது. இதே

விடலைகள் கண்ணில் பட்டிருந்தால் அவர்களை உருக வைத்திருக்கும்.

ஐயோ இந்த பெண் இப்படி வளர்ந்துவிட்டாளே?! கல்யாணச் சந்தையில் இந்த கன்னிப் பசுவை நிறுத்தி விலைகொடுத்து தலையில் கட்ட வேண்டிய வேலை யெல்லாம் வேறு இருக்கிறதே...

ராஜேஸ்வரிக்குள் பகீர் உணர்ச்சி பற்றி எரிகிறது.

'பல நாட்களில் இரண்டு வேளை சாப்பாடுதான். அப்படி இருக்கும் போதே இளமை இப்படி வஞ்சிக்காதபடி வளர்ந்து மிரட்டுகிறதே! இன்னும் வக்கு வகை இருந்தால் இவளை வாலிபக் கூட்டமே துரத்திச் செல்லுமோ?"

"நினைவலைகள் நடுவே அவள் மனம் நீத்த முடியாமல் நீந்தும்போது கதவு தட்டப்படும் சப்தம்.

திறந்தால் எதிரே கண்ணன்.

"வாப்பா... இது என்னா இவ்வளவு நேரம் கழிச்சு வந்துகிட்டு. வேலைக்குதான் போனியா இல்லை வேற எங்கேயாவது?"

கேட்டபடி திரும்ப கதவை தாழிடுகிறாள்.

கண்ணனிடம் முதல் நாளே சொல்லமுடியாத சோர்வு.

"ஏம்ப்பா இவ்வளவு நேரம்... பார்த்து பார்த்து கண்ணு பூத்து போச்சுப்பா... ஆமா வேலைல சேர்ந்துட்டியா..."

-என்ன சொன்னாங்க. எப்படி இருந்துச்சு?

-கண்ணன் பெருமூச்செறிகிறான்.

"என்னப்பா ரொம்ப கஷ்டமா இருந்துச்சா...?" ராஜேஸ்வரியிடம் இப்போது சற்று உச்சபட்ச பதற்றம்.

"அம்மா... நான் இந்த வேலைல நீடிப்பேன்னு தோணலைம்மா."

"ஏம்ப்பா..." - பதற்றம் வெடிக்கிறது ராஜேஸ்வரியிடம்.

"எப்படி சொல்றதுன்னு தெரியலைம்மா..." - கண்ணன் குரலில் உடைகிறான். போட்ட உடுப்பை கூட கழட்டாமல் தரையில் சரிகிறான்.

"ஏன்... வேலை ரொம்ப கஷ்டமா இருக்கா..."

"இல்லைம்மா... மனுஷங்கதான்..."

"மனுஷங்கதான்... உம் சொல்லு - யார் என்ன சொன்னது? உங்கப்பாக்கு நல்ல பேராச்சேப்பா...?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லைம்மா. எனக்கு எப்படி சொல்றதுன்னு தெரியலை..."

-ராஜேஸ்வரி ஒரு வினாடி ஸ்தம்பிக்கிறாள். ஆழமாக யோசிக்கவும் ஆரம்பிக்கிறாள். அப்படியே தட்டை எடுத்து மூடி வைத்த சோற்றை எடுத்து அவனுக்குப் போட அவள் தயாராவதில் ஏதோ பூடகமாய் ஒரு வகை தீர்க்கம்.

"என்னம்மா திடீர்னு பேச்சு நிறுத்திட்டே. எனக்கு இந்த வேலை பிடிக்கலை. நான் வெளிய மூட்டை கூட தூக்கப் போறேன். ஆனா இந்த வேலை வேண்டாம்."

-ராஜேஸ்வரியிடம் இப்போது மெலிதான சிரிப்பு. "என்னம்மா சிரிக்கிற...?"

"சிரிக்காம என்ன பண்ண... அப்பா மாதிரியே பிள்ளை..."

"என்னம்மா சொல்றே?"

"ஆமாம்ப்பா... உங்கப்பாகூட இந்த வேலைல சேர்ந்த முதல்நாள் இதே பல்லவியதான் பாடினார். மகன் நீயும் அப்படியே..."

"புரியும்படி சொல்லும்மா..."

"தம்பி... ஒண்ணு நல்லா ஞாபகத்துல வை. எல்லா புது இடமும் உலகத்துல இப்படித்தான்பா இருக்கும்."

"எப்படினு தெரியாம பேசாதே..."

"தெரியும். நீ சாப்பிடு, நான் சொல்றேன்..."

"என்ன தெரியும்... சொல்லு..."

"தோ பார் கண்ணா... இந்த உலகத்துல கஷ்டமான விஷயமே உறவு முறைகளை பராமரிச்சு கையாளுறது தாம்ப்பா. அதுலயும் மேலயும் இல்லாமே கீழேயும் இல்லாம நடுவாந்தரத்துல இருக்கிற ஜாதி தொழிலாளர் ஜாதி. அதோட நல்ல விதமா பழகி கரை சேர்றது கொஞ்சம் கஷ்டமான விஷயமாத்தான் இருக்கும்.

நீ வேணா பாரு. எந்த வேலையை நீ வேண்டாம்னு சொல்றியோ அந்த வேலைலதான் நீ பெரிய ஞானியா ஆவப்போற. இந்த வேலை... இந்த மனுஷங்க மாதிரி உலகத்துலேயே கிடையாதுன்னு சொல்லப் போறே..."

ராஜேஸ்வரி எந்த நம்பிக்கையில் இப்படி சொல்கிறாள் என்பது கண்ணனுக்கு தெரியவில்லை. ஆனால், அதற்குமேல் அவள் கூடுதலாக உபதேசம் என்ற பெயரில் எதையும் கூறவில்லை. ஆனால் படுக்கப் போகுமுன் மறவாமல் மணவாளன் போட்டோ முன் நின்று ஒரு பார்வை பார்க்கிறாள். மணவாளன் அடிக்கடி சொல்லும் ஒரு அபிப்ராயம் காதில் ஒலிக்கத் தொடங்குகிறது.

"ராஜேஸ்வரி... வியர்வை சிந்த உண்மையா உழைச்சிட்டு பழைய சோத்தை தின்னாகூட அது அமிர்தமா இருக்கு. உழைச்சுதான் பிழைக்கறோம், யாரையும் ஏமாத்தலைங்கற எண்ணமே பெரிய தெம்பையும் கர்வத்தையும் தருது.

அதோட ஒரு பெரிய தொழிலாளர் கூட்டத்துக்கு நடுவுல வேலை பார்க்க நிஜமா கொடுத்து வெச்சுருக்கணும் ராஜேஸ்வரி! விதம் விதமான மனுஷங்க - குணங்க இவங்களுக்கு நடுவுல ரொம்ப பக்குவப்பட்டுடிச்சு ஜில்லுன்னு காத்து வீசினா அது கூட விலைமதிப்பில்ல சுகமா இருக்கு.

ஆனா பத்தாயிரம் இருபதாயிரம்னு சம்பாதிக்கறவங் களுக்கு இந்த அனுபவமோ வாய்ப்போ துளிகூட இல்லை ஒரு சாதாரண காய்ச்சலுக்கு கூட அவன் மிரள்ற மிரளலை பார்த்தா அவனுக்குத்தான் இந்த வாழ்க்கை மேல எவ்வளவு பயம்?'' - அந்த கருத்தின் நியாயத்தை ஒப்புக் கொள்ள முடிந்த மாதிரி மகனை பார்க்கிறாள். அவனிடமோ அம்மா போட்ட புதிர் புரியாத நிலை...

5

ஒரு மாதம் ஓடிவிட்டது.

கண்ணன் இப்போது புதியவனில்லை. ஓரளவு யா எப்படி என்பது தெரிந்த மாதிரி தெரிகிறது.

சொல்லால் கடித்தவர்களுக்கு அதுமட்டுமே தெரியு என்பதிலிருந்து பலரைப்பற்றியும் இப்போது ஓரள எடைபோட முடிகிறது.

வேகமாக வேலையிலும் இலயிக்க முடிந்து அதிலு திறமையைக் காட்டத் தொடங்கிவிட்டதால் ரங்கபாஷ்ய திடம் இவன் வரையில் அத்தனை கொதிநிலை இல்லை. இடைவெளி குறைந்த மாதிரி தெரிகிறது.

முதுகுக்கு பின்னால் பூடகமாகவே பேசுகின்றவர்க இப்போது நேராகவே உரித்துப் பேசும்நிலை.

''கண்ணா எப்படி இருக்கு வேலைல்லாம்...?''

''இருக்கு...''

''இருக்குன்னா... இந்த வேலைக்கு கே.ஆர். இண்டஸ்ட்ரில எட்டாயிரம் சம்பளம் தெரியுமா?''

''அது எப்படி?''

''அந்த முதலாளிக்கு பெரிய மனசு...''

''ஆமா நம்ம முதலாளி எப்படி?''

''முதலாளி நல்லவருதான். ஆனா இந்த நடுவுல இருக்கறவங்கதான் திருட்டுப் பசங்க...''

''நடுவுலன்னா...''

''அதான் மேனேஜர், ஜெனரல் மானேஜர்னு ஒரு கூட்டம் இருக்கே...''

''அவங்களுக்கென்ன...?''

''அவங்களுக்கென்ன? அவ்வளவு பேரும் எமகாதகங்க. நீ போகப் போக புரிஞ்சுக்குவே...''

கண்ணனுக்கு சலிப்பாக இருந்தது. முன்பைவிட இப்பொழுது ஸ்னேகமாக பேசுகிறார்கள். ஆனால் பேச்சின் பொருளில் மட்டும் மாற்றமேயில்லை.

எப்பொழுதும் ஏதாவது ஒரு குற்றச்சாட்டு.

ஆனால் தொழில்பற்றி - அதன் நுட்பம் பற்றி ஒரு சின்ன விவாதத்தைகூட யாரிடமும் பார்க்கமுடியவில்லை.

இதற்கு நடுவிலும் எந்திரங்கள் ஓடி உற்பத்தியும் நடந்து தொழிற்சாலையும் நடந்து கொண்டிருக்கிறது. இப்படி கூலிக்கு மாறடிக்கும்போதே துளி லாபத்தையும் பார்த்தபடி இருக்கிறதே...

-இதே ஈடுபாட்டோடு எல்லாரும் செயல்பட்டால்?

கிட்டத்தட்ட இதே அபிப்பிராயத்தோடு அந்த தொழிற்சாலையில் பார்த்திபனும் இருந்தான். கண்ணனுக்கு அவனோடு பேசும்போது மட்டும் சற்று இதமாக இருந்தது. பார்த்திபனுக்கு பிறரைப் போல பேசும் மிமிக்ரியும் கைவந்த வலை. இப்படிப்பட்ட ஆற்றலோடு பார்த்திபன் வேலைக்கு நடுவிலும் படிப்பதாகச் சொன்னான்.

தபால்வழி கல்வி.

கூடியவரை ஒருவர் இல்லாதபோது அவர்களைப் பற்றி பேசுவதும் கிடையாது. அதேசயமம் அவனது தெளிவிலும் பேச்சிலும்கூட ஒருவகை அசாத்ய நுட்பம்.

-வேலை பார்க்கும் அவனது பணிப்பகுதிகூட மிக சுத்தமாக.

''நீ இப்படி இருக்கறதுனால உனக்கு ஒண்ணும் கம்பெனில மெடல் கொடுத்திடப் போறது கிடையாது...'' என்று சிலர் பரிகாசம் செய்தபோது அதை சின்ன புன்னகையோடு தட்டிவிட்டவன்.

''நான் மெடலுக்காக நீட்டா இருக்கிறவன் கிடையாது - நீட்டா இருக்கிறது என் உணர்வு. பசி தாகம்மாதிரி...'' என்ற அவன் பதில் கண்ணனை கவர்ந்ததோ என்னவோ... போய் கைகுலுக்கி பாராட்டி நட்பை துவக்கிக் கொண்டான்.

இப்போது கண்ணனுக்கு பார்த்திபன்தான் சுமைதாங்கி. வடிவில் எல்லாமே...

இனம் இனத்தோடு சேரும் என்பது இதுதானோ? இருவரும் சேர்ந்து கம்பெனியின் ஆலோசனை

திட்டத்திற்கும் நிறைய எழுதிப்போட ஆரம்பித்து விட்டார்கள்.

சின்ன சின்ன ஆலோசனை முதல் பெரிய ஆலோசனைவரை சகலத்திற்கும் ஊக்கத்தொகை உண்டு. ஏன் விடவேண்டும்? என்பதுதான் இருவரின் கேள்வியும்.

இது யாரை உறுத்தியதோ தெரியவில்லை.

கண்ணனை ஒருவன் நெருங்குகிறான்.

''கண்ணா கொஞ்சம் என்கூட வா... உன்கிட்ட முக்கியமான விஷயம் பேசணும்'' என்று தனியே அழைத்துச் செல்கிறான்.

''என்னப்பா...''

''என்ன நீ... ஆலோசனை அது இதுன்னு எழுதி போட்டுகிட்டு வேற டைரக்ஷன்ல போய்கிட்டு இருக்கே நீ...''

''வேற டைரக்ஷனா?''

''பின்ன... இது உன் அப்பாவைக் கொன்ன கம்பெனி.''

''....''

''என்ன வாயை மூடிட்டே... உன் அப்பா சாகும் போது சொல்லலையா?''

''இல்லையே...''

''அப்படியா... அவர் எப்பவும் பெரிய மனுஷன். அதான் சொல்லலை. அதோ நிக்கறான் பார் வில்லியம்...''

''தெரியும்... அவர்தான் எங்கப்பாவை ஆசிட் டேங்க்ல தள்ளிவிட்டு கொன்னுட்டாரு. இதுதானே சொல்லப் போறே?!

'ஆமாம், உனக்கு கோபம் வரலை. ரத்தம் கொதிக்கலை?''

"இல்லை..."

"இல்லையா... என்ன சொல்றே கண்ணா."

"இல்லை... இல்லை... தமிழ்லதானே சொன்னேன். போய் வேலையைப் பாரு. அடுத்தவங்கள ஏத்திவிட்றத இன்னியோட விடு."

அவன் சுருதி இறங்கி என்னவோ போல் ஆகி திரும்பி நடக்கிறான். போகும்போது திரும்பித் திரும்பித் பார்க்கிறான். பார்த்திபன் வந்து தோளில் கை போட்டபடி கேட்கிறான்.

"என்ன கண்ணா... எங்க வந்துட்டு போறான் சுலைமான்..."

"அவன் பேர் சுலைமானா?"

"ஆமாம்... பேர் சுலைமான். ஆனா நாங்க வெச்சுருக்கற பேர் சகுனி."

"ஓரளவு பொருத்தமான பேர்தான்... ஒரு ஃபேக்டரினா இப்படி நாலுபேர் இருந்துதான் தீரணுமா பார்த்தி...?"

"ஃபேக்டரில மட்டுமில்லை கண்ணா... நாம வசிக்கிற தெருவுல ஊர்ல நாட்ல உலகத்துலன்னு இப்படி நிறைய பேர் இருக்காங்க. இவங்கள்ளாம் ரெட் சிக்னல்ஸ் ஸ்பீட் பிரேக்கர்ஸ். நாம ஜாக்கிரதையா இருக்கோமா இல்லையாங்கறத தெரிஞ்சுக்க உதவற டெஸ்ட் ட்யூபுகள் இவங்க..."

பார்த்திபனின் பொருத்தமான விளக்கத்துடன் அன்றைய ஷிப்ட் முடிந்துவிடுகிறது. ஆனாலும் அப்பாவைக் கொன்றவன் அப்பாவை கொன்றவன் என்று எல்லாரும் சொல்லுவதிலும் உண்மை இருக்குமோ?

எழவேண்டிய கேள்வி எழுகிறது.

6

ஃபேக்டரி.

பர்சனல் மேனேஜர் அறைக்குள் நுழைகிறான் கண்ணன்.

"குட்மார்னிங் சார்..."

"வா கண்ணன்." வெங்கி அழைப்போடு நிமிர்ந்து அமருகிறான்.

"எங்கப்பா இவ்ள தூரம்?"

"ஒண்ணுமில்ல சார். பர்சனல் மேனஜரை பார்க்கலாம்னு..."

"என்ன விஷயம் சும்மா என்கிட்ட சொல்லு..."

"அது வந்து... அது வந்து..."

"மெல்லாத சும்மா சொல்லு. என்ன உன் பாஸ் ஏதாவது அடிச்சானா? எனக்கு தெரியும். புதுசா ஒருத்தனை அவன் உள்ள நீடிக்க விடமாட்டான். எழுதிக் கொடுத்து ஓடிடலாமான்னு இருக்கா."

-வெங்கி படபடவென்று தன் பாணியில் பேசுவது ஒரு மெல்லிய எரிச்சலைத் தருகிறது கண்ணனுக்கு. மௌனத்தை தொடருகிறான். வெங்கிக்கு எதற்காக இத்தனை பெரிய ஓட்டைவாய்!

என்ன சொல்லமாட்டியா? சேர்ந்து ஒரு மாசமாகலை. அதுக்குள்ள மேனேஜர்கிட்ட ரகசியம் பேசணுமா... சும்மா சொல்லுப்பா..."

"இல்ல சார். இது கொஞ்சம் சென்சிடிவான விஷயம்..."

"பரவால்ல சொல்லு..."

"ப்ளீஸ் சார் நான் அவர்கிட்டேயே பேசிக்கிறேனே..."

"பார்த்தியா... என்னை ஓரம் கட்றியா. ஒண்ணு தெரிஞ்சுக்க. நீ அவர்கிட்ட என்ன பேசினாலும் அ எனக்கு பின்னாடி தெரிஞ்சிடும், சார் என்கிட்ட எதை மறைக்க மாட்டார். அது நீ தெரிஞ்சுக்கோ.

வெங்கிக்கு நிறைய ஆர்வக்கோளாறு இருப்பு நன்றாகவே தெரிகிறது. அதான் எம்.பி.ஏ. முடிந்திருந்து ஒரு க்ளார்க் சீட்டில் மேலேற மாட்டாமல் இருக்கிறானே

கண்ணன் கச்சிதமாக புரிந்து கொள்கிறான். ஒ வழியாக பர்சனல் மேனேஜர் கிருஷ்ணராஜ் முன் போ நிற்கிறான்.

"வாங்க கண்ணன். உக்காருங்க."

"தேங்க்யூ சார்..."

"எப்படி இருக்கு வேலைல்லாம்... பார்த்திபன் தா ரொம்ப க்ளோஸ் ஃப்ரண்டோ...?"

கண்ணனுக்கு ஆச்சரியமாகிறது. பரவாயில்லையே.

கண்ணாடி அறைக்குள் அடைந்து கிடப்பவருக்கு நால விஷயங்களும் தெரிந்திருக்கிறதே... அதுதானே தொழி சாதுர்யம் என்று அவரும் சிரிக்கிறார்.

"ஆமாம் சார்..."

"குட். பார்த்தி ஒரு பாசிடிவ் திங்கர். மிமிக்ரியெல்லாம் பண்ணுவார். நல்லா பழகுவாரு."

"ஆமாம் சார்... அவர் மட்டும் இல்லேன்னா நான் நிச்சயமா ரொம்ப கஷ்டப்பட்டிருப்பேன்..."

-கிருஷ்ணராஜ் சிரிக்கிறார்.

"லைஃப்ல பல நேரங்கள்ள வேலையை விட வேலை பார்க்கற சூழ்நிலை கஷ்டமானதா இருக்கும். இது தவிர்க்க முடியாத விஷயம் ஓ.கே... என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லை சார்... வந்ததுல இருந்தே ஒரு கேள்வி என் மனசை பிராண்டிகிட்டே இருக்கு."

"உங்க அப்பா சாவு பத்திதானே?" கச்சிதமாக நறுக்குகிறார் கிருஷ்ணராஜ்.

"சாரார்..."

"எக்ஸைட் ஆவாதீங்க கண்ணன். எப்பவுமே இன்டஸ்ட்ரீஸ்ல எந்த ஒரு விஷயமுமே கூட்டல் கழித்தல் வகுத்தலுக்கு உள்ளாகிதான் திரியும். புரியலையா...?"

"புரியுது சார்... நான் கேள்விப்பட்டது உண்மை இல்லையே..."

"சாரி கண்ணன். உண்மை இல்லைன்னுதான் நானும் நினைக்கறேன்."

"நினைக்கறீங்களா... உங்க பதில்ல ஒரு சந்தேகமும் ஒட்டிகிட்டிருக்கே..."

"அப்படியெல்லாம் இல்லை... உங்கப்பா ஆசிட். டாங்க்ல விழுந்தப்ப மிஸ்டர் வில்லியம்ஸ்தான் இருந்துருக்கார். வேற யாருமே இல்லை. அவர் சொல்றாரு இட் ஈஸ் எ ஆக்சிடெண்ட்டுங்கற மாதிரிதான் வாக்கு மூலம் கொடுத்துருக்காரு."

"டேங்க்ல விழுந்ததுக்கு பிறகு அப்பாவால பேசவே முடியலையே சார். எப்படி வாக்குமூலம் கொடுத்தாருன்னு சொல்ல வர்றீங்க...?"

"வாயால சொன்னாதானா? என்னால உணர்ச்சிகளை புரிஞ்சுக்க முடியும் கண்ணன். அதை வெச்சு சொல்றேன். ஆமா இப்ப எதுக்கு இந்த குழப்பங்கள்ளாம்... வேண்டாம் விட்றுங்க..."

கண்ணன் நீண்ட நேரம் மௌனிக்கிறான். அந்த மௌனம் அவரை சற்று பிசைகிறது.

"புரியுது கண்ணன். ஒரு கொலைங்கறது ஒண்ணு சாதாரண விஷயமில்லை. ஆனா நிச்சயமா சொல்றேன் ஒரு கொலை செய்தாகணும்கற கட்டாயமோ நிர்ப்பந்தமோ இந்த நிறுவனத்துக்கு கிடையாது. உங்கப்பாவும் கடைசிவரை எங்களோட ஸ்னேகமா இருந்தவர்."

"இருக்கலாம் சார்... வில்லியம்ஸ் தன்னோட ரிஸ்க்கு இப்படி..."

"நிச்சயம் இல்லை. வில்லியம்ஸ் ஒரு கடுமையான மனிதர் லேபர்களுக்கு எப்பவும் அனுசரணையானவர் களைத்தான் பிடிக்கும். கடுமையான மனிதர்களை அவங்க வெறுப்பாங்க... இந்த அளவு விளக்கம் போதும்னு நினைக்கறேன். இனி இதைப் பற்றி நீங்க யோசிக்கறது உங்களுக்கு நல்லது கிடையாது.

ஐ.மீன் தேவையில்லாம நிம்மதியைக் கெடுத்து காதீங்கன்னு சொல்ல வர்றேன். போய் வேலையைப் பாருங்க..."

-கிருஷ்ணராஜ் மனிதராக பேசத் தொடங்கி அதிகாரியாக பேசி முடிக்கிறார். இனி பேசினால் அது இயல்பானதாக இருக்காது.

இருந்தாலும் ஒரு விஷயம் கண்ணன் மனதில் உறுதி படத் தங்குகிறது. அப்பாவின் சாவில் நிச்சயம் ஏதோ மர்மம் இருக்கிறது!

7

மனதில் குழப்பம் கூடு கட்டத் தொடங்கிவிட்டாலே செயலில் அது தெரியுமோ? கண்ணனால் கடந்த நாட்களைப் போல கான்சண்ட்ரேஷனோடு வேலை பார்க்க முடியவில்லை. வேலையில் தடுமாற்றம் நன்றாகவே தெரிகிறது.

"என்ன கண்ணா... எப்பவும் மிலிட்ரி மாதிரி விறைப்பா இருப்பே என்னாச்சு, இன்னிக்கு சொங்கி அடிக்கிறே...?" சகா ஒருவன் கேட்கிறான்.

"அதெல்லாம் ஒண்ணுமில்லியே... ஒண்ணுமில்லை ஒண்ணுமில்லை... கோர்ட் போல மூன்று தடவை சொல்லி சமாளிக்கிறான்.

"அப்ப நிறைய இருக்கு... என்ன விஷயம்?"

"....."

"தா... பேசுப்பா பேசுனாதானே வழி கிடைக்கும்." சகா சொல்வதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது.

"பேசிவிடுவோமோ!, கேள்வியை கண்களில் நிரப்பிக் கொண்டு பார்க்கிறான்.

நடுவில் டீ வந்ததால் டீயை சூப்பும் ரிலாக்ஸோடு இன்னும் சிலர் கண்ணனை வளைக்கின்றனர்.

"என்னான்னு சொல்லமாட்டேங்கறான்பா இந்த கண்ணன் எதையோ மனசுல வெச்சுகிட்டு குமைஞ்சு கிட்டிருக்கான்..."

"என்ன கண்ணா, நம்ம மேனேஜர் தாண்டவராயன் ஏதாவது கடிச்சானா?"

"டேய்... தாண்டவன் நம்ப கண்ணனுக்கு இப்ப நல்ல தோஸ்த்துப்பா. விஷயம் வேற"

"சும்மா சொல்லு... சிம்ரன் நக்மான்னு எவளையாவது லவ் பண்றியா? தைரியமா சொல்லு... போய் பேசி முடிச்சிடுவோம்."

"டேய் நக்மா என் ஆளு... வேணும்னா சௌந்தர்யா இஷான்னு புதுச்சரக்கை பார்க்கச் சொல்லு..." உலக ஜோக் சொல்லிவிட்டதாக சொல்லி அவன் சிரிக்க எல்லாரும் சிரிக்கின்றனர்.

எதற்கும் கண்ணன் அசைந்து கொடுக்கவில்லை.

திடீரென்று கூட்டத்தில் ஒரு சலசலப்பு.

"டேய் நோட்டீஸ் போர்டுல யூனியன் எலெக்ஷன் பத்தி போட்ருக்காங்கடா. நம்ம மணவாளன் இடத்துக்குத்தான் எலெக்ஷனே..."

....பேச்சு தடம்மாறி எலெக்ஷனில் சென்று சிக்கிக் கொள்கிறது.

"யாருடா நிக்கப்போறது...?"

"எவன் நின்னாலும் சரி, நான் ஓட்டுப் போடப் போறதில்ல. எல்லாருமே திருட்டுப் பசங்க."

"ராஜசேகர் எப்படியும் தான் வந்தே தீரணும்னு ஆசையா இருக்கான் போல..."

-பலரும் பல விதமாகப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். ஒருவன் மட்டும் கண்ணன் காதை சற்று கனிவாக கடிக்கிறான்.

"கண்ணா எனக்கொரு உதவி செய்வியா?"

"என்ன?"

"ஈவினிங் காலேஜ்ல படிக்க சீட் கிடைச்சிருக்கு பி.ஈ! ஆனா ஷிப்ட் பெரிய தடையா இருக்கு. எனக்கு பதிலா ஈவினிங் டூட்டியை நீ பார்த்தா நான் ஒரு மாதிரி சமாளிச்சிடுவேன்."

"அதுக்கென்ன... என்னாலதான் படிக்க முடியலை. உனக்கு உதவி செய்யறதுனால உன்னால படிக்கமுடியும்னா அது எனக்கு ரொம்ப சந்தோஷம்."

"ரொம்ப தேங்க்ஸ் கண்ணா. எங்க முடியாதுன்னு சொல்லிடுவியோன்னு நினைச்சேன். பத்து வருஷமா படிக்க பர்மிஷன் கேட்டேன். இந்த வருஷம்தான் கிடைச்சது. எங்க ஷிப்ட் இடைஞ்சலாயிடுமோன்னு பயந்தேன். காப்பாத்திட்டே..."

-கண்ணன் அதை கேட்டு தட்டித் தருகிறான்.

"ஆமாம் நீ ஏன் உன் அப்பா இடத்துக்கு வரக் கூடாது...?"

"யூ மீன் யூனியன் எலெக்ஷனை சொல்றியா?"

"ஆமாம்... உதவி செய்றதுன்னா என்னன்னே தெரியாதவன்லாம் நிக்க ஆசைப்படலாம். நீ நிக்கக் கூடாதா? உன் அப்பா இடத்துக்கு நீ தான் வர பொருத்தமானவன்..."

"ஐயய்யோ! நான் வேலைல சேர்ந்து இப்பதான் முதல் மாசம் ஆகியிருக்கு. எதுக்கு இந்த பொறுப்பெல்லாம். எவ்வளவோ சர்வீஸ் ஆனவங்கல்லாம் இருக்கச்சே?"

"இந்த ஒரு பொறுப்புக்கு மட்டும் கம்பெனி சர்வீஸ் கணக்கு கிடையாது கண்ணா. சோஷியல் சர்வீஸ்தான் கணக்கு... டேய் நம்ம கண்ணனை நாம நிறுத்துவோம். என்ன சொல்றீங்க...!"- பேசிக்கொண்டே கூட்டத்தின்

பக்கம் திரும்பி கேள்வியும் கேட்க மொத்த கூட்டமு
ஆமோதிப்பதாக பார்க்கிறது.

''கண்ணன்தான் சரியான ஆள். அப்பா இடத்துல
மகன். பொறுப்புக்கு வந்தாதான் அந்த வில்லியம்
கொலைகாரன் கண்ணுலையும் விரலை விட்டு ஆட்
முடியும்.''

-பேச்சு அங்கு தொட்டு இங்கு தொட்டு வில்லியம்ஸ்
முடிகிறது. அது கண்ணனையும் என்னவோ செய்கிறது.

மனதை உறுத்திக்கொண்டே இருக்கும் வில்லியம்
விஷயத்திற்கு இதனால் ஒரு விடை கிடைக்குமோ?

வீடு திரும்பி நடந்ததை எல்லாம் அம்மாவிடம் சொல்
அது எலெக்ஷனில் போய் நின்றதைக் கூறவும் அவளிட
சின்ன பதற்றம் தலை தூக்குகிறது.

''முதல்ல வேலையே பிடிக்கலைன்னே... இப்ப வேல
பாக்கற நபர்களுக்கெல்லாம் தலைவனாவே ஆக
போறேன்கறே. இதெல்லாம் சரிப்பட்டு வராது கண்ணா...

''சாப்பாடு போட்டுக் கொண்டே சொல்கிறாள் அம்ம
தெரியும்மா... நம்ம அப்பா சாவு சம்பந்தமா பர்சன
மேனேஜர்கிட்ட பேசினேன். சரியான பதில் சொல்லல
கூட வேலை பார்க்கறவங்கல்லாம் வில்லியம்
வில்லியம்ஸ்னு அந்த ஆளைத்தான் சொல்றாங்க. எனக்
என்ன நடந்ததுன்னு உண்மை தெரியணும் அதான்...''

''யூனியன்ல வந்துட்டா உண்மை தெரிஞ்சிடுமா?''

''ஒரு பதவி கைல இருந்தா சில விஷயங்களையும்
விசாரணைகளையும் வேகமா செய்யமுடியும்
தானேம்மா...''

''செஞ்சு...?''

''என்னம்மா இப்படி கேக்கறே... நான் வேலைக்குப்
போனதே உண்மையைக் கண்டுபிடிக்கத்தானே?''

''அப்ப குடும்பத்தைக் காப்பாத்த இல்லையா?''

''குடும்பத்தைக் காப்பாத்த ஆயிரம் வழி இருக்கும்மா...
என் எஞ்சினியரிங் படிப்பு போனாலும் பரவாயில்லைன்னு
நான் அந்த சாதாரண வேலைக்கு ஒத்துக் கிட்டது
இயலாமையால நிச்சயம் இல்லம்மா...''

''தெரியும்பா... இருந்தாலும் உண்மை தெரியறதால
அப்பா உசுரோட வந்துடப் போறாரா?''

''அப்பா வரப்போறதில்ல... ஆனா இன்னொரு
அப்பாவிக்கு இப்படி ஆகாம தடுக்கலாம் இல்லையா?''

''அப்ப... உன் அப்பா திட்டமிட்டு கொலை செய்யப்
பட்டார்ன்னு சொல்றியா?''

''நிச்சயமா. எதுவும் பேசாம ரொம்ப பயந்த புள்ளையா
கம்பெனியில் நான் நடந்துகிட்டதால எனக்கு எவ்வளவோ
விஷயம் தெரிய வந்துருக்கும்மா...''

''என்னடா சொல்றே?''

''ஆமாம்மா... கம்பெனிக்குள்ள கம்பெனி நடத்தறாங்
கம்மா. முதலாளி வெளிநாட்டுல இருக்கறதால தட்டிக்
கேட்க ஆள் இல்லை.

சில நல்ல அதிகாரிகள். ஆனாபல கெட்ட அதிகாரிகள்!''

''நிஜமாவா?''

''ஆமாம்மா... பாவம்மா தொழிலாளிங்க. அவங்களை
சராசரியாகவே வெச்சுகிட்டு பெரிய பெரிய தப்பெல்லாம்
நடக்குதும்மா... எவ்வளவு ஊழல் தெரியுமா?''

''முதல் முறையாக அவனது தாய்க்காரி மகனை பிரமிப்போடு பார்க்கிறாள்.

''என்கிட்ட அன்னிக்கு அவ்வளவு புலம்பினியே கண்ணா. என்கிட்டேயுமா நடிச்சே?''

''அது நடிப்பில்லேம்மா உண்மை...''

''ஒரு மாசத்துல எப்படிடா இவ்வளவு மனமாற்றம்?''

''பொறும்மா... வேளை வரும், தெரிஞ்சிப்பே நீ!''

''பயமா இருக்கு கண்ணா... நீயும் போயிடாதே...''

''சேச்சே! என்னம்மா பேசற... வாயைமூடு... ஆசீர்வாதம் பண்ணும்மா...''

....விழிநீர் துளிர்க்க ஆசீர்வதிக்கிறாள். கண்ணன் நெகிழத் தொடங்குகிறான்.

ஹர்க் ஷாப்!

கசகசவென்று இருக்கிறது. சித்திரை வெயிலின் தாக்கம். ஏ.சி. அறைக்குள்ளிருந்து கொண்டு ரங்கபாஷ்யம் நோட்டமிட்டுக் கொண்டிருக்கிறார்.

பலருக்கு நின்று வேலை பார்க்கவே பிடிக்கவில்லை. உடம்பெல்லாம் பற்றி எரிந்து வியர்க்கும்போது வேலை ஓடுமா என்ன? இருக்கும் ஃபேனும் அனல் காற்றைதான் வாரி இறைக்கிறது.

எரிச்சல் சிலரை டாய்லெட்டுக்கு அனுப்புகிறது.

எந்திரங்களை நிறுத்திவிட்டு டாய்லெட்டுக்கு போய் பச்சைத் தண்ணீரை மொண்டு மேனிமேல் கொட்டிக் கொள்கின்றனர். அப்படியே சிகரெட்டுக்கு தாவுகின்றனர்.

''நேத்து வந்த மணவாளன் மகன் யூனியன் எலெக்ஷனில் நிக்கப் போறானாம்ல...'' சிகரெட்டை ஊதும் போது வம்பும் புகை போலவே பரவ ஆரம்பிக்கிறது.

''ஏன் நின்னா என்ன?''

''நிக்கலாம்... உக்காரலாம்... யார் என்ன சொல்லிட முடியும்? ஆனா எவ்வளவோ சீனியர்ங்க இருக்கும்போது நேத்து வந்தவனை தூக்கி நிறுத்தறது நல்லாவா இருக்கு?'' ஒரு சூப்பர் வைசர் நைச்சியமாக பற்ற வைக்கிறான்.

''என்ன பண்ணலாம்கறே...?''

''நேத்து வந்த நண்பனைவிட சீனியர் எதிரி ஆயிரம் மடங்கு மேலுங்கறேன். நம்ம பெருமாளை நிறுத்து வோமே...''

''செகரட்ரிங்கறவனுக்கு கேரக்டர் தாம்ப்பா முக்கியம், சீனியர், ஜுனியர்ங்கற விஷயங்கள் இல்லை.''

''கேரக்டர் முக்கியம்னு முதலாளி சொல்லலாம். நாம சொல்லக்கூடாது. பாக்க சுத்தமான கையா தெரியறான். நம்ம கமிஷன் டைப்புக்கு ஒத்துவருவான்னு தோணலை, பெருமாள்தான் நமக்கெல்லாம் சரி...''

''ஆமாம்ப்பா... மணவாளன் மாதிரிதான் அவன் மகனும் இருப்பான். வில்லியம்ஸ் விவகாரத்தை மணவாளன் பார்த்துட்டதாலதானே?''

-ஏதோ ஒரு உண்மையை நாக்கு நுனிவரை கொண்டு வந்து விட்டு எது தடுத்ததோ தெரியவில்லை அப்படியே பின்வாங்குகிறான் அவன்.

''டேய்... கை நீட்டி காசு வாங்கியிருக்கே. இருந்தும் உனக்கு அறிவில்ல பார். நல்லவேளை. உளறத் தெரிஞ்சே...''

-அடுத்தவன் அவனை கண்டிக்கிறான். கச்சிதமாக பக்கத்து டாய்லெட் கதவு திறக்கிறது உள்ளிருந்து வெளியே வருகிறான் கண்ணன்.

அவனை பார்க்கவும் சப்த நாடிகளும் அவர்களிடம் நொறுக்கிப் போகின்றது. மளமளவென்று ஒருவன் சிகரெட்டை தரையில் போட்டு தேய்த்துவிட்டு "அப்புறம் பாக்கறேன் மாப்ளை..." என்று ஒரு பக்கமாக ஓட அடுத்தவன் "இரு நானும் வந்துட்றேன்..." என்று நழுவ பார்க்க கண்ணன் கை காட்டியபடி அவர்கள் முன் நிமிருகிறான்.

அநாவசியமாக உணர்ச்சிவசப்பட்டு எந்த ஒரு வார்த்தையையும் வீணாக்காமல் பார்வையாலேயே அனைவரையும் பார்க்கிறான்.

"என்ன கண்ணா எலெக்ஷன்ல நிக்கறா போல இருக்கு..."

"உனக்குத்தான் என் ஓட்டு... கவலைப்படாதே" தோளில் தட்டிக் கொடுத்து அப்படியே நழுவ பார்க்கிறான்.

கண்ணனுக்கு அவர்களை எல்லாம் பார்க்கப் பார்க்க கோவம் கண்சிவக்க முண்டுகிறது. எவ்வளவு நேரம்தான் இப்படி பார்த்துக் கொண்டே நிற்பதாம்.

"யாருடாது காசு வாங்கினவன்?"

-கண்ணனின் கேள்வி சகலரையும் அங்க இருந்தே ஓட வைக்கிறது.

"நில்லுங்கடா. நில்லுங்கடா." கத்துகிறான், பலனில்லை

8

ஸைக்கிள் ஸ்டாண்டில் இருந்து சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பும் போது எதிரில் பார்த்திபன்.

"என்ன கண்ணா சீக்கிரம் கிளம்பிட்டே..."

"மனசே சரியில்லை பார்த்திபா..."

"வா ஒரு கேம் கேரம் விளையாடிட்டு போகலாம்..."

"இல்ல பார்த்தி... நான் வரலை!"

"அட வாப்பான்னா..." பார்த்தியே முன்வந்து சைக்கிளை இழுத்து ஸ்டாண்ட் போட்டு நிறுத்த, கண்ணன் அரை மனதாக அவனை தொடர ஆரம்பிக்கிறான்.

"என்ன விஷயம்... எதனால மனசு சரியில்லை.."

"எல்லாம் அப்பா விஷயமாத்தான்..."

"ஏன் திரும்ப யாராவது அவர் கொலை செய்யப் பட்டார்னு சொன்னாங்களா..."

"அப்படி சொல்றதுதான் ஆரம்பத்துல இருந்தே இருக்கே. இப்ப வேற விதமா கேள்விப்பட்டேன்..."

"எப்படி?"

"காசு வாங்கிட்டு காட்டிக்கொடுக்க பார்த்தியே டான்னு ஒருத்தன் இன்னொருத்தனை திட்டினான்..."

'நிஜமாவா..."

காதாலா கேட்டேன் பார்த்தி. நான்கூட அப்பா சாவு வெறும் விபத்தா இருந்துடக் கூடாதான்னு பலதடவை நினச்சிருக்கேன். ஆனா இன்னிக்கு கேள்விப்பட்ட விஷயத்துல இருந்து ஒருவிஷயம் ஊர்ஜிதமா போச்சு.

அப்பா சாவு விபத்தல்ல. அது நிச்சயமா கொலை தான்." கண்ணனின் விளக்கம் பார்த்திபனை அதிகபட்சம் யோசிக்க செய்கிறது. மோவாய் கட்டை தேய யோசித்தவன் கண்ணனை திரும்பவும் நிமிண்டுகிறான்.

"ஆமாம். அந்த கமிஷன் பார்ட்டி யார்ன்னு தெரியுமா?"

"பெயிண்டிங் செக்ஷன் பெருமாள்னு நினைக்கிறேன்."

"அவனா... அவன் வில்லியமுக்கு எப்பவுமே ஜால்ரா. வா. அவனைப் பிடிப்போம். ஏன் அவனை விட்டே?"

"எங்கப்பா கூப்பிடக் கூப்பிட ஓடியே போயிட்டான். இருந்தும் விடாம டிபார்ட்மெண்ட்டுக்கு போனேன். லீவு போட்டுட்டு போயிட்டதா சொன்னாங்க..."

"அப்ப சந்தேகமேயில்லை... அந்த நாய்க்கு எல்லாம் தெரிஞ்சிருக்கு. விடக்கூடாது அவனை வா. அவன் வீடு தெரியும் எனக்கு... போய் பிடிப்போம்..."

-இருவரும் சைக்கிள் ஸ்டாண்ட் அருகில் நின்று நெடுநேரம் பேசிவிட்டு பின் கிளம்புவதை தொலைவில் இருவிழிகள் பார்த்துக் கொண்டே நிற்கின்றது!

அம்பர் தெரு!

எருமை மாட்டுக்கூட்டம் தெருவையே அடைத்துக் கொண்டு நிற்கிறது. மீதி இடங்களில் பிச்சைக்காரர்கள் படுத்துக் கிடக்கிறார்கள். ஈக்கள் சொர்க்கலோக வாசி போல பறந்து திரிந்து கொண்டிருக்க மூக்கைப் பிடித்துக் கொண்டு தெருவுக்குள் நுழைய வேண்டும் போல் உள்ளது. பார்த்திபனும் கண்ணனும் நுழைகின்றார்கள்.

பனிரெண்டாம் நம்பர் வீடு வீட்டு முன் முருங்கை மரம் இருக்கும் என்கிற அடையாளங்களை கச்சிதமாக கண்டறிந்து திறந்து கிடக்கும் கதவுக்கு முன்னால் போய் நிற்கிறார்கள்.

நிலை கால் வாசல் தாண்டி ஒருத்தி அரிசியில் கல் பொறுக்கி கொண்டிருக்கிறாள். நிமிர்கிறாள்.

"யார் நீங்க... என்ன வேணும்?" கேட்கிறாள்.

"பெருமாளை பார்க்க வந்தோம்...."

"உள்ள வாங்க..." உள் அழைக்கிறாள். உள்ளே நுழைகின்றனர். வெளியே பார்க்க காரை உதிர்ந்து வண்ணமிழந்து கிடக்கும் அந்த பழங்கால வீடு உள்ளே பார்க்க பிரமிப்பூட்டுகிறது. தரையெல்லாம் மார்பிள். சுவரில் டைல்ஸ்; வெல்வெட் வேய்ந்த குஷன் சோபா' நவீன ரக ஏர்கூலர். அகண்ட திரை டி.வி. பெட்டி.

டி.வி.யில் சன் ப்ரோக்ராம் பார்த்தபடி பெருமாள், எதார்த்தமாக கழுத்து திரும்பும் போது கண்ணில்படும் கண்ணனையும் பார்த்திபனையும் பார்த்து அதிர்ந்து போகிறான்.

"நீங்க... நீங்க... வாங்க! வாருங்க..." சமாளிக்கிறான். இருவருமே அவன் அழைப்பை பொருட்படுத்தாதபடி அந்த வீட்டையே நோட்டமிடுகிறன்றனர்.

"பெருமாள் வீடு சூப்பரா இருக்கே... சபாஷ் இப்படி தான் வீட்டை வெச்சுக்கணும்..." என்று பார்த்திபன் குத்த ஆரம்பிக்கிறான்.

"உட்காரு பார்த்திபா... எங்க இவ்வளவு தூரம்?"

"உட்கார்றது இருக்கட்டும் ஆமா என்ன லீவு போட்டுட்டே..." உட்கார்ந்தபடி கேட்கிறான்.

"உடம்பு சரியில்ல அதான்..."

"சன் டி.வி. பார்த்துகிட்டிருக்கே...?"

"நீ வேற பார்த்திபா... உடம்பு சரியில்லைன்னா கண்ணுக்கென்ன இல்ல பெருமாள்..." நறுக்குகிறான் கண்ணன்.

பெருமாள் வழிய அவன் மனைவி குடிக்க எடுத்து வந்திருக்கிறாள்.

"காபிங்களா... நான் சாப்பிடறதில்ல..." எனும் கண்ணனை அவள் ஒரு தினுசாக பார்த்து "இது ஹா லிக்ஸ்ங்க..." என்கிறாள்.

"ஹார்லிக்ஸா..." நடுவகிடு தெறித்து போகிறது பார்த்திபனுக்கு.

"ஆமாங்க... பெரும்பாலும் இவர் ஆபீஸ்காரங்க காப் சாப்பிடறதில்ல. அதுலையும் வெங்கி வந்தார்ன கூல்ட்ரிங்ஸ்தான் குடிப்பார். அதான் நாங்க இரண்டையும் வெச்சிருக்கோம்."

எதையோ தேடிவர ஏதேதோ அகப்படுகிறது.

"வெங்கி அடிக்கடி வருவாரா என்ன?"

"ஆமாங்க... இவருக்கு அவர்தான் ரொம்ப நெருக்கமே ஏங்க வாயை மூடிக்கிட்டிருந்தா எப்படி சொல்லுங்க. அவ வெகுளியாக படபடவென்று பொரிந்து தள்ள பெருமாள் அவளை பார்த்து கத்த ஆரம்பிக்கிறான்.

"ஏய்... போடி உள்ற... வந்தியா ஹார்லிக்ஸ் கொடுத்தியா போனோமான்னு இல்லாமே..."

"அட அவங்கள ஏன் திட்றே பெருமாள். அம்மா நீங்க சொல்லுங்க. வில்லியம்ஸ் வருவாரா..."

"ஓ... வருவாங்களே!" அவள் ஆமோதிக்க, பெருமாள் முறைக்க, தாளமாட்டாது உள்ளே சென்று விடுகிறாள் அவள், நிமிர்கிறான் கண்ணன்.

"பெருமாள்... இது உன் வீடு. இங்க நீ ஓட முடியாது. எனக்கு எல்லா உண்மையும் தெரியும். உண்மையை சொல்லு அப்பா கொலை தானே செய்யப்பட்டாரு..."

"என்ன கண்ணா என்னென்னமோ சொல்றே... உங்கப்பா சாவு பத்தி எனக்கொண்ணும் தெரியாதுப்பா..."

"அப்படியா... அதான் இரண்டாயிரம் சம்பளம் வாங்கற நீ இவ்வளவு வசதியோட இருக்கியா?"

"வசதிக்கும் சம்பளத்துக்கும் என்னப்பா சம்பந்தம். இது என் மாமியார் வீடு மூலமா வந்தது..."

"அப்ப உனக்கு ஒண்ணுமே தெரியாது அப்படித் தானே?"

"தெரியாதுப்பா..."

"டாய்லெட்ல அப்ப எதுக்கு உன் பேச்சை ராமநாதன் கண்டிச்சான்...?"

"எங்க கண்டிச்சான். அதெல்லாம் ஒண்ணுமில்லயே... இதோ பாரு. நீங்க எதுக்கு வந்தீங்க...? உங்கப்பா சாவு பத்தி எனக்கு எதுவும் தெரியாது. உனக்கு எதாவது சந்தேகம் இருந்தா போலீஸ்ல கம்பளையிண்ட் கொடு. அதை விட்டுட்டு நீங்க என்ன இரண்டு பேரும் பெரிய சி.ஐ.டி. மாதிரி நினைச்சுகிட்டு கிளம்பிட்டீங்க."

"ஏன் நாங்க சி.ஐ.டிங்களா இருக்கக் கூடாதா...?"

"அப்படின்னா இருபத்து நாலு மணி நேரம் உசுரோட இருக்க மாட்டீங்க... தெரிஞ்சுக்குங்க..."

"என்ன மிரட்டி பார்க்கறியா?"

"மிரட்டலை. உண்மை இது. உங்களுக்கு சிலரோட சக்தி பத்தி தெரியாது. தோ பார் கண்ணா. நல்லவேலை கிடைச்சிருக்கு. அதை ஒழுங்கா பார்த்தியா போனியான்னு இருக்கணும். அதை விட்டுட்டு செத்த பாம்பை அடிக்கற மாதிரி இப்ப என்ன உங்கப்பா சாவை பத்தி நோண்டி கிட்டு.

உங்கப்பாவை கொலைதான் பண்ணாங்கன்னே வெச்சுப்பமே. உண்மை தெரிய வரதால உன் அப்பா

சமாதியில இருந்து எழுந்து வந்துடப் போறாரா? பெருமாளின் பேச்சின் போக்கே மாறிவிட்டது. விட்டால் எழுந்து போகச் சொல்வான் போலக்கூட தோன்றுகிறது. ஆனால் அப்படி சொல்லாமல் டி.வி.யை பார்க்க ஆரம்பிக்கிறான்.

துவக்கத்தில் துளி பயந்த மாதிரி இருந்தது. இப்பொழுது எப்படித் தெளிந்தானோ தெரியாது மகா சண்டிபோல மாறி சினிமா வில்லன் போல் சிப்ஸ் தின்றபடி டி.வி. பார்க்கிறான்.

"அப்ப பெருமாள் நாங்க கிளம்பறோம்..."

"உம்ம்..." இருவரும் ஏமாற்றமுடன் கிளம்புகின்றனர். வாசல் தாண்டியிருப்பார்கள். பெருமாள் சட்டென்று சட்டை மாட்டிக் கொண்டு வெளியே கிளம்புகிறான்.

எதிரில் வரும் மனைவியை பார்த்து கத்துகிறான்.

"சரியான ராகு காலம்டி நீ. அவங்க இரண்டு பேரும் யார் தெரியுமாடி உனக்கு...?"-கத்தியபடி வெளியே பாய்கிறான்.

எஸ்.டி.டி. பூத்.

உள்ளே நுழைபவன் நரம்பாய் இனிக்கும் ஒரு 18 வயதுப் பெண்ணின் சிரிப்பை புறந்தள்ளியபடி எண்களைத் தட்டுகிறான். மறுமுனையில் யார் என்று தெரியவில்லை. அவர்களோடு பேச ஆரம்பிக்கிறான்.

"சார்... இனி நாம நிம்மதியா இருக்க முடியும்னு தோணலை. அந்த கண்ணன் பையன் வந்தான். எனக்கு எல்லாம் தெரியும்னு சொல்லி என்னை அசைக்க பார்த்தான். நானும் மிரட்டாம மிரட்டினேன்.

நம்ம முதலாளி ஊர்ல இல்லாத இந்த சந்தர்ப்பத்துல எங்க நாம செஞ்சதெல்லாம் வெளிய தெரிஞ்சிடுமோன்னு பயமா இருக்கு.

அவங்க இனி சும்மா இருக்க போறதில்லை. கண்ணனுக்கு பார்த்திபனும் பெரிய பக்கபலமா இருக்கான். என்ன பண்ணப் போறீங்க...?"

-மறுமுனையில் என்ன பதில் வந்ததோ தெரியவில்லை. "அப்படியே செஞ்சிடுங்க. அதான் நல்லது"-என்று போனை வைக்கிறான்.

அந்தப் பெண் தொடர்ந்து வழிகிறாள். "எப்ப வந்தாலும் இப்படித்தான் பேசறீங்க. என்ன எதுனா பிராப்ளமா?"-கேட்கிறாள்.

"போச்சுடா... இனி பூத்தை மாத்திட வேண்டியது தான்." என்று தலையிலடித்துக் கொண்டு இரண்டு ரூபாயை விட்டெறிந்துவிட்டு வெளியில் இறங்குகிறான்.

இப்பொழுது பூத்தின் முன் கண்ணனும் பார்த்திபனும்... இருவரும் உள்ளே நுழைய அந்த பெண் யாரைப் பார்த்தாலும் சிரிப்பாள்போல் இருக்கிறது. சிரிக்கிறாள்.

பெருமாள் யாருக்கு போன் செய்திருப்பான் என்பதை சுலபமாக தெரிந்து கொள்ளும் விதமாக பட்டன் சிஸ்டமுள்ள அந்த டெலிபோனில் ரிமைண்டர் பட்டனை தட்டுகிறான் பார்த்திபன். முந்திய எண்கள் அசுரகதியில் விழுந்து மறுமுனையில் ஹலோ என்கிற குரல் கேட்கிறது. குரலை கேட்ட மாத்திரத்தில் பார்த்திபன் முகம் மாறிப் போகிறது.

மறுமுனை தொடர்ந்து ஹலோ ஹலோ என்கிறா
பார்த்திபன் கண்ணனிடம் சொல்கிறான். "கண்ண
பெருமாள் பேசினது பி. எம். கிருஷ்ணராஜோட...!"
கண்ணனும் பலமாக அதிர்கிறான்.

"சரி, சரி, பெருமாள் மாதிரியே பேசு..." கண்ணன்
ஊக்கம் பார்த்திபனை பெருமாள் ஆக்குகிறது.

"ஹலோ சார் நான் பெருமாள் தான் பேசறேன்..."

"என்னய்யா...?"

"நான் என்ன பண்ணட்டும், அந்த இரண்டு பே
தான் உண்மையை தெரிஞ்சுக்கிட்டாங்களே..."

"என்னய்யா கொஞ்சம் முந்திதானே நான் பாத்
கறேன்னு சொன்னேன். இப்ப திரும்பி கேக்கறே... உ
குரல் வேற மாறியிருக்கு.

"ஆமாம் சார்... தொண்டை சரியில்லை. அவங்
என்ன பண்ணப் போறீங்க... சொல்லலையே..."

"நாளைக்கு அவங்க ரெண்டு பேரும் திருடங்களாயி
வாங்க. எப்படிங்கறத நாளைக்கு ஃபேக்டரிக்கு வ
சொல்றேன்..."

-கிருஷ்ணராஜ் போனை முடக்குகிறார். பார்த்திப
உற்சாகமாக திரும்புகிறான். வெளியே வருகிறான்.

"கண்ணா... கடவுள் நம்ம பக்கம்தான் இருக்காருப்பா
இல்லைன்னா நிச்சயம் நாம நாளைக்கு ரொம்ப
கஷ்டப்பட வேண்டியிருக்கும்."

"என்ன சொல்றே பார்த்திபா..."

"ஆமாம் கண்ணா. நாளைக்கு நம்ம பேர்ல திருட்டுப்
பழி போடப் போறாங்க. அதான் கிருஷ்ணராஜோட
பிளான்..."

"கிருஷ்ணராஜ்னு நீ சொன்ன வினாடி ஆடிப்
போயிட்டேன் பார்த்திபா. ரொம்ப நல்ல மனுஷன்னு
நினைச்சுகிட்டிருந்தேன்..."

"நானும்தான்... உங்கப்பா சாவுக்கு பின்னால
கிருஷ்ணராஜுக்கும் ஏதோ தொடர்பு இருக்கு."

"அதுசரி நாளைக்கு திருட்டுப் பழின்னு சொன்னியே
எப்படி?"

"லேபர் லா"ப்படி நம்ம மேல கடுமையான ஒழுங்கு
நடவடிக்கை எடுக்கணும்னா நாம திருடனா இருக்கணும்.
கம்பெனி பிராபர்டிஸ்ல நாம கை வெச்சா இம்மீடியட்டா
என்கொயரியே இல்லாம நம்மளை டெர்மினேட்
பண்ணலாம் தெரியுமா?"

"ஓஹோ அதான் நம்மை அந்தவகைல தீர்த்துக்கட்ட
பாக்கறானா?"

"ஆமாம்... இது ரொம்ப நாளா நம்ப கம்பெனி உத்தி.
முதல்ல உன் வீட்டை பூட்டிக்கிட்டு அம்மா அக்காக்களை
எல்லாம் வேற எங்கையாவது அனுப்பிடு. ஏன்னா ஏதாவது
கம்பெனி பொருளை நம்ப வீட்டுல கொண்டுவந்து
வெச்சுட்டு பின்னால சந்தேகப்பட்டு கேட்கிற மாதிரி வந்து
அதை எடுப்பாங்க. நம்ம கதையையும் முடிச்சிடுவாங்க."

-கண்ணன் அதைக் கேட்டு வாயைப் பிளக்கிறான்.

"ஒரு பேக்ட்ரில இப்படி எல்லாம் கூட நடக்குமா
என்ன?"

"ஒரு தொழிலாளி அதிக பட்சம் ஓ.பி. அடிப்பான் இல்லியா அல்பமா ஐம்பது நூறுக்கு திருடுவான். ஏன் அவனோட கெபாசிடி அவ்ளோதான். ஆனா இந்த பய கூட்டம் இருக்கே... இது கிரிமினல் வேலை பார் ஆரம்பிச்சா இப்படித்தான்."

-கண்ணனுக்கு எல்லாவற்றையும் கேட்க நெஞ்சு கரிக்கிறது. இத்தனை மோசமான இடத்திலா அப் இருபத்தைந்து வருஷத்துக்கும் மேலாக வேலை பார் குடும்பம் நடத்தினார்? நினைக்கவே மலைப்பாக களைப்பாகவும் இருக்கிறது.

9

ஃபேக்டரி!

பரபரப்பான சூழ்நிலை. எல்லா டிபார்ட்மெண்ட்களு அதற்கான வேலையில் மூழ்கி இருக்க, பெயிண்ட் பெருமாள் மட்டும் மெல்ல நழுவி பார்ச டிபார்ட்மெண்ட் பக்கம் நடக்கிறான்.

அங்கு பதற்றத்தோடு வெங்கி. பெருமாளைப் பார்க்க அழைத்துக் கொண்டு தனியாக ஒதுங்குகிறான்.

"என்னய்யா என்னென்னவோ கேள்விப்பட்டேனே உள்ள சார் தலையை பிச்சுக்கிட்டிருக்கார்..."

"ஆமாம் சார்... அவனை நீங்க ஆரம்பத்திலே வேலைக்கு சேர்த்துருக்கக் கூடாது. எதாவது குற கண்டுபிடிச்சு அன்ஃபிட் ஆக்கியிருக்கலாமில்ல?"

"அடப்போய்யா கூமான்... உனக்கு பண்ணலைன் தெரியுமா? மெடிகலி அன்ஃபிட் அப்படி இப்படின் ஆயிரம் ஓட்டையை எழுதியும் எப்படியோ செலக்ட்

ஆகிட்டான். பி.எம்.க்கு இந்த நிமிஷம் வரை புரியல தெரியுமா?"

"உங்களை மீறி ஒரு ஆள் உள்ள வர முடியுதுன்னா என்னத்துக்கு நீங்க இருக்கணும்? பேசாம கூவாகம் போயிடுங்க அரவானை கல்யாணம் பண்ணிக்க..."

"கிண்டலா. நமக்கு மேல ஜெனரல் மேனேஜர்ன்னு ஒரு ஆள் இருக்காரு... தெரியும்ல?"

"அப்ப நீங்க சொல்றத பார்த்தா எல்லாரும் கூடிய சீக்கிரம் கம்பி எண்ணுவோம்னு சொல்லுங்க..."

"வாயைக் கழுவு. அவ்வளவு தூரம்போக உட்டுரு வோமா என்ன... இன்னிக்கே கதையை முடிச்சிட வேண்டாம்..."

"சரி சரி... சார் என்ன சொன்னார்?"-வெங்கி உடனே பாக்கெட்டில் கையை விடுகிறான். இரண்டு கம்ப்யூட்டர் டிஸ்க்குகள் அகப்பட வெளியே எடுக்கிறான்.

"இந்த டிஸ்க்குல என்னா சார் இருக்கு?"

"இது நம்ம அக்கௌண்ட்ஸ் டிபார்ட்மெண்டுது. இதுல நம்ம ஒரிஜினல் டர்ன் ஓவர் எவ்ளோ-புரொடக்ஷன் எவ்ளோங்கற டேடெய்ல்ஸ் எல்லாம் இருக்கு.

இதை நான் அக்கௌண்ட்சுக்கு போய் நைஸா கட்டுகிட்டு வந்துட்டேன். நீ இதை எடுத்துக்கிட்டு போய் பார்த்திபன் சைக்கிள் பாக்ஸ்ல ஒண்ணும், கண்ணன் சைக்கிள் பாக்ஸ்ல ஒண்ணும் போட்டுடு...

செக்யூரிட்டிக்கு நான் தகவல் தந்துட்றேன். அவங்க சிவியரா செக் பண்ண ஆரம்பிப்பாங்க. அப்ப பசங்க மாட்டுவாங்க."

-வெங்கியின் விளக்கம் பெருமாளை ஆகாயத்துக்கு தூக்குகிறது.

''சரியான ஐடியாதான். சபாஷ் வெங்கி கொண்டா கொண்டா...''

-வாங்கிக் கொண்டு தலையை சொறிந்தபடி சைக்கிள் ஸ்டேண்ட் பக்கம் செல்கிறான்.

தனது மொபட் அருகில் போய் எதையோ எடுக்க வந்த மாதிரி ஒரு பாவ்லா காண்பித்துவிட்டு பார்த்திபன் சைக்கிளில் ஒரு டிஸ்க்கையும், கண்ணன் சைக்கிளில் ஒரு டிஸ்க்கையும் போட்டுவிட்டு ஒன்றுமே தெரியாத மாதிரி திரும்ப-ஸ்டாண்டின் மறுமுனையில் இதை எதிர்பார்த்து காத்திருந்த நிலையில் பார்த்திபன்!

முகத்தில் ஒருவித தீர்க்கத்துடன் பெருமாளைப் போலவே பூனை போல நடந்து வருபவன் இரண்டு டிஸ்க்கையும் எடுத்து ஓசைப்படாமல் பெருமாளின் பெட்டியைத் திறந்து அதில் போட்டுவிட்டு அங்கிருந்து நழுவ...

செக்யூரிட்டிக்கு இன்டர்காம் பறக்கிறது. வாட்ச் மேன் நாதமுனி காதைக் கொடுக்கிறான்.

''யோவ் நாதமுனி, நான் வெங்கி பேசறேன். ஷிப்ட் இப்ப முடியப் போகுது. எல்லாரும் வெளியே போகப் போறாங்க, இன்னிக்கு சைக்கிள்ல ரொம்ப கவனத்தோட இருக்கணும். அக்கௌண்ட்ஸ்ல இரண்டு ஃப்ளாப்பி திருட்டு போயிடிச்சி. இரண்டும் கம்பெனி சீக்ரெட் உள்ள ஃப்ளாப்பி என்ன?''

''ஆகட்டும் சார்... எவ்வளவு முடியுமோ அவ்வளவு கவனிக்கிறோம் சார்...''-நாதமுனி இன்டர்காமை முடக்கி விட்டு விறைப்பாக எழுந்து நிற்கிறான்.

''யார் கதையை முடிக்க இந்த டிராமா போட்றாங்களோ?'' என்று முணுமுணுக்கிறான்.

''என்னய்யா முணுமுணுக்கறே... யார் போன் பண்ணுனது.''-லெட்ஜரும் கையுமாக இருக்கும் சகா பழனிமுத்து கேட்க, நாதமுனியின் பெருமூச்சு அவன் வரை போய்ச் சுட்டுத் தாக்குகிறது.

''கேக்கறேன்ல...''

''ஆமா... நீ கேட்டா நான் உடனே சொல்லிடணும் பாரு.''

''சரி சொல்லாட்டி போ... பர்சனலுக்கு போய் வெங்கி சாரை நோண்டுனா தெரிஞ்சிட்டு போவுது. நாதமுனி ரொம்ப அலுத்துக்கறான் சார்னு அப்படியே பத்த வெச்சுட்டும் வந்துட்றேன்.''

''செய்யி... அதை முதல்ல செய்யி. இந்த கம்பெனில வேலை பார்க்கறதுக்கு வெளியே போய் பழவண்டி தள்ளி பொழைக்கலாம்.''

''அப்படி என்னாடா ஆயிடிச்சி கம்பெனிக்கு... உனக்கு சம்பளம் தரலையா? இல்ல போனஸ்தான் தரலையா?''

''அது தராட்டி வண்டி ஓடுமா என்ன... சம்பளம் போனஸ் தந்துட்டா போதாது பழனி... கம்பெனி காலத்துக்கும் நிக்கறமாதிரி நடக்கணும். அப்பதான் நமக்கு நல்லது...''

''ரொம்ப ஜிலேபி சுத்தாம விஷயத்துக்கு வா. இப்ப என்ன ஆயிப்போச்சு.''

"அக்கௌண்ட்ஸ்ல ஃப்ளாப்பி திருட்டு போச்சா
வெங்கி சொன்னான். எவனோ களவாண்டுட்டானா
அவனை நாம பிடிக்கணுமாம்."

"அவனே ஒரு களவாணிதானே-சொல்றானா?"

"அது சரி... இதை அவன் எதுக்க சொல்ல முடியுமா
அவன்தான் பெரிய இடத்துல இருக்கறவனாச்சே..."

"தோபார் நாதமுனி... நேத்துக்கூட ஒரு லாரி லோ
செக் பண்ணாம அனுப்புன்னு உள்ள இருந்து ஆர்
வந்துச்சு. அனுப்புனோம். நமக்கு எதுக்கு மேலெட
பொல்லாப்பு? முதலாளியே எனக்கென்னன்னு ஸ்விட்
லாந்துல இருக்கச்சே நாம யார் சொல்லு பாப்போம்..."

"நல்லால்ல பழனி இதெல்லாம் இதை எல்லாம் தட்
கேட்ட நம்ம மணவாளனையும் போட்டு தள்ளிட்டா
இப்ப அவர் மகன் வந்துருக்கான். அவனுக்கும்
வெச்சுட்டாங்கன்னு நினைக்கிறேன். இதெல்லாம் எ
போய் முடியப்போகுதோ...?"

"எதுல போய் முடிஞ்சா நமக்கென்ன... நமக்கு எ
மணிநேர வேலை. கழுத யார் எக்கேடு கெட்
நமக்கென்ன?"

-இருவரின் வருத்தமான புலம்பலுக்கு நடுவில் ஷி
முடியும் பெல் இரைகிறது.

"சரி சரி, கேட்கிட்ட போய் நில்லு. எல்லாரும் வ
போறாங்கபாரு..."

-இருவரும் கடமைக்கு தயாராகின்றனர். கண்ணனு
பார்த்திபனும் எச்சரிக்கையாக பெட்டிகளை திறந்
பார்த்துவிட்டு சைக்கிளை தள்ளியபடி வருகின்றனர்.

பின்னாலேயே பெருமாள்! பாவம் மாட்டிக் கொள்ளப்போவது தெரியாதபடி...

கண்ணனும் பார்த்திபனும் சைக்கிளைத் தள்ளிவரும் அதே சமயம் ஷிப்ட் முடிந்து செல்லும் பல சகாக்களையும் ஒன்று சேர்த்துக் கொண்டு ஒற்றுமையாக நடந்து வருகின்றனர்.

-நாதமுனிக்கே அது ஆச்சரியமாக இருக்கிறது.

"என்னா பழனி... இன்னிக்கு பசங்கள்லாம் ஒண்ணா வர்றாங்க?"

"அதானே..."

-நெருங்கிவிட்டது செக்யூரிட்டி கேட். ஒருவன் கிண்டலாக நாதமுனியைப் பார்த்து பேசுகிறான்.

"யோவ் முனி... நாதமுனி... வாய்யா - வந்து கட்டிபுடிச்சி டூயட் பாடு வா!"

-நாதமுனி தினம் உடம்பை வருடி எதாவது இருக்கிறதா என்று செக் செய்வதைத்தான் அவன் அப்படி வர்ணிக்கிறான்.

"உன்னைய லவ் பண்ணிட்டாலும் நல்லா கிளுகிளுன்னு தான் இருந்துடப் போவுது..."-நாதமுனி சடைத்துக் கொண்டே தடவிப் பார்க்கிறான்.

"நல்லா பாத்துக்குய்யா... ஏதோ டிஸ்க்கை எவனோ சுட்டுட்டானாம். பாத்துக்கோ. அப்பால சரியா செக் பண்ணலை அது சரியில்லைன்னு லொள்ளு பண்ணாதே!"

"ஆமாம் நாதமுனி... என்னையும் நல்லா லவ்விடு. அப்புறம் உனக்கும் ஆபத்து எனக்கும் ஆபத்து" ஆளாளுக்கு

முன் வந்து நின்று சிலுவை நாதர் போல கை தூக்கி நி
நாதமுனி பரபரவென்று செக் செய்து போ போ என்கிறா

கண்ணன், பார்த்திபன் முறைவருகிறது. இருவரிடமு
செக்யூரிட்டிக்கு ஒருவித மரியாதை உண்டு. அ
குறையாதபடி இருவரும் வருடப்படுகின்றனர்,

"ஏய் சைக்கிளையும் நல்லா பார்... வண்டில பெட்
இருக்குல்ல..." பின்னால் இருந்து எடுத்துக் கொடுக்கிறா
பெருமாள். பெட்டியையும் பார்க்கிறான் நாதமுனி."

"ஒண்ணுமில்லீங்க... திருட்ற முகரையை எனக்
தெரியாது... நீ போ கண்ணா..." என்று அனுப்புகிறான்.

"யோவ் நல்லா பாருய்யா..." பெருமாள் திரும்
கத்துகிறான்.

"உன்னைத்தான் பார்க்கணும். அவங்களை பாத்தாக்
என்று சொல்லிக் கொண்டே பெருமாளின் உடம்
வருடுகிறான். பெருமாளிடம் பதற்றம். அது குறையாதப
வண்டியோடு வெளியேறத் தெரிந்தவனை நாதமுனியி
கைகள் பிடித்து இழுக்கின்றன.

"நில்லும்மா... அவன் பெட்டிய பாருன்னேல்ல... உ
பெட்டிய பாக்க வேண்டாமா?" கேட்டுக்கொண்டே
பெட்டியை திறந்து பார்க்கிறான்.

கண்ணிரண்டும் காது வரை விரிகிறது.

"அடப்பாவி... நீதான் அந்த திருட்டுக் கழுதையா
இதோ இங்க இருக்குது டிஸ்க்குங்க..."

நாதமுனி டிஸ்க்கை அனைவரும் பார்க்கும்படியா
தூக்கிப் பிடிக்க, பெருமாளுக்கு நிற்கும் இடம் எரிகிறது.

"இல்ல... நான் இல்ல... நான் இல்ல... என் பெட்டில
எப்படி வந்துச்சுன்னே தெரியாது. நான் இல்ல... நான்
இல்ல..."

ஃபேக்டரியின் ராட்சஸ மெஷின்களின் சப்தத்தை மீறி
கத்துவதெல்லாம் எடுபடாமல் போகிறது.

10

வீடு.

மல்லாக்க படுத்துக் கிடக்கிறான் கண்ணன்.

அம்மா வருகிறாள். அவனைப் பார்க்கிறாள்.
கேட்கிறாள்.

"ஏம்ப்பா எதுவுமே பேசாம உம்முன்னு இருக்கே?"

"ஒண்ணுமில்லம்மா..."

"இப்படி சொன்னாலே நிறைய இருக்குன்னு தாம்பா
அர்த்தம்..."

"என்னத்தம்மா சொல்ல..."

"திரும்ப ஃபேக்டரில பிரச்சினையா...?"

"எப்பவுமே ஃபேக்டரில பிரச்சினைதான் இருக்கும்?"

"புரியும்படி சொல்லேன்..."

"வேலை கிடைக்கறதுக்கு முந்திவரை வேலை கிடைச்சா
போதும்னு நினைக்கறோம். அப்புறமா ஏம்மா புத்தி
மாறிடுது..."

"எப்படிப்பா?"

"எப்படியெப்படியோ... சம்பளம் போதலை வேலை
பிடிக்கலை மேலதிகாரி சரியில்லை கூட வேலை

பாக்கறவன் சரியில்லைன்னு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதமா மாறிட்டாங்க...''

''மாறினா தானேப்பா மனுஷன்...''

''தப்பா சொல்றியேம்மா தன்னிலை மறக்கறதும் மாறுவதும் நல்ல மனுஷனுக்கு அழகாம்மா...''

''எதுக்கு இத்தனை பீடிகை... ஆபீஸ்ல என்ன பிரச்சினை... உன் யூனியன் சிக்கலா?''

''இல்லம்மா... இதுக்கு மேல எதையும் கேக்காதே.''

''சொல்லுப்பா... சொன்னாதானே பாரம் குறையும்.''

''ஆமா... அப்பா இப்படி எல்லாம் உன்கிட்ட ஆபீஸ் பிரச்சினையை பேசுவாரா...''

''அவரோட மந்திரிப்பா நான்...''

''அப்படின்னா அப்பா சாகறதுக்கு முந்தி எதாவது ஆபீஸ் பிரச்சினை பத்தி சொன்னாராம்மா...''

''உம்... யாரோ ஒரு அதிகாரி இவர் டிபார்ட்மென்ட்ல இருக்கற ஒரு புது மெஷினை பழைய மெஷின்னு சொல்லி அடிமாட்டு விலைக்கு விற்கத் தெரிஞ்சானாம். இவர் தடுத்தாராம்.''

''அப்புறம்...?''

''கிட்டதட்ட பல வருஷமா கம்பெனிக்கு டீசலும் பெட்ரோலும் சப்ளை பண்ணினதுல எத்தனையோ லட்சம் ஊழலாம். அதை உன் அப்பா கண்டு பிடிச்சாராம்.''

''எப்படி?''

''ஒரு லாரில லோட் வருமாம். ட்ரிப் ஷீட்டுல 10,000 லிட்டர்னு இருக்குமாம். ஆனா டேங்க்ல எட்டாயிரம் லிட்டர்தான் இருந்ததாம்... இப்படி...''

''இதை எல்லாம் மிஞ்சற ஒரு தப்பை நான் சொல்லவாம்மா.''

''என்னப்பா...''

''பத்தாயிரம் இருபதாயிரம் சம்பாதிக்கிற சிலருக்கு பாவம்மா அவங்க வாங்கற சம்பளம் போதலை போலருக்கு. சில தொழிலாளிகளை கைக்குள்ற போட்டு கிட்டு நீ சொன்ன தப்பை செய்ததோட ஃபேக்டரிக் குள்றயே இந்த உண்மைகளை தெரிஞ்ச அப்பாவையும் சாமர்த்தியமா தீர்த்துக் கட்டிட்டாங்கம்மா...''

''அப்ப அது கொலைதானா?''

''ஆமாம்மா... ஊர்ஜிதமா தெரிஞ்சி போச்சு...''

''எப்படிடா?''-எகிறி எழுகிறாள் அம்மா.

''அதுவாம்மா இப்ப முக்கியம். எப்படி இருக்கு பார் உலகம்...'' அம்மா அழ ஆரம்பிக்கிறாள்.

''என்னால நம்ப முடியல கண்ணா, உன் அப்பாவை கொல்ல பரம சண்டாளனுக்கும் மனசு வராதேப்பா...''

''அதெல்லாம் சும்மாம்மா... மாட்டிகிட்டா என்ன பண்றதுங்கற பயம் இப்ப எதையும் செய்ய வைக்குது சிலரை...''

''யாரது... உனக்கு தெரிஞ்சுபோச்சா...?''

''தெரிஞ்சுபோச்சு... ஆனா நிரூபணம்தான் இல்லை, அதையும் இன்னிக்கு சேகரிச்சிடுவேன்.''

''அதான் அசந்துபோய் சாஞ்சிட்டியா?''

''ஆமாம்மா... எங்கேயும் தட்டிக் கேக்கறவங்க நிலையை பார்த்தியா? காந்தியில ஆரம்பிச்ச தண்டனை-தொடர்ந்து கிட்டே இருக்கறது...''

"அதான் உலகம். நீ பார்த்துடா. உன்னையும் எதாவது பண்ணிடப் போறாங்க..."

"தெய்வம் என் பக்கம்மா, நீ கவலைப்படாதே. இன்னிக்குகூட எனக்கு ஒருத்தன் குழி வெட்டப் பார்த்தான். பாவம் அவன் வெட்டுன குழியில அவனே விழுந்துட்டான்."

-வருத்தக் கசிவோடு எழுந்து அமருகிறான். அம்மா அழுதவண்ணம் இருக்கிறாள். அப்பா நினைப்பு ஆறாமல் பெருக்கெடுக்க தொடங்கிவிட்டது. இனி ஒன்றும் செய்யமுடியாது. அதுவாகத்தான் அடங்கவேண்டும்.

11

ஃபேக்டரி முழுக்க பெருமாள் பற்றித்தான் பேச்சே...

"இவன்லாம் எலெக்ஷன்ல நின்னா அது எப்படி இருந்துருக்கும். பர்சனல் மேனேஜர்லாம் பாக்கெட்லங்க திமிரோட டிஸ்க்கை அழுத்தப் பார்த்து நல்ல மாட்டிக்கிட்டான்..."

"என்ன பண்ணப் போறாங்க. இன்னுமா டெர்மினேட் பண்ணலை?"

"பர்சனல் மேனேஜர் என்ன நினைக்கறானோ யாருக்கு தெரியும். அவன் இவனை எப்படி காப்பாத்தறதுன்னு மண்டையை உடைச்சுகிட்டு இருப்பான்..."

-தொழிலாளர்களின் யூகங்கள் துளிகூட பொய் இல்லை என்கிற மாதிரி மண்டையை பிய்த்துக் கொண்டிருக்கிறார் கிருஷ்ணராஜ். கூடவே வெங்க்கி.

"எப்படிய்யா... எப்படி இப்படி ஆச்சு?"

"தெரியல சார். கண்ணன் இவ்வளவு தெளிவான ஆளா இருப்பான்னு துளிகூட எதிர்பார்க்கல சார்..."

"மூளையை வெச்சு விளையாட்றதுதான்யா எங்க பொழப்பே... பதிலுக்கு விளையாட்றானா அவன்..."

"ஆமாம் சார்... சந்தேகப்பட ஆரம்பிச்சு பெருமாள் வீடு வரை போனவனுக்கு சேர்மன் வீடு வரை போக ரொம்ப நாள் ஆகாது. சார்..."

"தெரியும்... அதுக்குள்ற அவன் கதையையே முடிக்கணும்."

"கதையையேவா..."

"ஆமாம். இல்லாட்டி நம்ம பொழப்பு போறது மட்டுமில்லை. நாம கம்பி எண்ணும்படியும் ஆகிடும்."

"சார்... மணவாளனை அவ்வளவு ஜாக்ரதையா போட்டுத் தள்ளியே யாரும் நம்பலை. இப்பவும் பேசிகிட்டிருக்காங்க. இப்ப பார்த்து அவர் மகனையும் போட்டுத் தள்ளினா சந்தேகம் வலுவாயிடும்."

"தெரியும் எனக்கு... அதுக்குதான் வேற ஐடியா வெச்சிருக்கேன்."

"அது இருக்கட்டும். பெருமாளை என்ன பண்ணப் போறீங்க..."

"டெர்மினேட்தான் பண்ணணும். வேற வழியில்லை."

"ஐயோ... அவன் கொதிச்சு போயிடுவான் சார். அவனை நாம எப்படி காப்பாத்துவோம்னு ரொம்ப நம்பிகிட்டு இருக்கான்..."

"[illegible] தெரியும் வெங்கி பேசாம்கூடாதுன்னு [illegible] சுருக்க ஆழத்தை நாம் எடுக்கணும்னா அதிகம் [illegible] முதல்ல நாமதான்.

பெருமாளை காப்பாத்தினா அது அவருக்கு [illegible] ஆழத்தை உருவாக்கும். எனக்கு உள்ள இருக்கற இந்த [illegible] இப்போ உள்ள என்ன பேசிக்கிறாங்க தெரியுமா?"

"தெரியும்... நீங்க எங்களையும் காப்பாத்தினீங்கன்னு [illegible]

"முதல்ல அதை பொய்யாக்கணும். தொழிலாளி [illegible] அவன் மறுபடி கிளம்பறமாதிரி பேசக் விட்டா நான் சொல்லி வெச்சிருக்கறதை நிரூபிக்கணும்."

கிருஷ்ணராஜ் நீச்சலடிக்கும் போது கப்பலி[illegible] அழுத்தறமாதிரி நெருப்பாக உள்ளே நுழைந்த வில்லியம்.

"என்ன சதியாலோசனை நடந்துட்டிருக்கு... வெங்கி [illegible] விஷயத்தை கிளறிவிட்டு இருக்கான். நீ[illegible] இங்க ரகசிய ஆலோசனை நடத்தறீங்களோ?"

"வாய மூடுங்கப்பா... அவனை எப்படி ஒழிக்கறதுன்னு நான் பிளான் பண்ணிட்டு இருக்கோம். பெருமாளை [illegible] கவுத்துட்டான் அவன்..."

"தெரியும்... தெரியும். தெரியாமத்தான் இப்ப இங்க வந்துருக்கோமாக்கும். ஆமா பெருமாளை என்ன பண்ண போறீங்க?"

"என்ன பண்ணணும்?"

"காப்பாத்தறீங்களா... நல்ல மேல இருக்கற சந்தேகம் [illegible] ஆகிடும். ஏதாவது சொல்லி சமாதானப் படுத்தி விட்டுக்கு அனுப்பற வழிய பாருங்க..."

"அவன் ஒன்னும் சேலையல் இல்ல. நல்ல விஷயங்க [illegible] விட்டுக்கெல்லாம் அவனை அனுப்ப [illegible] முடியாது."

"வேற என்ன பண்ணப் போறீங்க?"

"நீ சொன்னாரு அவர்கள் காதோடு சொல்லி முடிக்கிறார். இருவரின் விழிகளும் தெறித்துவிடுவது போல விரிந்து விட்டிருக்கிறது.

"இப்படி பண்ணாதான் நாம தப்ப முடியும். இல்லாட்டி என்னிக்கு இருந்தாலும் ஆபத்துதான்." கிருஷ்ணராஜ் தன் திட்டத்துக்கு சருதி சேர்க்கிறார்.

"போங்... உனக்குதான் மூளை இருக்குன்னு நீ பிளான் பண்ணிட்டே செய்யறது நாங்கதானே? பயமா இருக்குப்பா..."

"பயப்படாதீங்க... பயந்தா காரியம் ஆகாது. இப்ப நம்ம முன்னே இரண்டு வழிதான் இருக்கு. ஒன்னு மாட்டிக்கிட்டு வேலை போய் ஜெயிலுக்கு போறது. இன்னொன்னு நான் சொன்ன மாதிரி செய்து ஜெயிலுக்கு போகாம தப்பி எங்கயாவது போய இருக்கிறது. எதாவது ஒன்னைனை செய்துதான் தீரணும்..."

கிருஷ்ணராஜ் சொல்லிவிட்டு தெனாவெட்டாக மேஜர் வெங்கட்டை தூக்கிப் போட்டு பிடிக்கிறார்.

"போங் உனக்கு பயமாகவே இல்லையா?" வில்லியம் ஆச்சரியம் பீறிட கேட்கிறார்.

"பயந்தவன் பாச்சனல் ஆபீசரா இருக்க முடியாது வில்லியம்..."

"அப்ப நீ சொல்ற மாதிரி நடந்துக்கறோமா?"

"வேற வழி?"

12

ஹார்க் ஷாப்பில் எந்திரத்தில் வேலையோடு கட்டி புரண்டு கொண்டிருப்பவன் தோள் மேல் கரம் ஒன் விழுகிறது. திரும்புகிறான் கண்ணன். ரங்கபாஷ்யம் நின் கொண்டிருக்கிறார். ஆச்சரியப்படுகிறான்.

"கொஞ்சம் வா..." அழைத்துக் கொண்டு ஏ.சி. அ நோக்கி நடக்கிறார். டிபார்ட்மென்ட்டே பார்த் விடைக்கிறது.

"டேய்... தாண்டவராயனே வந்து கண்ண கூட்டிகிட்டு போறாண்டா. மழை பெய்யப் போகுது என்று சிலர் ஸ்லாகிக்கின்றனர்.

அறைக்கதவு திறக்க உள் நுழைகிறான். கண்ணன்.

உட்காரச் சொல்கிறார் ரங்கபாஷ்யம் எல்லா ஆச்சரியப்படுத்துகிறது அவனை...

உட்காருகிறான். ரங்கபாஷ்யம் செங்குத்தாக பார்த்து பேசுகிறார்.

"கண்ணா. நான் சொல்றத கவனமா கேட்டுக்கோ. இனிமே ரொம்ப ஜாக்கிரதையா இருக்கணும்..." என்கிறா

"என்ன சார் திடீர்னு..."

"திடீர்னுதான்... திடீர்னுதானே எல்லாமே நடக்கு எனக்கு உன்னையும் தெரியும். இந்த கம்பெனியையும் தெரியும். அதனால் சொல்றேன். உன் மேல பெரிய பழி வரப்போகுது. ஜாக்ரதை. எப்பவும் அதிகார வர்க்கம் தன் சக்தியைக்காட்ட ஆரம்பிச்சா அபூர்வமா சிலர் தான்

தப்பிப்பாங்க. அப்பகூட அவங்க தப்பிக்கத்தான் முடியும். ஜெயிக்கமுடியாது.

நீ நல்ல பிள்ளை அழிஞ்சுடக்கூடாது. அதனால சொல்றேன்." ரங்கபாஷ்யம் நிஜமாலுமே மனதின் அடித்தளத்தில் இருந்து பேசுகிறார்.

"என்னை இந்த கம்பெனியில யாருக்குமே பிடிக்கா துப்பா ஏன்னா நான் ஒட்டியும் ஒட்டாம இருக்கறவன். எப்பவும் விறைப்பா ரொம்ப கண்டிப்பானவனா ஒரு தனித் தீவா ஆகிட்டவன். ஒரு வகைல இப்படி இருக்கறதாலையோ என்னவோ என் கூட்டத்துல சிலர் தங்களோட தப்புக்கு என்னை கூட்டு சேர்த்துக்கலை அவங்க சேர்த்துக்கக் கூடாதுங்கறதுக்காகவேகூட நான் இப்படி இருக்கேன்னா அதுல தப்பில்ல..."

ரங்கபாஷ்யம் ரொம்பதான் மனது திறக்கிறார்.

"சார் இப்ப எதுக்கு இதை எல்லாம் சொல்றீங்க?"

"என் பேச்சை நீ அலட்சியப்படுத்திடக்கூடாது பார். அதனால சொல்றேன் இந்த கமிஷன் உலகத்துல நான் சம்பளம் மட்டும் வாங்கி ஜீவிக்கற ஒருத்தன். வேலைக்குன்னு வந்துட்டா வேலைய மட்டும் எல்லாரும் பார்க்கணும்னு நினைக்கறவன். ஆனா வேற சில வேலைகளை சிலர் பார்க்கப் போறாங்க. நீ அதுல மாட்டிக்க கூடாது. அதனால சொல்றேன்."

"இப்படி பூடகமா பேசினா எப்படி. கொஞ்சம் விலாவரியா..."

"யூகங்களை எப்படி விலாவரியா பேசமுடியும் சொல் பார்ப்போம். ரொம்ப நேர்மையா இருக்கறவங்களை இங்க எப்பவும் பலி வாங்கிட்றதுதான் கடந்த கால வழக்கம். உங்க அப்பா ஒரு சாட்சி. அதை வெச்சு சொல்றேன்..."

"நல்லது சார்... இவ்வளவு தெரிஞ்சு நீங்க இதை தடு
முடியலையா சார்..."

"எப்படி?"

"சேர்மன்கிட்ட எடுத்து சொல்லி... ஜி.எம்.கிட்ட எடு
சொல்லி..."

"இங்க எதுக்குமே சாட்சியும் புரூஃபும் வேணும்."

"இது என்ன கோர்ட்டா...?"

"கோர்ட்டை விட பரபரப்பான வேகமான போட்டி
உள்ள ஒரு வியாபார உலகம் இது. ஒவ்வொரு வினாடி
மின்சாரம் தண்ணி சம்பளம்னு கம்பெனி தன் ஓர்க்டே
செலவு செய்துகிட்டு இருக்கு. இதுல ஒருமு
இருமுறைதான் அபிப்ராயங்களை பத்தி பேசலாம். கருத்து
சொல்லலாம். எப்ப பார் அவன் சரியில்லை இவ
சரியில்லைன்னா கேட்டுக்க நிர்வாகத்துக்கு நேரமில்ல
காலமில்லைதோட தப்புல ஈடுபட்ட நபர்கள் ரொம்
புத்திசாலிகள். தங்களோட தவறுகளை நல்லாவே பூட்
பாதுகாக்கத் தெரிஞ்சவங்க...

கிரிக்கெட்ல பதினோரு பேருக்கு நடுவுல பந்தடிச்சு ரன்
எடுக்கற மாதிரிதான் இங்க நாம நினைக்கறத
சாதிச்சுக்கணும். அப்படி ஒரு உலகம் இது."

"உதாரணம்லாம் நல்லாதான் இருக்கு. எல்லாரும்
இப்படி சொன்னா கம்பெனி உருப்பட வேண்டாமா? அது
எப்படி?"

"ரொம்ப அழுக்கான உடம்புக்கு அரிப்பெடுக்கும்பா.
அப்ப கை தன்னால சொரிஞ்சு விட்டுக்கும். அதுமாதிரி
தாம்ப்பா... சேர்மனும் எப்படியாவது யாரையாவது விட்டு
சரிசெய்வார்னு நம்பிக்கிட்டு இருக்கேன்..."

-கண்ணன் அவரது அந்த உதாரணத்தையும் மிக
ரசிக்கிறான்.

"சரி ரொம்ப ஜாக்ரதையா இரு. குறிப்பா பொறுமையை
கை விட்டுடாதே. ரொம்ப எரிச்சல் வரும்படி சிலர்
பேசலாம். ஜாக்ரதை..."

-ரங்கபாஷ்யம் எதை வைத்து இப்படி சொல்கிறார்
என்பது தெரியாவிட்டாலும் அதில் அர்த்தம் இருப்பது
மட்டும் புரிகிறது. கைகுலுக்கிவிட்டு வெளியே வருகிறான்.
தொழிலாளர் கூட்டம் ஓடிவந்து ஒண்டுகிறது. கண்ணாடி
அறைக்குள் யார் போய் வந்தாலும் அது இப்படித்தான்.
அதற்கு தலை வெடித்துவிடும்.

"என்ன கண்ணா... தாண்டவராயன் என்ன
சொன்னான்? ஒழுங்கா வேலை பார்க்க மாட்டேங்கறே.
பேசிகிட்டே இருக்கேன்னு சொல்றானா...?"

கண்ணன் அனைவரையும் ஆழமாக ஒரு பார்வை
பார்க்கிறான்.

"சாரை பத்தி யாரும் இனி தப்பா பேசக் கூடாது. அவர்
மாதிரி ஒருத்தரை பார்க்க முடியாது. வேம்பு கசந்தாலும்
அது மருந்து. இதை மறந்துவிடக்கூடாது..."

-கண்ணனின் பதில் அனைவரையும் பொட்டில்
அடிக்கிறது.

"என்னடா இவன் கூப்பிட்டு உக்காரவெச்சு பேசுன
உடனே இப்படி விழுந்துவிட்டான். இப்பவே இப்படி
ஆயிட்டானே இன்னும் ஓட்டுபோட்டு தேர்ந்தெடுத்தா
என்னடா பண்ணுவான்?"

"உனக்கு ஒண்ணு தெரியுமா... இப்பதான் எனக்கு
புரிஞ்சிச்சு..."

"என்ன? என்ன?"

"பெருமாள் எலெக்ஷன்ல நின்னு ஜெயிச்சு வந்து
கூடாது அவனுக்கு கெட்ட பேர் வரணும்னு இ
தாண்டா அவன் பாக்ஸ்ல ஃப்ளாப்பியை போட்
ருக்கணும்.

பெருமாள் சொல்லிச் சொல்லி புலம்பறான் தெரியும

-உள்ளே ரங்கபாஷ்யம் சொன்னது இத்தனை சிரமம
வெளியில் நெருப்பாக உருமாறும் என்று கண்ண
எதிர்பார்க்கவில்லை.

இருந்தாலும் சகித்துக் கொள்கிறான். கூட்டம் என்ற
இப்படியும் அப்படியுமாக நாலுபேர் இருக்கத்தா
செய்வார்கள். நாலுபேர் என்றாலே நாலுவிதமா
பேச்சுதானே?

தன்னைத் தானே தேற்றிக் கொள்கிறான். பார்த்தி
ஓடி வருகிறான்.

"கண்ணா கேள்விப்பட்டியா... அந்த பெரும
பிளேட்டையே திருப்பி விட்டுருக்கறத..."

"கேள்விப்பட்டேன். அமைதியா இரு பார்த்தி. உண்
வசப்படக்கூடாது இப்ப..."

"என்னப்பா தொழிலாளிங்க இவங்க... யார் எ
கிளப்பிவிட்டாலும் அதை நம்பிடறாங்க..."

"அதுதானேப்பா லேபர் லட்சணம். யோசிக்க ஆரம்
சுட்டா, உண்மை பொய்ய பிரிச்சு பார்க்க தெரிஞ்சவங்க
இருந்துட்டா எந்த நிறுவனம் இவங்கள வெச்சு சமாளிச்
முடியும்?"

"நான் இப்ப உன்கிட்ட விளக்கம் கேட்கலை. நம்
அடுத்த ஸ்டெப் என்ன?"

"அது அந்த கிருஷ்ண ராஜோட ஸ்டெப்புக்கு பிறகு

"அவன் ஸ்டெப் என்னன்னு எப்படிப்பா
தெரிஞ்சுக்கறது..."

"அன்னிக்கு எப்படித் தெரிஞ்சுகிட்டோம்...?"

"போன் பண்ணி பேசலாம்கிறியா?"

"ஆமாம்... தாமதிக்க கூடாது பார்த்திபா. இப்ப கூட
ரங்கபாஷ்யம் கூப்பிட்டு வார்ன் பண்ணினாரு.
கிருஷ்ணராஜ் ஏதோ ஸ்டெப் எடுத்துட்டான்."

"ஓ.கே... அப்ப நான் இப்பவே அதுக்கான ஏற்பாட்டை
செய்யறேன்."

பார்த்திபன் கட்டை விரலை உயர்த்த கண்ணன்
நன்றியோடு பதிலுக்கு உயர்த்த...

13

எட்டு மணி இரவுப் பொழுது.

கிருஷ்ணராஜ் வீட்டு தொலைபேசி சப்திக்கிறது.

எடுத்து காதைக் கொடுக்கிறார்.

"சார்... நான் பெருமாள் பேசறேன்..." பார்த்திதான்
பெருமாளாகியிருக்கிறான்.

"என்னய்யா விஷயம்?"

"என்ன சார் டெர்மினேட் பண்றதுன்னு முடிவு
பண்ணிட்டீங்களாமுல்ல..."

"யாருய்யா சொன்னா..."

"ஃபேக்டரில எல்லாரும்தான் பேசிக்கறாங்களே..."

"பேசட்டும். பேசாம என்ன செய்வாங்க. நீ காரியம்
செஞ்ச லட்சணம் அப்படி..."

"என்ன சொல்லாதீங்க... எல்லாம் அந்த கண்ண
வேலை."

"நேத்து வந்தவன் அந்த பய. அவனை பத்தி என் கி
சொல்றியா... நல்ல ஆம்பளையா இருந்திருந்தா இன்னே
அவனை தீர்த்துக் கட்டிருக்க வேண்டாம்..."

"கொலையா?"

"ஆமாம்... அப்பதான் நாம தப்பிக்க முடியும். நீ
தப்ப முடியும்."

"என்ன சார் விளையாடறீங்களா... அவங்கப்பா
கொன்ன சலனமே இன்னும் அடங்கலையே..."

"அதுக்கு தான் ஒரு ஐடியா பண்ணியிருக்கேன். உன்
வில்லியம்ஸ் நாளைக்கு ஃபேக்டரில கத்தியால குத்து
குத்துன கத்தியோட நீ போய் கண்ணன் மேல வி
என்னை காப்பாத்து கண்ணான்னு அழுது புரளு. அவ
கத்தியை தொடுவான். தொட்ட மறு வினாடி அடப்
இப்படி குத்திட்டியேடா கொலைகாரான்னு கத்து. மிச்
நான் பாத்துக்கறேன்..."

"சார்... என்னை கத்தியால குத்தப் போறீங்களா..."

"வேற வழி... சும்மா லேசாய்யா..."

"பயமா இருக்கு சார்... கதை கந்தலாயிடப் போகு

"கந்தலாயிடாம இருக்கத்தான்யா இந்த பிளா
இதை நாளைக்கு காலை உன்னை கூப்பட்டு சொல்லலாம்
இருந்தேன், இப்பவே நீ போன் பண்ணிட்டே, நல்
போச்சு சொல்லிட்டேன்..."

"உங்களுக்கு ஆனாலும் மூளை சார்..."

"இல்லாட்டி இத்தனை தப்பு செய்துட்டு தர்பார் பண்
முடியுமா என்ன?"

"எலெக்ஷன்ல நின்னு மந்திரியாயிடுங்க சார். உங்களை
கையிலயே பிடிக்க முடியாது..."

"இப்போதைக்கு அந்த கண்ணனை கவுக்கற வழியப்
பாரு. அப்புறம் மந்திரியா, ராஜாவா ஆகலாம் டொடெக்..."

தொலைபேசி முடங்குகிறது. பார்த்திபன் முகத்தில்
அதிர்ச்சி மின்னலின் கூடாரம் நிமிர்கிறது.

என்ன ஒரு கொடுமையான திட்டம்?

நல்லவேளை... இது நிஜத்தில் பெருமாளுக்கு தெரியாது.
அவனை வேறு விதமாக திருப்பிவிட வேண்டியது தான்...

பார்த்திபனின் மூளை மிகவேகமாகச் செயல்படுகிறது.
பெருமாளின் வழக்கமான எஸ்டிடி பூத் நோக்கி சென்று
அங்குள்ள இளிச்சவாய் பெண்ணை பார்த்து தொலைபேசி
எண்ணை வாங்கிக் கொள்கிறார்.

"எதுக்கு?"-அவள் கேட்கிறாள்.

"பெருமாள் சாருக்கு போன் பண்ணணும்னு
கிருஷ்ணராஜ் சார் கேட்டார். அதான்."

"அவரா... அவருக்கு தான் நம்பர் தெரியுமே. அடிக்கடி
கூப்பிடுவாரே..."

"அதுவா... நம்பரை எங்கையோ மிஸ் பண்ணிட்டார்
போல என்கிட்ட வாங்கிட்டு வரச் சொன்னார்."

"உங்க பேர்?"

'என்பேர்; என்பேர் வில்லியம்ஸ்!'

-சாமர்த்தியமாக வில்லியம்ஸ் பேரை சொல்லிவிட்டு
நழுவுகிறான்.

ஒரு மணி கழிந்திருக்கும். பூத்திற்கு அழைப்பு வருகிறது.
பெருமாளும் பாய்ந்து வருகிறான்.

"ஹலோ யார் பேசறது?"

"பெருமாள் நான் கிருஷ்ணராஜ் பேசறேன். இ
முக்கியமான விஷயம்பா..."

"என்ன சார்...?"

"நாளைக்கு அந்த வில்லியம்ஸ் உன்கிட்ட எதாவது வம்
பண்ணினாலும் பண்ணலாம். அப்படி எதாவது செய்த
நேரா ஜி.எம். கிட்ட போய்டு."

"என்ன சார் நீங்க... வில்லியம்ஸ் எதுக்கு தகரா
பண்ணனும்."

"நீ சொதப்பிட்டேல்ல. அதனால உன்மேல பயங்க
கோபத்துல இருக்கார். எங்க நீ மேல் மட்டத்துல போட்
விட்டுடுவியோன்னு பயப்பட்றார்.

மணவாளான் இடத்துக்கு இவனையும் அனுப்பின
தான் நிம்மதின்னு ஒரே புலம்பல்..."

"நிஜமாவா?"

"உன் மேல அக்கறை இருக்கறதாலதான் இ
சொல்றேன்..."

"நம்ப முடியல சார்... நாமெல்லாம் டீமா ஒ மைய
இருக்கணும் நீங்கதானே சொல்வீங்க..."

"இல்லேங்கலப்பா... ஆனா வில்லியம்ஸ் இப்படி பயந்
பல்டி அடிப்பான்னு கண்டேனா? ஒருக்கால் வில்லியம்
உன் கிட்ட தப்பா நடந்துகிட்டாதான் நீ ஜி.எ
கிட்டபோய் அப்ரூவர் ஆகணும். இல்லாட்டி இல்லை
வில்லியம்ஸ் புரிஞ்சுகிட்டு நம்ம வழியில வரான்
அர்த்தம்..."

"ஜி.எம். கிட்ட போனா எல்லாரும் தானே சா
மாட்டுவோம்?"

"அதான் இல்லை மொத்த பழியையும் வில்லியம்ஸ் மேலே நான் போட்டுடுவேன். நீ கவலைப்படாதே..."

"சார்... பயமா இருக்கு சார்..."

"அப்ப அவன் குத்துவான் வாங்கிகிட்டு செத்துப்போ..."

"ஐய்யய்யோ... என்ன சார் இப்படி சொல்றீங்க. புலிவால் பிடிச்ச நாயர்மாதிரி ஆயிடிச்சே சார் என் நிலை..."

"நான் சொல்றபடி செய் இல்லாட்டி உன் இஷ்டம்."-நன்றாகவே பெருமாளை குழப்பிவிட்டு மறுமுனையில் போனை வைக்கிறான் பார்த்திபன். எஸ். டி. டி. பூத்தில் அந்த பொண்ணும் சொல்கிறாள் "சார் இந்த பூத் நம்பரை வில்லியம்ஸ்கறவர் வந்து கேட்டு தெரிஞ்சு கிட்டு போனார்..."-சொல்லிவிட்டு ஏராள சிரிப்பொன்று சிரிக்கிறாள். பக்கென்கிறது பெருமாளுக்கு. "வில்லியம்ஸ் நீ விளையாட ஆரம்பிச்சிட்டியா?"

14

விடிந்துவிட்டது.

சைக்கிளை கிளப்பும்போது பார்த்திபனும் வந்து சேருகிறான். கட்டைவிரலை உயர்த்தி காட்டி கம்பீரமாக சிரிக்கிறான்.

"என்ன பார்த்தி... ரொம்ப குஷியா இருக்கே..."

"ஆமாம் கண்ணா... ஃபேக்டரில பாக்கதானே போறே... மூளையையே மூலதனமா போட்டு பிழைக்கற ஒரு கூட்டம் தங்களுக்குள்ளேயே எப்படி எல்லாம் அடிச்சுக்கப் போறாங்கன்னு..."

"என்ன பண்ணினே?"

-பார்த்திபன் தான் சாதுர்யமாக செய்ததை முழுவதும் கூறி நிறுத்துகிறான். கண்ணன் கண்கள் பனிக்க கட்டி கொள்கிறான். கைகளைக் கூப்பி வானத்தை பார்க்கிறான்.

''என்ன பிரேயரா?''

''ஆமாம் பார்த்தி... பாதை போட்டா போதுமா? எல்லாம் நல்லபடி நடக்க வேணாமா?''

''நடக்கும் கண்ணா... நிச்சயம் நடக்கும். ஆண்டவன் எனக்கு மிமிக்ரி டேலன்ட் கொடுத்ததுக்கு இப்பதான் நல்ல பலன் கிடைக்க இருக்கு...''

-இருவருமாக ஸ்லாகிப்போடு கிளம்புகின்றனர்.

15

உள்ளே...

பயத்தோடு பெருமாள் மெஷினருகில் நின்று கொண்டிருக்க வில்லியம்ஸ் கூப்பிடுவதாக அழைப்பு வருகிறது.

''எங்க இருக்கார் சார்...?''

''உம்... ஸ்கிராப் யார்டுகிட்ட...''

''எதுக்கு கூப்பிட்றார்...''

''தெரியல... சீக்கிரம் போ...''

-பெருமாளுக்கு போவதற்கு தயக்கமாக இருக்கிறது. இருந்தாலும் வில்லியம்ஸ் காலில் விழுந்து நீங்கள் இப்படி என்னை தப்பாக நினைக்கலாமா என்று கேட்கவேண்டும் போலவும் இருக்கிறது.

தயங்கித் தயங்கி கிளம்புகிறான்.

கண்ணனுக்கு இதேபோல் அழைப்பு.

''கண்ணா... ஸ்கிராப் யார்டுகிட்ட வருவியாம் நீ...''

''எதுக்கு?''

''தெரியல... அந்த பெருமாள் வரச் சொன்னான். உன்கிட்ட பேசணுமாம்.''

''பேசணும்னா இங்க வரலாம்ல...''

''இங்க மனசுவிட்டு எப்படி பேசறது... ஸ்கிராப் யார்டுன்னா யாரும் இருக்க மாட்டாங்கல்ல...''

-வேண்டுமென்றே சில கேள்விகளை கேட்டுவிட்டு ஸ்க்ராப் யார்ட் நோக்கி நடக்கிறான்.

யார்டில்...

மலைபோல குவிந்திருக்கிறது இரும்புத்துண்டுகள். ஒரு ஓரமாக பளபள கத்தியோடு மறைவாக நின்று கொண்டிருக்கிறார் வில்லியம்ஸ்.

தேடியபடி வருகிறான் பெருமாள்.

குவியல் பின்னே நிற்பதை பார்த்து சற்று டெம்ப்டோடு நெருங்குகிறான்.

''என்ன சார் நீங்க... ரொம்ப தப்பா புரிஞ்சிகிட்டீங்க போல இருக்கே...'' மிடறு விழுங்கியபடி கேட்கிறான்.

''தப்பாவா... என்னய்யா உளர்றே- கண்ணன் வரானா பார்...''

''அவன் எதுக்கு சார் இங்க...?''

''அவன் எதுக்கா? நல்லா இருக்குய்யா... விடிய விடிய கதை கேட்டு சீதைக்கு ராமன் சித்தப்பாங்கற மாதிரி- இருக்கு உன் பேச்சு. கிருஷ்ணராஜ் எதுவும் சொல்லலையா?''

"சொன்னார் சார்... நீங்க கோபமா இருக்கீங்க. தப்பு
எதாவது நடந்துகிட்டா ஜி.எம். கிட்டயே போய்டுவீ
சொன்னார்..."

"என்னது... நான் தப்பா நடந்துகிட்டாவா. எனக்
என்ன கிறுக்கா பிடிச்சிருக்கு. அந்த ஆள் என்கிட்
உன்னை குத்தல்ல சொன்னான்."

"குத்த சொன்னாரா?"

"அட ஆமாய்யா... நான் உன்னை குத்தணும். நீ பழி
தூக்கி கண்ணன் மேல போடணும்கறதுதானே பிளான்...

"என்ன சார் சொல்றீங்க. ஒரே குழப்பமா இருக்கே..."

-இருவரும் மண்டையை பிய்த்துக் கொள்ளும்போ
"சபாஸ் இப்படில்ல இருக்கணும் பிளான்..." என்றொ
குரல் கேட்கிறது. திரும்பினால் ஜிம்.எம்.முடன் கண்ண
-வில்லியம்ஸுக்கு நின்ற இடம் நழுவுகிறது.

பெருமாள் இடி விழுந்த மாதிரி நிலை குலைகிறான்.

"இப்படி கையும் களவுமா பிடிக்கத்தான் ரொம்ப நா
காத்திருந்தோம். கண்ணனை வேலைக்கு சேர விடாதப
பண்ண மெடிகல் டெஸ்ட்டுல குளறுபடி பண்ணப்ப
அது ஊர்ஜிதமாயிடிச்சு. இருந்தாலும் கண்ணன்தா
கையும் களவுமா பிடிச்சுவிட்றேன்னு சொல்லியிருந்தார்.

பார்த்திபன் உதவியோட அதை செய்தும் முடிச்சுட்டா
போலாமா வில்லியம்ஸ்..."

-ஜி.எம்.மின் முன் வில்லியம்ஸ் தலை குனிகிறது
ஸ்கிராப் யார்டை விட்டு வெளியே வரவும் காத்திருக்கிறா
இன்ஸ்பெக்டர் ஒருவர்.

கைது செய்யும் முனைப்போடு முன் வருகிறார்.

வருபவர் கண்ணனை பார்த்து "சார் பேசாம எங்க
டிபார்ட்மென்ட்ல சேர்ந்துடுங்க..." என்கிறார்.

கண்ணன் சிரிக்கிறான்.

"அவரை இழக்க நாங்க தயாரா இல்லை
இன்ஸ்பெக்டர். கண்ணன் இந்த தப்பை மட்டுமில்ல
சேர்மன் அனுமதியோட எவ்வளவோ நல்லது கெட்டதை
இந்த ஃபேக்டரில ஐடென்ட்டிஃபை பண்ணியிருக்கார்.

இனி இந்த தொழிற்சாலை புத்துணர்ச்சியோட தனி
பாதைல போகப் போகுது.

களை எடுப்புதான் ஆரம்பமாயிடிச்சே..."

ஜி.எம்.மின் பேச்சில் பெருமை கூத்தாடுகிறது.

கண்ணன் அதில் லயிக்காதபடி பார்த்திபனை தேடி
நடக்க ஆரம்பிக்கிறான். எண்ணெய்க் கசட்டு எந்திரம்
ஒன்று பேப்பர் ட்டூயூபுகளை உற்பத்தி செய்து
கொண்டிருக்கிறது, அங்கே கர்மமே கண்ணாக இருக்கிறான்
பார்த்திபன். அவனை நெருங்கும் கண்ணன் கண்கள்
பனிக்க கட்டிக் கொள்கிறான்.

"என்ன கண்ணா... எல்லாம் நல்லபடி முடிஞ்சிச்சா"

"முடிஞ்சிச்சு பார்த்தி. நமக்கு இனி நல்ல காலம் தான்"
என்கிறான்.

ஆமோதிப்பாக லஞ்ச் பிரேக் மணி சப்தம் எழுப்புகிறது.
அந்த இரும்புத் தோட்டம் மொத்தமுமே கண்ணனையும்
பார்த்திபனையும் வெற்றி வீரர்களாக பார்க்கிறது.

(முற்றிற்று)

குபேரசாமி

1

"ஓர் ரூபா... ஒரே ரூபா... ஒரு லட்சம் ரூபா! போ
வராது. ஒரே ரூபாண்ணே. அப்பால பங்களா கட்டலா
கார்ல போவலாம். கால் மேல கால் போட்டு உக்கா
கோழிக்கால் சூப்பா குடிக்கலாம். ஓர் ரூபா... ஒரே ரூ
ஒரு லட்சம் ரூபா..."

சீட்டு விரித்த மாதிரி லாட்டரிச் சீட்டை விரித்
பிடித்துக் கொண்டு அந்தச் சிறுவன் ஒரு லட்சத்தை ஒ
ரூபாய்க்குத் தந்தே தீரும் துடிப்புடன் சுற்றிச் சுற்றி வ
கொண்டிருந்தான்.

சரியான வியாபாரக் குரல். படிய வாரிய தலை
பட்டைக் குங்குமம். ஆனால் அழுக்குச் சட்டை, முட்டி
கிழிந்து தைக்கப்பட்ட கறுப்புப் பேண்ட்.

காலில் செருப்பில்லை. பதிலுக்கு கண்ணி
நெருப்பிருந்தது. வாங்காமல் விட மாட்டேன் என்ப
போல அவன் வசனம் பேசி ஆசை மூட்டி அலைந்
திரிவதில் ஒருவகை ரசமும் எனக்கு இருக்கத்தான் செய்த

இன்று நேற்றா பார்க்கிறேன்? ஏழெட்டு மாதக் காட்சி

மதுரை பஸ் ஸ்டாண்டில் பஸ்ஸுக்காக நானும் என்னைப் போல பல சகாக்களும் காத்திருக்க வேண்டும் என்பது எந்த ஜென்மத்து சாபமோ தெரியாது.

மதுரைக்கு வெளியில் புல்கூட முளைக்க மறுக்கும் ஒரு வறண்ட நிலப்பகுதியில் இருக்கிறது எங்கள் தொழிற்சாலை. மூன்று ஷிப்ட் கொண்ட ஒரு யந்திரச் சுழற்சியில் பஸ் ஸ்டாண்டில் காலை மாலை இரவு என்று எல்லா கால நிலையிலும் நாங்கள் பஸ்ஸுக்காகக் காத்திருந்தாக வேண்டும்.

அப்படிக் காத்திருக்கும் சமயத்தில் ஏகக்கூத்துகளைப் பார்க்கலாம். அதில் இந்த லாட்டரிச் சிறுவனின் ஆசை வசனம் ஒரு சுண்டைக்காய்தான்.

அழுகல் பேரீச்சம்பழத்தை அம்பாரமாக குவித்து வைத்துக் கொண்டு திருட்டுத் தராசோடு நடக்கும் வியாபாரத்தில் இருந்து, அடுத்த நாளே கருகப் போகும் செப்புச் சங்கிலியைப் பதினெட்டு காரட் தங்கம் என்று சொல்லி விற்கப் பார்க்கும் இந்திர ஜாலம் வரை ஏகக் காட்சிகள்.

இதில் ஒருவன் பேனா விற்பான் பாருங்கள் படு போஷாக்கான காட்சி அது. பருத்த அட்டை மேல் கிறுகிறுவென எழுதிக் காட்டி விட்டு அப்படியே பேனா முனையால் அந்த அட்டையை சதக் சதக் எனக் குத்தி 'குத்தலாம் குடையலாம் கும்முன்னு எழுதிக் கலக்கலாம். காதல் மோதல் காரசாரமான கதை குறிப்பா மர்மக் கதையை மணக்க மணக்க எழுதலாம். கடைக்குப் போனா கண்ணாடி ஷோ கேஸ்ல வெச்சு அம்பது ரூபாம்பாங்க. இங்கே விளம்பரத்துக்காகத் தாரேன் அஞ்சே ரூவா! கூடவே மூணு பொருள். கண்ணாடி, ரப்பர், கண் மைன்னு மூணு

பொருள். வாங்க சார், வாங்கம்மா, வாங்கக்
வாங்கண்ணே, வாங்க பெரிசு, அஞ்சே ரூவா... அஞ்
ரூவா...'

நான் பார்த்துக் கொண்டே நிற்பேன். வயிற்
பாட்டுக்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் ந
பர்ஸை குறிவைத்துச் செய்யும் சப்தமல்லவா அ
மதுரைக்காரர்களுக்கு நெற்றியை நன்றாகப் படி
தெரியும்.

நாகர்கோயில்காரர்கள் நெற்றி என்றால் அ
ஏமாளிகள் என்று பெரிய எழுத்தில் எழுதி
ஒட்டியிருக்குமோ என்னமோ?

'வாங்க அண்ணாச்சி' என்று வரவேற்று ஊளை ஆரு
புளித்த திராட்சை, அழுகல் பேரீச்சை என்று சகலத்தை
தலையில் கட்டுவதில் ஒரு சாதனையே நட
காட்டுவார்கள்.

நடுவில் ஒருவன் அழதபடி வந்து துணி விற்ப
சொல்லியே தீரவேண்டும்.

"சார், சார்! அருமையான பாலியெஸ்டர் சட்டைத்
சார்! நூறு ரூவா துணி சார்! எழுபத்தஞ்சு ரூவா. பி
கூடக்காட்றேன் சார்!"

"எனக்கு விருதுநகர். ஒரு வேலையா மதுரை வந்தே
வந்த இடத்துல சட்டைத் துணி வாங்குனேன். வழி
பர்ஸ் தொலைஞ்சு போச்சு. ஊருக்குப் போயாகணு
என்ன சார் பண்ண... பாத்து போட்டுக்கொடுங்க சார்..'
என்று ஆஸ்கர் விருதுக்குத் தகுதி பெறும் தினுசில் ஏ
இரக்கம் மிகுந்த பேச்சோடும் வருத்தத்தோடும் ஒருவ
ஒவ்வொரு பஸ்ஸிலும் ஏறி இறங்கிக் கத்தாமை நாரில் ஆ

கால் காசு பெறாத சட்டைத் துணியைத் தலையில் கட்டப்
பார்ப்பான்.

ஒருமுறை வாங்கி உதைபட்ட பிறகுதான் நமக்கும்
ஞானம் வரும். கண்டக்டர் மட்டும் நமுட்டுச் சிரிப்புடன்
கண்டு கொள்ளாமல் போய் வந்து கொண்டிருப்பார்.

ஒருமுறை நான் ஏமாறப் பார்த்து விளிம்பில் தப்பித்தேன்
கண்டக்டரை கூப்பிட்டு, "இப்படி டுபாக்கூர் பார்ட்டியை
எல்லாம் பஸ்ல ஏத்தறியே தலைவா நியாயமா?" என்று
கேட்டும் விட்டேன்.

நக்கீரனைப் பொசுக்கும் முன் சொக்கநாதன்
பார்த்தானே ஒரு பார்வை!

"அவனை நான் பஸ்ல ஏத்தாட்டி அவன் கத்தி என்
வவுத்துல ஏறும். தேவையா எனக்கு? நீங்கதான் சார்
ஷுகுரா இருக்கணும். உங்களுக்கென்ன பி.எஃப்.,
கிராஜுட்டி, அந்த லோனு, இந்த லோனு மெடிக்கலுன்னு
ஆயிரம் வசதிங்க. எங்களுக்கு என்னா இருக்குது? அவன்
ஒரு சட்டை பிட்டு வித்தா ஒரு பத்து ரூவா வெட்டுவான்.
தீபாவளிக்கு தீபாவளி கூட நீங்க தர மாட்டீங்களே..."

கண்டக்டரின் விளக்கத்தில்தான் எத்தனை பொருளா
தாரச் சிந்தனை!

நான் சிந்தித்தவண்ணம் நின்று கொண்டிருந்து விட்டு,
எனக்கான பஸ் வரவும் பின்சீட்டாகப் பார்த்து ஏறி
அமர்ந்தும் கொள்வேன்.

நான் ஒரு சொற்ப தூரப் பயணி அதனாலே சீட்டில்
உட்கார்ந்திருந்தாலும் கண்டக்டர் கடுப்பில் இருந்தால்
எழுப்பி விடுவார். சமயங்களில் பஸ் கிளம்பி பஸ்
ஸ்டாண்ட் வளைவில் போகும் போது அரைமனதாக
என்னைப் பார்க்க ஓடிப்போய் ஏறிக் கொண்டு

வியர்வையை வழிப்பேன் நான் மட்டுமில்லை
கூட்டத்துக்கே இப்படி அனுதினமும் ஓடுவதுதான்
என்னைப் போலத்தான் டாவ் தமிழ்மணியும்.

'டாவ்' அவன் கேரக்டர் நிமித்தம் எங்கள்
அன்பர்கள் மனமுவந்து அளித்த பத்மஸ்ரீ
விருதாகும்.

பில்கிளின்டன் மோனிகா லெவன்ஸ்கி விவகார
தான் ஆரம்பத்திலேயே எச்சரித்ததைக் கேட்கவி
அதனால்தான் அவர் அவஸ்தைப்படுகிறார் என்று
தமிழ்மணி பேசும் போது கேட்க வேண்டும்.
வாயை மூடத் தோன்றாது. நாம் நம்புகிறோம்.
என்பதைப் பற்றி கவலையோ பிரக்ஞையோ
எப்படித்தான் இப்படி அடித்து விடுகிறானோ?

'நாலு பேர் தன்னைப் பார்க்க வேண்டும். தன்
கேட்க வேண்டும் வியந்து கொண்டே இருக்க
இது மட்டும்தான் அவன் எதிர்பார்ப்பு என்பது
பதினைந்து வருடங்களாக மாத்ருபூதம்
மனக்கூறுகளை அளந்து நான் கணித்து வைத்திருக்கி

பஸ் ஸ்டாண்டில் கால் கடுக்க நின்று கொண்டிரு
தருணங்களில் தமிழ்மணி இருந்தால் பொழுது போ
தெரியாது. அன்றைய நாட்டு நடப்பை ஒட்
சமாசாரங்களாக எடுத்து கொத்திக் கிளறி குருமா சே
சுடச்சுட அவன் வழங்கும் போது சினிமா டிவி போ
பொழுது போக்குச் சமாசாரங்களே தேவையில்லை என்
தோன்றும்.

அதிலும் வாஜ்பாய், ஜெயலலிதா ஊடல் கூடல் ப
அவன் பேசும் போது சிரித்து மாளாது.

இப்படிப்பட்ட டாவ் தமிழ்மணி கடந்த பத்து நாட்களாக வேலைக்கு வரவில்லை.

புருணே சுல்தானுக்கு ஏதோ பிரச்சினை தீர்த்து வைக்கப் போயிருப்பதாகச் சிலர் அவன் பாணியில் சொல்லிக் கொண்டிருக்க தமிழ்மணி ஒரு வாரத் தாடை முடியோடு பஸ் ஸ்டாண்டுக்குள் பிரசன்னமானபோது எனக்கு என்றில்லை எல்லாருக்குமே சந்தோஷ பரவசம் ஏற்படத்தான் செய்தது.

''என்னா தமிழ் ஆளைக் காணோம்... எங்க போயிட்டே...''

''ப்ச்ச்... ஒரு பாம்பே பார்ட்டிக்கு பிராப்ளம். அதான் வந்தாகணும்னான். போய்ட்டேன்.''

''என்னாச்சு... பிராப்ளம் சால்வ்டா?''

''தோடா... நான் போயிருக்கேன். சால்வாகாம இருக்குமா? என்னா கொமார் கேக்கறே நீ?''

''சரி போறது போறே, லீவ் லெட்டர் கொடுத்துட்டுப் போலாம்ல?''

''ஏன் டிபார்ட்மென்ட்ல ஒப்பாரி வெச்சானா சூப்பு...''

''பின்னே... இன்னிக்கு மட்டும் நீ வரலேன்னு வை. நோட்டீஸ் போர்ட்ல போட்டுருப்பாங்க.''

''கிழிச்சாங்க. அப்பால அவன் சமாசாரத்தைப் பூரா நான் நோட்டீஸ் போர்ட்ல போட்டா தாங்குவானா அவன்?''

''அது என்ன அவன் சமாசாரம்...?''

''அது இருக்குது ஒரு மூட்டை. சின்ன வீட்ல ஆரம்பிச்சு, கமிஷன் காண்ட்ராக்ட் ஊழல் வரைல ஒரு மூட்டைல்ல இருக்குது?''

தமிழ்மணி தான் தப்பிக்க பாதைபோட்டுப் பேசும் அ
தருணத்தில்தான் திரும்ப வந்தான் வழக்கமாக வரும் அ
லாட்டரிச் சீட்டு விற்கும் சிறுவன்.

"ஓர் ரூவாண்ணே. ஒரே ரூவாண்ணே! விழுந்
லட்சம்ணே. கார்ல போகலாம். கால் மேல கால் போ
பிரியாணியா சாப்பிட்லாம். ஒரு ரூவாண்ணே. ஒரு சீ
வாங்குங்கண்ணே..."

சுத்திச் சுத்தி வந்தான். சரியாக போணி ஆகவில்
போலும். கையில் சீட்டு அப்படியே இருந்தது. த
மணிக்கு சிவுசிவு என்று சீவிக் கொண்டு வந்தது கோப

"டேய் போங்கு போடா அப்பால. ஓர் ரூவாய்க்கு ஒ
லட்ச ரூபாய தள்ற மூஞ்சியப் பாரு. கார்ல போலாம
பிரியாணி சாப்பிடலாமாம்... சாப்ட்டு? திரும்ப இந்த ப
ஸ்டாண்டுல வந்து நின்னு சிங்கி அடிக்கவா? வெண்ண

"அப்படிச் சொல்லாதீங்கண்ணே. ஒரு சீ
வாங்குங்கண்ணே லட்ச ரூவாண்ணே..."

"டேய் போங்கு... இப்பத்தானடா சொன்னே
போடா அப்பால. இத வாங்கறதுக்குத்தான் ஒரு கோ
நாயா அலையுதுல்ல, அவங்ககிட்ட போடா."

"இன்னிக்கு வியாபாரமே சரியில்லண்ணே, யாரு
வாங்க மாட்டேங்கறாங்க. என் கை ராசியான
அண்ணே. நீங்க மட்டும் நம்பி வாங்குங்க. விழுவாப்
கேளுங்கண்ணே."

"ராசியான கைய்யா... கட்டாயம் உழுவுமாக்கும்
அடடா... பை கொண்டு வரலியே-எதுலடா ரூவான
போட்டு எடுத்துக்கிட்டுப் போக?"

"வாங்குங்கண்ணே... ஒரு சீட்டுண்ணே."

"ஒண்ணுல்ல... பத்து வாங்கறேன். உழுவாட்டி என்னா
பண்றது?"

தமிழ்மணிக்கு இன்று ஆள் மாட்டியாயிற்று.

"உழுவும்ணே... கட்டாயம் உழுவும்ணே. நம்புங்
கண்ணே."

"சரி நம்பேறேன். ஒருக்கால் உழுவாட்டி?"

தமிழ்மணி விடாமல் அவனைப் புரட்டி எடுக்க,
அவனும் சளைக்காமல் பதில் சொல்லிக்கொண்டிருந்தான்.

"உம், சொல்லுடா டவுசர், உழுவாட்டி என்னா
பண்றதாம்?"

"உழுவும்ணே. நம்புண்ணே."

"சரி ஒரு பந்தயம் வெக்கலாமா?"

"என்னண்ணே?"

"உழுவாட்டி டிக்கெட் காசை நீ தந்துடணும். உழுந்தா
உழுவறதுல பாதிய நான் உனக்குத் தரேன். என்ன
சொல்றே?"

"....."

"சொல்றா வெண்ணை. பஸ் வந்துருச்சி பார். பார்.
என்னா சொல்றே?"

"சரிண்ணே..."

அவன் பலவித நினைப்போடு தலையாட்ட, தமிழிடம்
ஒரே ஆச்சர்யம். "தராட்டி கண்ணு முழிய நோண்டிப்
பிடுவேன்" என்று பத்துசீட்டை வாங்கிக் கொண்டு ஒரு
பத்து ரூபாயைத் தட்டிவிட்டான் தமிழ்மணி.

அந்தச் சிறுவனிடம் இமாலயம் ஏறி கொடி நட்ட
திருப்தி.

டாவ் தமிழ்மணியும் என் பக்கம் திரும்பியபடியே
டிக்கெட்டையும் கசக்கிப் பந்தாக்கி பாக்கெ
போட்டுக் கொண்டான்.

"ஏய்... என்னப்பா காசைக் கொடுத்து வாங்கி
கசக்கிப் போட்றே..."

"அட போ கொமாரு! லாட்ரி விழுந்துதான் வி
போவுதாக்கும்? இதெல்லாம் சும்மா அப்ப
விழுந்தாலும் ஏதாவது நல்ல காரியத்துக்குக் கொடு
வேன். ஆனா அதெல்லாம் நடக்கப் போறதில்ல. நீ
பார், இந்தப் பய இனி என்கிட்ட என்ன பாடு
போறான்னு. என்னப் பார்த்தாலே ஓடப்போறான் பா
சொன்னபடியே கிளம்பப் பார்த்த பஸ்ஸில் ஏறி
நானும்...

அன்று பஸ்ஸுக்குக் காத்திருக்கும்போது அந்
ரூவா சிறுவன் என்னை நோக்கி ஓடி வந்தான்.

"சார் சார், எங்க சார் நம்ம தமிழ் சார்?" என்றான்.

"என்னாடா... இன்னிக்கும் சீட்ட தலைல கட்
பாக்கறியாக்கும்?"

"நான் கட்ட வேணாம் சார். என் ராசிதான் நிரூபண
யிடிச்சுல்ல? அவர் வாங்குன ஒரு சீட்டுக்கு லட்ச ரூ
விழுந்துடிச்சு சார்..." என்றான்.

2

என் கணிப்பு பொய்யாகவில்லை. தமிழ்மணி அ
லாட்டரி விற்கும் சிறுவனிடம் வசமாக மாட்டிக் கொ
போவதை நினைத்தபோது பரம சந்தோஷமாக இருந்த

ஊருக்கே உடைசல் தரும் மனிதன். இன்று அவனுக்கும் அதிர்ஷ்டம்; அதன் நிமித்தம் பரபரப்புகள், பரவசங்கள்.

"யாரு தமிழுக்கா லாட்டரி உழுந்துருக்கு? நம்ம டாவ் தமிழ்மணிக்கா?"

"பின்ன... நாங்க என்ன அரேபியா பாஷைலயா பேசிக்கிட்டிருக்கோம். அந்தப் பயலுக்குத்தான் லாட்டரி அடிச்சிருக்கு..."

"ஐயோ நல்ல நாள்ளேயே அவன் அளக்கற அளப்ப தாள முடியாதே. இதுல லட்ச ரூவா வேற கிடைச்சா தரைல நடக்க மாட்டானே..."

என் சகாக்கள்தான் ஆளாளுக்கு கமெண்ட் அடித் தார்கள். அப்படியே வழிமேல் விழி வைத்து அவனுக்காக எதிர்பார்க்கவும் செய்தோம்.

நிமிடத்திற்கொருமுறை அந்தப் பொடியன் வேறு வந்து எட்டிப் பார்த்து விட்டுப் போனான்.

தமிழ்மணிக்கு சீட்டு விழுந்த விஷயம் பரபரவென்று பஸ் ஸ்டாண்ட முழுக்கப் பரவி விட்டது, அந்தச் சிறுவனுக்கும் மவுசு கூடி விட்டது. இரண்டு கைகளிலும் ஏகத்துக்குச் சீட்டுகளுடன் உற்சாகமாகச் சுற்றி வர ஆரம்பித்தான்.

"பொடியன் உஷார் பார்ட்டின்னு நினைச்சேன். பரவால்ல, லக்கான ஆள்தான். வாடா இங்கன, ஒரு அஞ்சு சீட்டு தாடா..."

"வெண்ண... வெண்ண சோத்துக் கையால தாடா. எனக்கும் லட்ச ரூவா உழுவணும்னு வேண்டிக்கிட்டு தா."

"எலே... அதான் நீ வித்த சீட்டுக்கு ரூவா உழுந்திரிச்சுல்ல? இன்னும் என்னாடா கூவிக் கூவி

வித்துகிட்டு? பஸ் ஸ்டாண்டுலையே ஒரு கடைய பிடி
ஒக்காந்து விக்கப் பாருடா. அந்த லட்ச ரூ
உழுந்தவனோட ஒரு போட்டா படம் எடுத்து மாட்
வெச்சுக்க... என்ன?''

''அதாண்ணே அந்தாளைத் தேடறேன். ஆளை
காணோம்?''

''வந்தா உட்றாதே. எதாவது பாத்து போட்
கொடுக்கச் சொல்லு. உன் முதலாளிக்கும் வகை
கமிஷன் இருக்கும். உட்றாதே. என்ன?''

ஆப்பிள் ஆரஞ்சு பேரீச்சை என்று கடை போட்டிருக்
சகாக்கள் அந்தப் பொடியனை நன்றாகவே ரேக்கிவி
அவன் முகத்தில் மத்தாப்புப் பளபளப்பு. கூடவே அதி
தமிழ்மணியை இன்னமும் பார்க்க முடியவில்லை
என்னும் ஏக்கம்.

எனக்கென்னவோ தமிழ்மணி அன்று இவனி
சொன்னது போல, விழுவதில் பாதியை, அதாவ
ஐம்பதாயிரத்தைத் தூக்கி இந்தச் சிறுவனுக்குத் தருவா
என்று தோன்றவில்லை.

சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமே இல்லாதவனி
இதை எதிர்பார்ப்பதும் தவறுதான் என்று தோன்றிற்
ஆனால் என் சகாக்கள் தமிழ் பணம் தராவிட்டா
நோண்டி நொங்கு எடுத்து விடுவது என்கிற தீவிரத்தி
இருந்தார்கள்.

அவர்களுக்கெல்லாம் இது அல்வா போலக் கிடைத்
ருக்கும் சந்தர்ப்பம் அல்லவா?

மொத்தத்தில் தமிழ் அன்று எங்கள் பஸ் புறப்படு
வரையில் வரவேயில்லை.

''நீ வேணா பாரு சீனி பய இனி ஆபீஸ் பக்கமே
வரமாட்டான். எவண்டா இனியும் மூணு ஷிப்டை
பாத்துக்கிட்டு மையையும், ஆயிலையும் அப்பிக்கற
துன்னுட்டு நினைச்சிருப்பான்...''

''ஆமாம்ல...?''

கம்பெனியிலேயே சூப்ரவைசரோட மோதல் வரும்
போதெல்லாம் லட்ச ரூவாய தரச் சொல்லுங்க; திரும்பிப்
பாக்காம போயிடறேன்னு சொல்லிக்கிட்டிருப்பானே.
இனி என்னாத்த பண்ணப் போறான்?''

''அவனை மாதிரி ஆளுக்கெல்லாம் லட்ச ரூவாங்கறது
ஒரு விசயமா பாண்டி. ரூவாய்க்குப் பத்து வட்டின்னு கந்து
வட்டில தான் இறங்குவான்னு நினைக்கறேன்.''

டாவ் தமிழ்மணி என்ன செய்வான் என்று ஆளாளுக்கு
கணக்குப் போட்டபடி இருக்க நாங்கள் பயணிக்க
வேண்டிய பஸ்ஸும் புறப்பட்டது.

வழக்கம் போல வவ்வால் ஆகி கம்பியைப் பிடித்த படி
நிற்கத் தொடங்கினோம். உட்கார இடம் இருந்தது.
ஆனாலும் உட்காரக் கூடாது.

''கிட்டவழி டிக்கெட்டெல்லாம் நில்லு, தூர
டிக்கெட்டுக்குதான் சீட்டு. பெருங்குடியெல்லாம் ஸ்டாப்
கிடையாது. யாரும் ஏறியிருந்தா இறங்கிருங்க. அப்பால்
வண்டில ஏறிக்கிட்டு இரைச்சல் பண்ற வேலை வேணாம்.
ரை... ரை...''

கண்டக்டர் மாறாத அர்ச்சனை மந்திரம் போல தினமும்
சொல்வதை அன்றும் சொல்லி வண்டியைக் கிளப்ப, நான்
வெளியே பார்க்க ஆரம்பித்தேன்.

படையப்பா ரஜினியை மகாவிஷ்ணு வாக்கி ஓம் வீராய
நமஹ, ஓம் முத்தாயை நமஹ, படையப்பனே நமஹ என்று

ஸ்லோகம் சொல்லும் ஒரு போஸ்டர்தான் முதலில் கண்ணில் பட்டது.

பாண்டியர் காலம் தொட்டே கலை வளர்ப்பதில் என் ஊர் நிகரற்றதாயிற்றே? கலைக்காக உடல், பொருள், ஆவியைக் கொடுக்கும் ஜனங்களுக்கு நடுவில் நான் மட்டும் வவ்வாலாகத் தொங்கியபடி வேலைக்குப் போவதும் வருவதும் ஒரு இன்டர்நெட் யுகத்து இளைஞனின் செயலாகவே படவில்லை.

பேசாமல் நானும் லாட்டரி வாங்கியிருக்கலாம். அந்த லட்சம் எனக்கு விழுந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

என்னை நானே தாழ்த்திக் கொண்டு நிற்க, பஸ் நிற்குமிடமெல்லாம் ஆட்கள் ஏறினார்கள். உள் கட்டில் அழுத்தம் ஏற்பட்டு நெறிப்பேற்பட்டது. இதற்கு நடுவில் கண்டக்டரால் மட்டும் எப்படி திருகிக் கொண்டு ஒரு ஸ்க்ரூ டிரைவராகச் செயல்பட முடிகிறதோ என்று எனக்கு ஆச்சரியமேற்பட்டது.

நடுவில் ஒரு ஸ்டாப்பில் ஓடிவந்து தாவி ஏறினான் டாவ் தமிழ்மணி.

பஸ் ஸ்டாண்டில் ஏறினால் அந்தச் சிறுவனை சமாளிக்க வேண்டிவருமே என்று ஏறும் இடத்தை இப்படி மாற்றிக் கொண்டு விட்டானா?

"தமிழ்...!"

"ஏய் டாவ்... என்னய்யா லட்ச ரூவாயா? குபேரனையே கணக்குப் பண்ணிட்டியா?"

"என்னா தமிழ் அதிசயமா இருக்கு. பரிசு விழுந்தப் புறமும் வேலைக்குல்லாம் வரே!"

என் சகாக்கள் அவனைப் பார்த்து உதிர்க்கும் கருத்துக்கெல்லாம் ஒரு ஏளனச் சிரிப்பைப் பதிலாக வைக்கிறான் தமிழ்மணி.

"எப்பவும் பழச மறக்கறவன் இல்ல இந்த தமிழ்..." என்று தனக்குத்தானே ஒரு பெரிய தாமரைப் பூவாகப் போட்டுக் கொண்டான்.

எனக்கு சிரிப்பு வந்தது. அவனும் என்னைப் பார்த்து விட்டு முண்டியடித்துக் கொண்டு முன்னால் வந்தான். அந்தக் கூட்டத்துக்கு நடுவிலும் கைகொடுத்தான்.

"காங்கிராஜுஷன்ஸ்!"

"தேங்க்ஸ் கொமார்... ஏதோ சாமி கருணை..."

"சீட்ட பேங்க்ல சப்மிட் பண்ணிட்டியா?"

"எதுக்கு?"

"எதுக்கா... பணம் வாங்கத்தான்!"

"அது தெரியும்... ஆனா வரி நரி குதிரைன்னு ஏகத்துக்கும் பிடிப்பான். அதனால..."

"அதனால...?"

"நமக்குத் தெரிஞ்ச ஒரு பார்ட்டி இருக்கார். அவர்கிட்ட கொடுத்தா அவர் ஃபுல் கேஷை ஒரே கட்டா கொடுத்தா அவர் ஃபுல் கேஷை ஒரே கட்டா கொடுத்துடுவாரு. அவருக்கும் பிளாக்கை ஒயிட்டா மாத்திக்க ஒரு வழி கிடைச்ச மாதிரி. எனக்கும் ஃபுல் அமௌண்ட் கிடைச்ச மாதிரி... எப்படி?"

தமிழ் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான். எனக்குச் சற்றே கிர்ர்ரடித்தது.

தேவுடா... உலகத்தில் இப்படி எல்லாம் வழிகளா?

"என்னா கொமார் வாயப் பொளந்துட்டே... நா
சீட்டக் கொடுக்காமலே அந்த பார்ட்டி நான் ப
கேட்டா தருவார் தெரியுமா?"

தெரியாது என்பது போலப் பார்த்தேன்.

"உனக்கும் ஏதாவது ஹெல்ப் வேணும்னா சொ
செய்றேன்."

ஐயோ... மனத்தில் பதைப்பு பெருக்கெடுத்தா
உதட்டில் வேறு மாதிரி காட்ட ஆரம்பித்தேன்.

"ஆமா... என்ன பஸ் ஸ்டாண்டுல ஏறாம வழி
ஏறியிருக்கே?"

"அது வந்துப்பா... ஒரு வேளையா வில்லாபு
வந்தேன். அப்படியே வழில ஏறிட்டேன். ஏன், ஏ
நாயாவது நான் இனி பஸ் ஸ்டாண்டு பக்க
வரமாட்டேன்னாங்களா?"

"இல்ல... இல்ல... சும்மாத்தான் கேட்டேன்."

"அதான பார்த்தேன். நான் என்னமோ அந்த லாட்ட
பையன பாக்கறதுக்கு பயந்துகிட்டு பஸ் ஸ்டாண்ட் பக்
வராம இருந்துட்டேன்னும் பேசியிருப்பாங்களே...?"

"இல்லப்பா... நான்தான் கேட்டேன். யாரும் எது
பேசலை."

"பேசட்டுமே... இப்ப யார் அத பெரி
எடுத்துக்கப்போறா?"

"சரி... நான் நேர்லையே கேக்கறேன். அந்த
பையனுக்கு என்ன பண்ணப் போறே?"

நான் இப்படிக் கேட்ட நொடி தமிழ்மணியின் முகத்தில்
அஷ்டகோணல் உருவகித்தது. மெல்ல என்னை மி

நெருங்கி, காதோரமாக அவன் சொன்னதில் அது இடம் மாறி என் முகத்திற்குத் தாவியும் விட்டது!

3

என் முகம் போன போக்கை என் சகாக்கள் பார்த்து விட்டு அந்தக் கூட்டத்திலும் திருகிக் கொண்டு என்னை சமீபித்தனர்.

"என்னா குமாரு... என்னா சொல்றான் டாவ்? லட்சம் விழுந்த மப்புல எங்களையெல்லாம் பார்க்கக் கூட மாட்டேங்கறான்."

"அப்படியா... இதை தமிழ்கிட்டயே கேட்ற வேண்டியதுதானே?"

"எதுக்கு... இல்ல எதுக்குங்கறேன்? புனுகு பூனை கிட்ட மருந்து கேட்டா மரத்துக்கு மரம் தாவுமாம். இவன் அத விட மோசம்ல..."

"நீ வேணா பார்... இதான் சாக்குன்னு எழுதிக் கொடுக்கப் போறான். கேட்டா நான் இனிமேட்டு முதலாளி கைகட்டி வேலை பாக்க எனக்கு தலையெழுத்தான்னு கேப்பான்..."

பஸ்சுக்குள் என் சகாக்கள் கணித்தது அகத்தியர் நாடியில் கணித்து ஓலையில் எழுதினது போல நடக்கத் தொடங்கியது. பஸ்ஸை விட்டு இறங்கும்போதே தமிழ் மணியிடம், 'உஸ்ஸ்... ஆ... என்னா ஈனப்பொழப்புடா இது...' என்று சிலாகிப்புகள்.

உள்ளே நுழையும்போதே, நடையிலேயே திருவிளை யாடல் சிவாஜியாட்டம் மகா மிடுக்கு.

கார்டு பஞ்ச் பண்ணாமல் நேரே டிபார்ட்மெண்ட்டு
குள்தான் நுழைந்தான்.

"வாய்யா லட்சாதிபதி... கேள்விப்பட்டோம் எல்லாம்"
என்று டிபார்ட்மெண்ட் ஹெட் கைகுலுக்கக் கை
நீட்டினார். ஆனால் பதிலுக்கு தமிழ்மணியின் கைகள்
நீளவில்லை. உதட்டில் மட்டும் ஒய்யாராமான சிரிப்பு.

"நீ உழைச்சது போதும். இந்தா பிடின்னு ஆசாமி
நீங்கதான் சொல்லலை. ஆனா அந்த குபேரசாமி
சொல்லிடிச்சு. எனக்கு இனி மேட்டு இந்த பொழப்
வேணாம் சார். குட்பை சொல்லத்தான் வந்துருக்கேன்."

அவன் அப்படிச் சொன்ன மறுநொடி ஒரு வெள்ளை
தாளை எடுத்து மேஜை மேல் வைத்தார். அவர்.

"எதுக்கு... எல்லாம் வீட்லையே எழுதி எடுத்துக்கிட்
வந்துட்டேன்..." பாக்கெட்டில் இருந்து ராஜினாமா கடிதம்
அவர் எதிரில் நான்காய் மடக்கி நீண்டது.

உடனேயே வாங்கி அதில் ஃபார்வேர்ட் என்று எழு
கையெழுத்திட்டு தனது அசிஸ்டென்ட்டை அழைத்
பர்சனல் டிபார்ட்மெண்டில் சேர்க்கச் சொன்னார் அவர்.

காலையில் பேப்பரில் தனது ராசி பலனில் 'ஏழரை சன்
கழிவிடை' என்று எழுதியிருந்ததையும் நினைத்
கொண்டாரோ என்னவோ?

ஃப்ளோருக்குள் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு ஒ
நடை நடக்க ஆரம்பித்தான் தமிழ்மணி. நான் பார்த்
கொண்டேயிருந்தேன்.

'தமிழ்... சுத்தாதே... உன் ப்ளேசுக்கு போ. அங்க என்ன
பேச்சு? ஒழுங்கா வேலையை பாக்கற வழியப் பாருய்யா'
என்று கீறல் விழுந்த ரிக்கார்டாட்டம் சதா சர்வகாலமும்

முணு முணுக்கும் சூப்பர்வைசர்கள் அவனை நெருங்கி
வந்தார்கள்.

"சுத்தாதே... பேசாதே... அங்க நிக்காதே... இங்க
உட்காராதே பருப்பெல்லாம் இனி வேகாது சார்.
நீங்கள்லாம்தான் இனி இங்க கெடந்து சாகணும். எனக்கு
அப்படியில்லை. கடவுள் கண்ணைத் திறந்துட்டான்"
என்றபடி ஒவ்வொருவராகப் போய்ப்பார்க்க ஆரம்பித்தான்.

"என்ன டாவ் எழுதிக் கொடுத்துட்டியா?"

"பின்ன... இன்னும் கிடந்து சீரழியச் சொல்றியா?"

"லட்சத்தை என்ன பண்ணப் போறே?"

"கோடியாக்குவேன்!"

"பிசினஸா... என்னா பிசினஸ்?"

"கந்து வட்டிதான். வேணுமா, நூத்துக்கு பத்து ரூவாதான்
வட்டி."

"ஐயோ... அதெல்லாம் உனக்கு அடங்கி வருமா?"

"வருமாவா... வந்தாகணும். நம்ம மக்கள் யாருக்காவது
அவசரம் ஆத்திரம்னா அஞ்சு வட்டிக்குத் தருவேன்.
சொல்லு. எல்லார்கிட்டேயும் என்ன?"

"சரி டாவ். பார்த்து!"

"பாக்கத்தானே போறே... அடுத்து இந்தக் கம்பெனிக்கு
இப்படி பஸ்ஸுல புளிமூட்டையாட்டம் நசுங்கிக்கிட்டு
வரமாட்டேன். மாருதிதான்!"

"அது சரி... விடு. ஆமா எழுதிக் கொடுத்துருக்கியே,
பிடித்தம் எவ்ளோ தேறும்?"

"என்னா ஒரு எம்பது வரும்னு நினைக்கறேன். அதை
அப்படியே ரஜினி படம் எடுக்க பார்ட்னர் ஒருத்தருக்கு
ஒதுக்கப்போறேன். வா தம்மடிப்போம்."

"இப்பத்தான் அடிச்சுட்டு வந்தேன். கோழிக்கா
பாத்துக்கிட்டேயிருக்கான். நீ கிளம்பு."

"பாத்தா பாக்கட்டும் நீ வா. எதுனா கேட்டா. கண்
முழியை நோண்டிப் பிடறேன்.

அவர்கள் அப்படியே தொழிற்சாலையின் வ
மண்டமாகக் கருதப்படும் டாய்லெட் அறை நோ
நடந்தனர். வழியில் என்னையும் அழைத்தனர். "குமா
வர்றியா?"

நானும் கிளம்பினேன்.

உள்ளே கவளம் கவளமாகப் புகைக் கொட்டாரம்.

ஊதும்போது பூமிப் பந்தையே ஊதிப் பார்ப்பது போ
ஒரு நினைப்பு. உதட்டைக் குவித்து புகை பிரிக்கும் போ
தனக்கு அடிமைப்பட்ட ஒன்றை விடுவித்துப் பார்க்கு
உணர்ச்சி.

"வா டாவ்... ஃபைனான்ஸ் கம்பெனி நடத்
போறியாமே?" என்று ஒருவன் அதற்குள் கந்து வட்டி
தொழிலுக்கு ஒரு கிரீடம் சூட்டிக் கேட்டான்.

"அ... ஆமாம்ப்பா! உனக்கு எதுனா தேவைப்பட்ட
வந்து பாரு..."

"கம்பெனிக்கு என்ன பேர்?"

"குபேரசாமி ஃபைனான்ஸ்னு வைச்சுக்கோயேன்."

"நல்லாருக்கு. நீயும் குபேரனாயி எல்லாரையும்
குபேரனாக்கணும். ஆமா தேக்கு பாக்குன்னு எதுனா
பிளான் உண்டாம்மா...?"

"எதுக்கு... இல்லை எதுக்குன்னேன். என்னை என்
மெட்ராஸ்காரன்னு நினைச்சியா? நான் மதுரைக்காரன்டா
தேக்கு வைக்கறேன்னு சொல்லி பின்னால சிக்கிக்க

கூடாது. மரம் வைக்கிறேன்னு சொல்லி பின்னால
சிக்கிக்கக்கூடாது. மரம் வெட்டிக்கிட்டிருக்கற காலத்துல
ஒருத்தன் மரம் வைக்கறேன்னு சொல்றான்னா அவன்
எவ்ளோ பெரிய டுபாக்கூர்னு தெரிய வேண்டாம்.

"அதான் கவுத்து மூடிட்டு ஓடிட்டாங்களே... என் ரூட்
வேற! பிளாக் தண்டர்மாதிரி எதுனா பண்லாமான்னு
பாக்கறேன்."

"அதுக்கு பல கோடி ஆகுமேப்பா."

"என்னா பெரிய கோடி. ஆளுங்கட்சி வட்டச்
செயலாளராகி அப்படியே எம்.எல்.ஏ.க்கு ஒரு முட்டு
முட்டி சட்டசபைக்கு போய்ட்டா தானா வந்துட்டுப்
போகுது கோடிங்க."

-தமிழ்மணி புகையைக் கக்குவது போலவே
நகைகளையும் கக்கியவண்ணமிருக்க அந்த பிரதாபத்தில்
மற்றவர்களும் கரைந்த வண்ணமிருக்க, ஒருவன் மட்டும்
பெரிய புத்திசாலிபோல சற்றுச் சிரித்தான்.

"என்னடா இளிப்பு?"

"இல்ல... எம். எல். ஏ. கோடின்னு நீ பாட்டுக்கு
பங்களாவா கட்டிக்கிட்டு போறியா அத நினைச்சேன். என்
மாமா முப்பது வருசமா கட்சில இருக்கார். கவுன்சிலரா
கூட ஆக முடியலை..."

"அப்படீங்களா... நீ கூடத்தான் பத்து வருஷமா சீட்டு
வாங்கறே? உழுந்திச்சா. எனக்கு உழுவலை? அதுக்கெல்லாம்
சுழி இருக்கணும்டா. எனக்கு இருக்கு அதான் அடி
போடறேன். ஏண்டா சினிமால அஞ்சு நிமிசத்துல ஒரு
பாட்டுல ரஜினி கோடீஸ்வரனாகறத ஒத்துப்பீங்க நான்
சொல்றத ஒத்துக்க மாட்டீங்களோ?"

"அப்ப ஒரு பிடி பிடிக்கப் போறே... அப்படித் தானே?"

"பின்ன... மோதிப் பாத்துர வேண்டியதுதான்."

"எங்களையெல்லாம் மறந்துராதே தமிழு!"

"எப்பவும் பழச மறக்கறவன் இல்ல இந்த தமிழ். நம்ப யூனிஃபார்ம் டிரஸ்ஸை சர்வர் சுந்தரம் நாகேஷ் மாதிரி எப்பவும் வைச்சிருப்பேன். தெரிஞ்சுக்குங்க வரட்டா?"

"அப்ப அடுத்து மாருதியிலதான் வருவே."

"பாக்கத்தானே போறே?"

மறுநாள்–

வழக்கம் போல பஸ்ஸுக்கு நின்று கொண்டிருந்த போது அந்த லாட்டரி சிறுவன் வந்து சேர்ந்தான்.

"சார்... தமிழ்மணி சார் வர்லீங்களா?"

"இனிமேட்டு வர மாட்டான் தம்பி பிரைஸ்ல பாதி தருவான்னு நம்பிக்கிட்டிருக்கியா?"

"சேச்சே... அதெல்லாமில்ல சார்" என்று அவன் சாதாரணமாக மறுத்து பதிலளித்த போது எனக்கு ஆச்சர்யமாகத்தானிருந்தது.

"அப்ப எதுக்கு அவனைத் தேடறே?"

"ஒரு போட்டோ படம் எடுத்துக்க சார்... நான் வித்த சீட்டால ஒருத்தர் லட்சாதிபதியாகியிருக்கார். அதைக் காட்டி வித்தா நிறைய சீட்டு விக்கலாம்ல..."

அவனது ஆசை நியாயமாகப் பட்டது. அதே சமயம் எப்படி அந்தப் பாதித் தொகை மேல் துளிக்கூட ஆசையில்லாமல் பேசுகிறான் என்கிற ஆச்சரியம் தாடையைச் சொறிய விட்டது.

"தமிழ் சார் மாதிரி ஒரு நாளைக்கு எவ்வளவோ பேர் வாங்கறாங்க சார். பரிசும் விழுந்திருக்கு ஏதோ ஒரு

வேகத்துல சீட்டு விக்கச்சே பேசற பேச்சு சார் அது. அவ்ளோதான். அது சரி, அவர் ஊடு எங்க இருக்கு தெரியுமா சார்..."

தயக்கத்தோடு அட்ரஸைக் கொடுத்தேன். கொடுக்கும் போது பஸ்ஸில் தமிழ்மணி காதில் சொன்னது எதிரொலித்தது.

"லட்சத்துல பாதிய கொடுக்க நான் என்ன இளிச்ச வாயனா! என்னை வெச்சு அவனுக்குல்ல பேர். போட்டோ பிடிச்சுக்கறேன், வீடியோ எடுக்கறேன்னு எப்படியும் வீட்டுக்கு வந்து நிப்பான். ஒரு போசுக்கு நூறு ரூவான்னா போஸ் தரேன் இல்லாட்டி போயிரும்பேன்! லட்சுமி வர ஆரம்பிச்சுட்டா கொமாரு அவ வர்ற வழியை அடைக்கக் கூடாது. நாலா பக்கமும் வர உடணும். என்ன சொல்றே?"

என்னத்தைச் சொல்வது?

4

மூன்று மாதம் ஓடி விட்டது. நாட்களின் எந்திர கதியை நினைத்து எனக்கே பெரிய மலைப்புதான்.

கண்ணாடி முன் நின்று பார்க்கும் போது மீசையில் நரைகள். ஒரு முடிக்கு மறுமுடி என்று யூனிஃபார்மாய் நரை. எனக்குத் தெரியாமல் இரவில் நிகழ்ந்து விட்ட புதிய மாற்றம். என் முடி கூட என் வசத்தில் இல்லை என்று அதன் நிமித்தம் ஒரு கவலை.

கண் பார்வையிலும் கொஞ்சம் சிக்கல்.

வயது நாற்பதில் சாளேஸ்வரம் வருமாமே?

அதன் ஆரம்பங்கள் தெரிந்து மிரட்டுகின்றன.

என்ன வாழ்க்கை இது... புரிபடவோ பிடிபடவோ மறுக்கிறதே?

இன்னும் அரைமணி கூட இல்லை. குளித்து டிபன் என்று ஒன்றைக் கொரித்து விட்டு டூட்டிக்கு கிளம்பியாக வேண்டும். போகவும் பிடிக்கவில்லை-போகாமல் இருக்கவும் பிடிக்கவில்லை.

எல்லாம் எஸ்.எஸ்.எல்.சி.யில் செய்த தப்பு.

கட் அடித்து விட்டு காலைக் காட்சிக்குப் போனதன் கோளாறு. எல்லாவற்றிலும் பார்டரில்தான் பாஸ் செய்ய முடிந்தது. சொச்சத்தை சிவாஜியும் எம்ஜியாரும் அன்று பிடுங்கிக் கொண்டார்கள். இன்று அந்த இடத்தில் ரஜினி கமலோ?

அன்று கடிவாளக் குதிரையாக இருந்த என் பல நண்பர்கள் இன்று டாக்டர், எஞ்ஜீனியர்கள்.

அவ்வளவாய் வியர்க்காத உத்யோகஸ்தர்கள்.

இன்கம்டாக்ஸ் அசசிகள்.

நான் ஆகிவிட்டேன் தொழிற்சாலை அகதியாய்...

சில உத்யோகங்கள், இந்த பார்டர் கேஸ்களுக்கு என்றே இருக்கிறதே? ஞானம் இடிக்கிறது. பெற்ற பிள்ளையை யாவது ஒழுங்காகப் படிக்க வைத்து விட வேண்டும். ஹிந்தி வேண்டாம் தமிழ் போதும் என்கிற வட்டார வந்தே மாதரத்துக்கு டாட்டா சொல்லியாக வேண்டும். இரண்டும்தான் வேண்டும்.

''டேய் படிடா... நல்லா படி. டீ.வி. பார்க்காதே''-இந்த கேபிள் டீ.வி. எழவ முதல்ல கட் செய்யணும். அன்று நான் தேடிப் போய் அழித்தேன். இன்று அதுவே வீடு தேடி வந்து

அழிக்கிறது. ரூவாய்க்கு மூன்று பொருள் மாதிரி வேளைக்கு மூன்று சினிமா!

எடிசா... குரங்குகள் கைகளில் பூமாலையைத் தந்து விட்டவனே...

நிதமும் இப்படித்தான் குமுறல். சிந்தனைச் சிதறல். பின்பு உத்யோகப் புறப்பாடு.

நடுநடுவே அலுப்பு சலிப்பு நிமித்தம் வரக் கூடாத நினைப்பெல்லாம் வரும்.

இன்று யூனிஃபார்ம் சகிதம் கிளம்பும் போதும் டீ.வி. யில் ஐம்பது கிராம் தங்கத்தோடு லாட்டரிப் பரிசு பற்றிப் பிரபல நடிகர் ஒருவர் பீற்றினார்.

சட்டென்று பொறிதட்டி மறந்து போன டாவ் தமிழ் மணி ஞாபகத்தில் வந்தான்.

'லட்சத்தை கோடியாக்குவேன்- மாருதி வாங்கி பி.எம். காரை ஓவர்டேக் செய்வேன் எம்.எல்.ஏ. ஆகி கோடீஸ்வரனாவேன் என்று அன்று கண்ட கனவெல்லாம் ஞாபகத்தில் வந்தது.'

நமக்குத்தான் பிழைக்கத் தெரியவில்லையோ?

போய்த் தொலைகிறது என்று ஒரு நூறு ரூபாய்க்கு மாதா மாதம் வாங்குவோமா?

பத்திரிகைக்குப் பத்திரிகைதான் தாயத்து எந்திரம் என்று தந்து நமக்கு உதவி வருகிறார்களே. அதில் ஒரு எந்திரம் நம்மை குபேரனாக்காதா என்ன?

புத்தி லாட்டரி நிமித்தம் எங்கெங்கோ போகிறது.

அது எங்கே போனால் என்ன... இன்றைக்கு வேலைக்குப் போயாக வேண்டும். ஸ்பேனர் செட்டும் மைக்ரோ மீட்டர்களும் காத்திருக்கின்றனவே? ச்ச்சை...

வேலைக்கு நடுவே வசந்த மண்டபம் வரை போ
வரும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. போன போது வழக்
போல புகை மூட்டம் நடுவில் தேவசஞ்சாரம். படையப்
விமர்சனம் காதில் விழுந்தது.

"விசைத் தத்துவத்தையே மாத்தறார்டா உங்க ரஜி
வேலை எடுத்து உட்றாரு. அது ரிவர்ஸ்ல திரும்
நட்டுக்கிட்டு நிக்குது. சூப்பர் பங்காளி..."

"அது சரி போ... வளத்த மரத்தையே புடுங்கிக்கிட்
போய் நட்டு உங்க மருதநாயகம் புரட்சி பண்ணலா
நாங்க பண்ணக் கூடாதோ? அடுத்த சிஎம்டி எங்கா
பாத்து பேசு."

"அப்ப நீதான் தலைமைச் செயலாளர்ன்னு சொல்லு."

அரசியல் சினிமா எல்லாவற்றிலும் ஏளனம். அதை
பொழுதுபோக்கு அம்சமாகக் கருதும் மடைமை. அப்ப
தானே அவையும் ஆகிவிட்டன.

சரியான செக்குமாட்டு வாழ்க்கை என்று சலிப்பு மூண்
எழுந்த போது டாவ் தமிழ்மணி பற்றி காதில் விழுந்தது.

"நம்ம டாவ் விஷயம் கேள்விப்பட்டியா?"

"என்னாடா... குபேரசாமி ஃபைனான்ஸ் ஆரம்பிச்
டானாக்கும்."

"கிளிச்சான். லாட்டரி பணம், கம்பெனி பண
இரண்டையும் சேத்து ஒரு டுபாக்கூர் பார்ட்டிகிட்
வட்டிக்கு ஆசைப்பட்டு கொடுத்துருக்கான். அவன் கடத்
சரக்கு விக்கறவனாம். இவன் கிட்ட பணத்தை வாங்கிட்டு
போய் சரக்கு வாங்கிக்கிட்டு வந்து இவனையும் கூட்
சேர்த்துக்கிட்டு வித்துருக்கான். இதை எவனோ ஒருத்
போலீஸுக்கு போட்டு விட வகை தொகையில்லா

மாட்டி ஒரு மாசம் சேலம் ஜெயில்ல ஐயா கம்பி
எண்ணியிருக்கார்."

எனக்கு அடுத்த நொடி நெஞ்சையடைத்தது.

"ஏய் நிஜமாவா?"

"உம் போய்ப் பாரு..."

"இப்ப வெளிய வந்துட்டானா?"

"வந்தது மட்டுமா... மானேஜரை ஊட்ல பார்த்து கால்ல
விழுந்துருக்கான். திரும்ப வேலைக்கு எடுத்துக்கச் சொல்லி.
அவர் ஜெயிலுக்குப் போன கேசுக்கு வேலை தர சட்டத்துல
இடமில்லைன்னுட்டார்."

"எதுவுமே எனக்குத் தெரியாதே..."

"அதுக்குத்தான் அப்பப்ப நம்ம வசந்த மண்டபத்துக்கு
வரணும்கறது."

"பாவம்டா டாவ்... கோடீஸ்வரன் குபேரன்னு கனா
கண்டுட்டு இப்ப பஸ் ஸ்டாண்டை சுத்தறான்."

"எதுக்கு?"

"போய்ப் பாரு தெரியும்."

"இன்னிக்கு காலைல கூட பஸ் ஸ்டாண்டுலதானே பஸ்
ஏறினேன்."

"நம்ம ஆபீஸ் டயமான ஒன்பது டு பத்து மணிவரை
ஐயா தலைமறைவாயிடுவார். அப்றமாத்தான் ஆஜராவார்.
ஏன்னா நாமெல்லாம் பாத்து சிரிப்போம் பாரு..."

"சிரிப்போமா...?"

"போய்ப் பாரு தெரியும். ஐயா இப்பவும்
குபேரசாமிதான்."

புதிர் போடுகின்றது புகைவிடும் கூட்டம். எனக்கு ஆச்சரியமும் அதிர்ச்சியும் கூடிப் பிரசவித்த குழப்ப அலைகள்!

பஸ் ஸ்டாண்ட்.

பத்து மணி கடந்தவேளையில் உள்ளே நுழைகிறேன். பரபரப்பான பிழைப்புத் தகிடுதத்தங்கள்.

ரிஸ்ட் வாட்ச் செய்த பாவம் பத்து ரூவாய்க்கு வாங்க ஆளில்லை.

(வாங்கின பத்தாவது நிமிடம் அது சுண்ணாம்பு டப்பாவாகப் போவது வேறு விஷயம்.)

புதிதாக ஒரு கூட்டம் டிட்டிபேட் கரடியை விற்க பார்க்கிறது. அசல் கரடியை வைத்து ஒரு பக்கமாக தாயத்து வியாபாரம் வேறு. போண்டாவ இருந்து பொண்டாட்டி வரை வாங்கலாம் என்று யாரோ சொன்னதெல்லாம் பொய் ஓட நான் டாவ் தமிழ்மணியைத் தேடுகிறேன்.

எனக்கு அவன் சூரியனாக இருப்பான் என்று எண்ணியிருந்தேன். என்னவானான் என்பது தெரிந்தாக வேண்டும். ஃபேக்டரியில் நண்பர்கள் பேசியது நிஜம்தானா?

தமிழ்...

தமிழ்மணி...

எங்கய்யா இருக்கே?

தேடித் தவித்த போது காதில் விழுந்தது அவன் குரல்.

"சிக்கிம் ஒரு லட்சம். பூடான் மூணு லட்சம். ஓரிஸ்ஸா நேபாள் பத்து லட்சம் சார். குபேரசாமி சன்னதில வெச்ச பூஜை செஞ்சு எடுத்துக்கிட்டு வந்த சீட்டு சார். பத்து சீட்டுக்கு ஒரு பரிசு உத்தரவாதம்!"

-அவன்தான்... அவனேதான்! அடப்பாவி எதால் மூழ்கினாயோ... அதைக் கொண்டே பிழைப்பா...? நான் பார்த்துக் கொண்டேயிருக்கும்போது ஒருவர் அவனை கடிக்கிறார்.

"சிக்கிமும் பூடானும் இருக்கட்டும். மதுரை எத்தனை லட்சம் அதச் சொல்லப்பா."

"அத நீங்க வாங்க முடியாதுண்ணே. நீங்க ஓரிஸ்ஸா வாங்குங்க. உழுவாட்டி கேளுங்க..."

"என்ன வாங்குன காசைக் கொடுத்துடுவியோ?"

"வாங்கிக்குங்க. இப்ப என்ன ஒரு ரூவாதானே?"

"பரவால்லியே... சரி சரி ஒரு பத்து சீட்ட கொடு."

"அண்ணே உழுந்தா நம்மளை மறந்துடாதீங்க..."

"பாதிய கொடுத்துட்றேன்"-அவன் அப்படிச் சொல்லும் போது அவன் முகம் ஒரு தினுசாக மாறிப் போகிறது. அப்படியே என்னையும் பார்த்து விடுகிறான். நிமிட நேரம்தான் தடுமாற்றம் திகைப்பு எல்லாம் சட்டென்று சுதாரித்து அங்கிருந்து நழுவுகிறான்.

"தமிழ்... தமிழ்மணி... நில்லு."

என் குரலுக்கு அவன் திரும்பத் தயாரில்லை. திரும்பவும் முடியாது.

"என்ன சார் உங்க தோஸ்த்தை கூப்பிடறீங்களோ அவர் இப்ப தமிழ்மணி இல்ல சார். குபேரசாமி!"

-பக்கவாட்டிலிருந்து ஒரு குரல். அந்த லாட்டரி விற்கும் சிறுவன்.

"நீயா..."

"ஆமாம் சார்..."

"என்ன வெறும்கையோட நிக்கறே சீட்டு விக்கலை."

"அவர் பாதி கொடுத்தாரோ கொடுக்கலையோ நான் முழுசாவே கொடுத்துட்டேன். நான் இப்ப ஏஜெண்ட் அந்தப் பொடியன் கண்ணடித்துச் சிரிக்கிறான்.

எனக்கு நிற்கும் இடம் நரநரக்கிறது.

காலடியில் கஜகர்ண மாற்றங்கள்.

"ஆமாம் உன் பேர் என்ன?"

"ராமச்சந்திரன் சார்... வரேன்."

-போகிறான் அவன் அந்த ராமனைப் போலவே சொல்லில் நின்று விட்டான்.

நான் திரும்புகிறேன்.

வயிறு... பாழாய்ப் போன வயிறு...

ஒரு ஜனத்தை இன்னொரு ஜனம் விழுங்கும் முகாந்தரத்தில் மும்முரமாக இருக்கிறது.

எனக்கு மட்டும் சற்று தெளிவு.

அனைத்துக்கும் நடுவில் தர்மச்சக்கரம் மட்டும் சரியாகவே சுற்றுவதாக!

(முற்றிற்று)

ாக்கறே சீட்டு விக்கலை.''
ாரோ கொடுக்கலையோ நான்
டன். நான் இப்ப ஏஜெண்ட்
ித்துச் சிரிக்கிறான்.
ரநரக்கிறது.
ற்றங்கள்.
ன?''
ரேன்.''
அந்த ராமனைப் போலவே
.
ன வயிறு...
னொரு ஜனம் விழுங்கும்
இருக்கிறது.
தளிவு.
ில் தர்மச்சக்கரம் மட்டும்
றிற்று)

உயிரின் மறுபக்கம்

1

ஒவ்வொரு உயிரும் இருவித தேகங்களால் ஆனது. ஒண்ணு திடரூபம். இன்னொண்ணு சூட்சும ரூபம். இதில் திடரூபம் இயங்க சூட்சும ரூபத்தின் ஒத்துழைப்பு தேவை. ஆனால் சூட்சும ரூபம் இயங்க திடரூபம் தேவையில்லை. இந்த சூட்சும ரூபத்தை கல்பயோக பயிற்சியால் உடம்பில் இருந்து பிரிக்கலாம். பிரித்து எடுத்து அமெரிக்காவை ஒரு சுற்று சுற்றிவிட்டு வந்து திரும்ப நமது உடலுக்குள்ளும் நுழைந்து கொள்ளலாம். விக்ரமாதித்தன் காலத்தில் இதில் வித்தகர்கள் பலர் இருந்தனர்.

'ரசிக ரஞ்சனி' வார இதழ் அலுவலகத்தில் எடிட்டோரியல் மீட்டிங் ஆரம்பமாகியிருந்தது. வட்டமேஜை. ஒன்பது நற்காலிகள்! சப் எடிட்டர்கள் நான்கு பேர். ரிப்போர்ட்டர்கள் நான்குபேர். நடுவில் திவ்ய ஸ்வரூபத்தோடு எடிட்டர் வீரபாரதி வரும் வாரத்திற்கான முதல் தேவை பற்றித்தான் பேச்சு எழும்பியது. தலையங்கம் வழக்கம் போல எடிட்டர் பார்த்துக் கொள்ள வேண்டும்.

கார்கிலுக்கு உதவுவதாக வேண்டுகோள் வைக்கவேண்டும் உம் அடுத்து...?

போய்க் கொண்டிருக்கும் ஒரு தொடர்கதை ரொம்ப அறுப்பதாக வந்திருக்கும் வாசகர் கருத்து பற்றி பேச்சு எழும்பியது.

"அந்த ரைட்டரை கூப்டு முடிச்சுக்க சொல்லுங்க" என்று அதற்கும் ஒரு முற்றுப்புள்ளி வைத்தார் எடிட்டர் வீரபாரதி.

அப்புறம் ஒரு பழம் பெரும் நடிகையின் பேட்டி அவர் இப்போது சாப்பாட்டுக்கு படும் கஷ்டம் பற்றி லேசாக ஆரம்பித்தார் ஒரு சப் எடிட்டர்.

"சாப்பாட்டுக்கே கஷ்டப்படும் ஜென்மங்களில் பல லட்சம் பேர் இருக்க நடிகைக்கு மட்டுமென்ன முக்கியத்துவம் தூக்கி உடப்பில் போடுங்க" என்றார் பதிலுக்கு இன்னொரு சப் எடிட்டர். வீரபாரதியிடம் ஆமோதிப்புப் பார்வை.

வீரப்பன் பற்றி பேச்சே இல்லையே என்றார் ஒருவர். என்ன செய்யலாம்...? காட்டுக்குப் போய் நலம் விசாரிச்சு வந்து ஒரு நாலுவாரம் பரபரப்போடு எதையாவது எழுதலாமா என்று கேட்டார் இன்னொருவர்.

நடுவில் எதுவும் பேசாமல் உம்மென்றிருந்தான் ஸ்ரீநாத். பிரதம துணை ஆசிரியர். வீரபாரதிக்கு பிறகு அவர்தான் அந்த சீட்டுக்கு என்பது நேற்று வரை நிலவிய நிஜம். இன்று அதை அசைத்துப் பார்க்க ஒருவன் வந்துவிட்டான். அதுவும் வேறு ஒரு பத்திரிகையிலிருந்து பெயர் ஜான்சன்.

ஆச்சரியம் ஜான்சன்கூட பேசாமல் உட்கார்ந்திருந்தான். வீரபாரதி கவனித்துவிட்டு கேட்டார்.

"என்ன ஜான்சன் உங்க ஸ்பெஷல் சஜெஷன் ஏதாவது உண்டா?"

"எல்லாரும் பேசி முடிக்கட்டும் சார்..." ஒற்றை வரியில் பதில்.

"ஸ்ரீநாத் நீங்க...?"

"நான் கார்கிலுக்கு நேரா போய் வந்து உணர்ச்சி பூர்வமா ஒரு கட்டுரை எழுதலாம்னு நினைக்கறேன் சார்..."

"நல்ல ஐடியா... வேற...?"

"சர்க்குலேஷன் ட்ராப் ஆறத பத்தி கொஞ்சம் யோசிக்கணும் சார்."

"என்ன காரணம்னு நினைக்கறீங்க?"

"படிக்கறவங்கள்லாம் பாக்கறவங்களா மாறிக்கிட்டு வராங்க சார். ஐ மீன்... டி.வி. நம்ம வாசகனை தன் வசப்படுத்திகிட்டு வருது. அதுல இருந்து வாசகனை மீட்கணும்."

"எப்படி?"

"அந்த மீடியால பாக்க முடியாத ஒண்ணை, அந்த மீடியா மூலமா கிடைக்க முடியாத ஒண்ணை நாம பண்ணனும்?"

"அதுதான் என்ன?"

"த்ரில்லா... இன்ட்ரஸ்டிங்கா எதாவது?"

"என்ன எதாவது அட்வைன்சர் சமாசாரமா..."

"அது கூட கொஞ்சம் பழசு. அதத் தாண்டி புதுசா ஒண்ணு..."

"என்னன்னு சொல்லுங்களேன்..."

"நம்ம புத்தகம் வாங்கற வாசகனுக்கு அவனோட பிரச்சினை ஒண்ணை தீர்த்து வைக்கறதுன்னு..."

-ஒரு சப் எடிட்டர் சொன்ன மறுநொடி க்ளுக்கென்று சிரிப்பு வந்துவிட்டது ஜான்சனுக்கு. சொன்னவருக்கும் மூக்கில் குத்து வாங்கியதுபோல ஒரு வேதனை.

''ஜான்சன் சிரிச்சதுக்கு காரணம்?''-வீரபாரதி நறுக்கினார்.

''பின்ன என்ன சார்... வாசகனோட பிரச்சினைகள் எப்படிப்பட்டதுன்னு தெரியாம தீர்த்து வைக்கறோம்னா எப்படி? ஒருத்தன் வந்து எம்பொண்டாட்டி இன்னொருத்தனோட ஓடிட்டான்னுவான், இன்னொருத்தன் எனக்கு பத்துலட்ச ரூபா கடன்னுவான்...''

''யூ ஆல் ரைட்... எப்படிப்பட்ட பிரச்சினைகளை தீக்கறதுன்னு ஒரு வரைமுறை வேணும்...''

''நாம யாரோட பிரச்சினையையும் தீர்த்து வைக்க முடியாது சார். நமக்கே ஆயிரம் பிரச்சினை... அதை தீத்துக்க தானே இந்த மீட்டிங்.''

''நோ... நாம ஒரு மீடியாவுல இருக்கோம். நம்ம சக்தி நமக்குத்தெரியணும் முதல்ல. நாம மனசு வெச்சா என்னென்னவோ பண்ணலாம்.''

''என்னென்னவோன்னா அதான் என்ன?''-ஜான்சன் கூடாக ஆரம்பித்தான். ஜான்சன் பேசுவதைப் பார்த்தால் தனக்குத்தான் எல்லாம் தெரியும். தன்னால் மட்டுமே சரியாக யோசிக்க முடியும் என்பது போன்ற ஒரு ஆங்காரம் தெரிந்தது. அது ஸ்ரீநாத்தை சற்று உறுத்தியது.

''மிஸ்டர் ஜான்சன்... முதல்ல கொஞ்சம் சிரிக்காம கேலிஃபீல் இல்லாம பேசுங்க. இந்த கருத்தை சொன்ன சப் எடிட்டர் ரங்கசாமிக்கு இந்த துறைல இருபது வருஷ அனுபவம் இருக்கு. உங்களப்போல பத்திரிகைக்கு தாவி வந்த கேஸ் இல்ல அவர்...''

''அப்படிப்போடு! மத்த சப் எடிட்டர்களிடம் சற்று தெம்பு பரவியது. வீரபாரதி விட்டுப் பிடித்தார். பத்திரிகையாளர்களிடம் இந்தப் போட்டி பொறாமை அவசியம். என்ன... சற்று வரம்பு மீறாமல் மனம் காயப்படாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஜான்சன் இப்பொழுது சீட்டை விட்டு எழுந்து நின்றான். உரக்கப் பேச ஆரம்பித்தான்.

''நான் நிறைய பத்திரிகை தாவினவன்தான், காரணம் வளரணும்கற ஆசை. வளத்துக்கணும்கற தாகம். அதுக்கு இடமில்லாத இடத்துல என்னால செயல்படமுடியாது. இந்த இடமும் அப்படின்னா நான் இப்பவே கிளம்பறேன்.''

-தெரியும்... அவன் அப்படிப் பேசுவான் என்று... வீரபாரதி அவனைப் பார்த்து உட்காரச் சொன்னார்.

''உக்காருங்க ஜான்சன். நீங்க இங்க வளர ஒரு தடையும் இல்ல. கோபப்படாம என்ன செய்யலாம்னு அதைச் சொல்லுங்க...''

''ஏன் இல்ல... நான் ஒரு வழி சொல்றேன். ஸ்வாமி சக்கரவர்த்தி பரந்தாமன்னு ஒருத்தர் உங்களுக்கும் தெரிஞ்சிருக்கும். மிகப் பெரிய மேதை. இந்த இந்தியாவுல அவர் இருக்கும்போதே ஜப்பான்லேயும், அமெரிக்காலேயும் உள்ள நண்பர்கள் எதிரிலேயும் தோன்ற முடிஞ்சவர். ஒரு மனிதனைப் பார்த்த மாத்திரத்தில் அவனைப்பத்தி பிட்டுப் பிட்டு வைக்கவும் கூடியவர்.

நம்ம வாசகர்கள் பிரச்சினைகளுக்கு இறந்துபோன மனிதர்களின் ஆத்மாக்களின் துணையோட பதில் தருவார் அதனால் அவங்க பிரச்சினைகள் தீரும்.''-ஸ்ரீநாத் சொல்லவும் ஜான்சனிடம் திரும்பவும் சிரிப்பு. அது ஸ்ரீநாத்தை கீறியது.

"சிரிக்காதீங்க ஜான்சன். நான் சக்கரவர்த்தி பரந்தாமனைப் பத்தி நிறைய கேள்விப்பட்டிருக்கேன். அ ஒரு அபூர்வ மனிதர்."

'அப்படின்னு உங்களை சொல்லச் சொன்னாராக்கும்'

"நான்சென்ஸ்... என்ன பேசறீங்க...?"

"பின்ன ஒரு பத்திரிகையாளரா இருந்துகிட்டு ஆ பூதங்களை நம்பறவரைப் பத்தி பேசினா சிரிப்பு வராதா?"

"பத்திரிகையாளனுக்கு என்ன கொம்பா முளைச்சிருக் அவனும் பிரச்சினைகள் உள்ள மனிதன்தான். ஞாபக இருக்கட்டும்."

"பிரச்சினை எல்லாருக்கும் இருக்கு. பத்திரி யாளனுக்கு கூடவே இருக்கு. நான் அதை மறுக்க அதுக்காக கொஞ்சம் கூட சென்ஸ் இல்லாம பே கூடாது..."

"எது சென்ஸ் இல்ல? இந்த ஆவி பூதம் மனுஷங்கஞ் வக்காலத்து வாங்கிப் பேசறதா?"

"உண்மை யார்கிட்ட இருந்தாலும் நாம வக்காலத் வாங்கலாம் தப்பில்லை?"

"எது உண்மை?"

"சக்கரவர்த்தி பரந்தாமன் சொல்ற செய்யற எல்லாம்...?"

"எதைவெச்சுன்னு சொல்ல முடியுமா... ஐ மீ புரூஃப்...?"

"என் சுய அனுபவங்கள்..."

"என்ன அது?"

"என்ககு ஒரு சின்ன ஆக்சிடென்ட் ஆகும்னார். ஆனா எனக்கு பெண் குழந்தைதான் பிறக்கும்னார். பிறந்தது எவ்வளவோ சொல்லலாம்..." திரும்பவும் சிரித்தான்

ஜான்சன். திரும்பவும் வலித்தது ஸ்ரீநாத்துக்கு. இடையில் எழுந்தார் வீரபாரதி.

"ஓ. கே... உங்க பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி. மிஸ்டர் ஜான்சன் நீங்களோ இதை நம்பாதவர். அவரோ நம்பறவர். ஆகையால நம்பாத நீங்கள் ஏன் அந்த சக்கரவர்த்தி பரந்தாமனைப் போய் பார்த்து அவர் விஷயங்களை பொய்யின்னு சாதிக்க முயலக் கூடாது..."

"குட் ஐடியா சார். நான் ரெடி."-ஜான்சன் தூசு தட்டிக் கொண்டு நிமிர்ந்தான்.

"போங்க... போனாதான் தெரியும். அதிகப் பிரசங்கித் தனமா நடந்து அவர் கோபத்துக்கு மட்டும் ஆளாகிடா தீங்க. அப்புறம் அவ்வளவுதான்..." ஸ்ரீநாத்தின் எச்சரிக்கை ரோஷத்தை வரவழைத்தது ஜான்சனுக்கு,

"உங்க சக்கரவர்த்தி பரந்தாமன் ஒரு சராசரி மனுஷர் வெறும் பொய்ச் சாமர்த்தியங்கள் உடையவர்ங்கறத புரூஃப்பண்ணி உங்களைப் போல அவர் மேல நம்பிக்கை வெச்சு ஏமாந்துகிட்டிருக்கற பல லட்சம் பேர்களை நான் திருத்தலேன்னா நான் ஜான்சன் இல்ல..."

-ஜான்சனும் முண்டா தட்டினான். இடையில் ஒசைப்படாமல் ஒரு அதிர் வேட்டைத் தூக்கிப் போட்டார் வீரபாரதி.

"எனக்கு ரிடையர் ஆக இன்னும் ஆறுமாசம் தான் இருக்கு. இந்த அசைன்மென்ட்ல ஜெயிக்கற நபருக்குதான் அடுத்த ஆசிரியர் பதவி!"

2

'அமாவாசை... சூரிய ஒளிப்புனலின் கதிர் பிரபஞ்ச வெளியில் நிலவில் பதியாத தினம்.

இதன் இரவுக் காலம் சூட்சும சரீரங்கள் வெளிப்பட உகந்த காலம். கீழ் நோக்கிவரும் அவர்களின் பசியினைத் தீருங்கள். ஆசிகளைப் பெற்றுக் கொள்ளுங்கள்'

அலையடிக்கக் கிடந்தது சமுத்திரம்.

கரையில் நாணல் பூக்கள் - நண்டு விளையாட்டு. கூடவே சக்கரவர்த்தி பரந்தாமனின் திருப்பாதங்களும்.

சற்று தள்ளி மண்வெளிமேல் அவரது டாடா ஜெஸ் உஜாலா வெள்ளையில் டாலடித்தபடி...

கடலையே பார்த்தபடி நிற்கும் சக்கரவர்த்தி பரந்தாமனின் இடது ஜிப்பாவில் செல்போன் சிணுங்கியது.

எடுத்துக் காதைக் கொடுத்தபோது வீரபாரதி தான் பேசினார்.

''வணக்கம் நான் ரசிக ரஞ்சனி எடிட்டர் பேசறேன்...''

''சொல்லுங்க... ஜான்சன்கறவர் என்னை ஆராய வரப்போறாராக்கும்?''

''உங்களுக்கு எப்படி இவ்வளவு சீக்கிரமா...?''

''இப்ப பேசிகிட்டிருக்கற இந்த நிமிஷத்துல உங்க எதிரே டீ கப்புல டீ ஆறிக்கிட்டும் இருக்கணும் சரிதானா?''

''அது... அது... சரிதான். யாராவது கொஞ்சம் முந்தி சொன்னாங்களா?''

''சந்தேகமா... சரி இன்னொண்ணு சொல்றேன். உங்கபேத்திகள்ல ஒருத்தி இன்னிக்கு வயசுக்கு வந்துடுவா. அப்புறமா மிச்சத்த யோசிக்கலாம். நீங்க ஜான்சனை அனுப்பிவைங்க.''

-சக்கரவர்த்தி பரந்தாமன் செல்ஃபோனை அணைத்து பாக்கெட்டில் போட்டுக் கொண்டார்.

இருநூறு முன்னூறு அடித்தூரத்தில் பக்தர் கூட்டம் நெருக்கியடித்தபடி... தொண்டர்கள் குழுவும் போலீஸோரும் அடக்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் கழுத்தில் கேமராவுடன் ஜான்சனும் ஒருவனாக... தன் ஐடென்டி கார்டை ஒரு போலீசிடம் காட்டி சக்கரவர்த்தி பரந்தாமனை பார்க்க அனுமதி கேட்டுக் கொண்டிருந்தான். அவர் இப்பொழுது முடியாது என்கிற மாதிரி மறுத்துக் கொண்டிருந்தார். அவர் எதிரிலேயே தன் வசம் உள்ள செல்போனால் அவரைக் கூப்பிட்டான். அலை அவரது கால்களை மோதி மோதிக் கழுவிக் கொண்டிருந்தது.

''யெஸ் ஜான்சன்...''-அவர் மிக வியப்பளித்தார்.

''சார் நான்தான்னு எப்படி உங்களுக்கு...?''

''இதென்ன கேள்வி மிஸ்டர் ஜான்சன். நீங்க வாங்க. இந்த நிமிஷம் நீங்கதான் என்னோட நிழல். நிழலே வருக பேசியபடி திரும்பி ஜான்சனை நோக்கி நடந்துவர ஆரம்பித்தார்.

பக்தர்கள் கூட்டம் ஆர்ப்பரித்தது.

''ஸ்வாமி... கடவுளே... சாமி...'' விதவிதமான விளிப்புகள். காலில் விழல்கள் கன்னத்தில் போட்டுக் கொள்ளல்கள். அவர்களில் ஜான்சன் அவரை நோக்கி கேமராவும் கையுமாக முன்னேறத் தொடங்கினான்.

தடுக்கப் பார்த்தவர்களை ச.ப. வின் கரங்கள் சைகை காட்டியே விலக்கி விட்டது.

இருவரும் மணல் வெளிக்கரைமேல் ஒரு இடத்தில் நேருக்கு நேர் சந்தித்துக் கொண்டனர். சக்கரவர்த்தி பரந்தாமனுக்கு நல்ல கொக்கு பறக்கும் தாடி. அதன்

நுனியைப் பிடித்து முடிச்சு போட்டபடியே பேசுவது ச.ப. வுக்கு மேனரிசம்.

அது நடந்தது.

ஜான்சன் குட்மார்னிங் சொன்னான். சாதாரணமாக எல்லாரும் பார்த்த மாத்திரத்தில் ஆனந்தக் கண்ணீர் விடுவார்கள். மரம் மாதிரி காலில் விழுவார்கள். பூர்வ ஜென்ம புண்ணியம் உங்களை தரிசித்தது என்று சொல்லி பரவசப்படுவார்கள்.

ஜான்சனிடம் இந்தக் கூத்து எதுவுமில்லை.

ஆனாலும் அவனைத் தொட்டு ஆசீர்வதித்தார் ச.ப!

"நல்லா இருப்பே ஜான்சன் நீ..." என்றார்.

"எனக்கும் அதுல சந்தேகமில்ல சார். நல்ல பத்திரிகை நல்ல உத்யோகம், நல்ல சம்பளம், நானும் கடின உழைப்பாளி நல்லா இருந்துதானே தீரணும்?"

-அவன் பேச்சில் தொனிப்பது இறுமாப்பா தன்னம்பிக்கையா, இல்லை இரண்டும் கலந்த கலவையா என்பது தெரியவில்லை.

ச.ப. பார்வை அவன் பேச்சை மிக ரசித்தது.

"சரி போகலாமா?" கேட்டார். அவன் ஆமோதிக்க கிளம்பினார்கள். சுற்றி நிற்பவர்கள். ஆர்ப்பரித்தார்கள். ஸ்வாமி என்றார்கள்.

காருக்குள் ஏ.சி. ஜான்சனை சற்று யோசிக்க வைத்தது. உள்கூட்டிலும் ஏக அலங்காரங்கள். குஷன் இருக்கை போதாதென்று வெல்வெட் தலையணைத் திண்டுகள் வேறு. ஃப்ளாஸ்கில் காபி, டீ, ஹார்லிக்ஸ் என்று வகைக்கு ஒன்று.

கார் ஓடும் போது ஓடுவதே தெரியவில்லை. அந்த அளவுக்கு ஷாக் அப்சார்பர்கள் பொருத்தப்பட்டது போல ஒரு தொட்டில் தன்மை.

"என்ன சாப்பிட்றே?"-ச.ப ஜான்சனை உபசரிக்க ஆரம்பித்தார்.

"ஒண்ணும் வேண்டாம் சார். அசைன்மென்ட் சம்பந்தமா டூட்டில இருக்கறப்போ யார் எதைக் கொடுத்தாலும் வாங்கிக்கறதில்லை சார் நான்."

"நல்ல பாலிசி..."-என்றார் ச.ப. ஆனால் முகம் போன போக்கில் வழிசல். ஜான்சன் அதை கவனித்தான். மனதில் குறித்தும் கொண்டான்.

"சரி என்வரைல உன் அசைன்மென்ட் என்ன?"

"சராசரி மனிதர்கள்ல இருந்து நீங்க எவ்வளவு மாறுபட்டவர்ங்கறத விஞ்ஞானபூர்வமாக தெரிஞ்சுக்க விரும்பறேன்."

"தெரிஞ்சு...?"

"அதை எழுதுவேன்."

"எழுதி?"

"எழுதி எல்லார்க்கும் உங்க சக்தியை தெரியவைப்பேன்!"

"நான் தான் என் சக்தியை எல்லார்க்கும் தெரிவிச்சபடி இருக்கேனே... நீ வேற சேரணுமா?"

"இருந்தாலும் உங்க சக்தி எப்படிப்பட்டதுன்னு யாருக்கும் தெரியாதே?"

"அது தெய்விகமானது. அதுதான் இந்த உலகத்திலேயே உயர்ந்தது. இன்னும் சொல்லப்போனா அது வேற நான் வேற இல்ல...?"

"அப்ப நீங்கதான் கடவுளா?"

"இதை நான் பல ஆயிரம் தடவை கூறியிருக்கேன். இப்பவும் சொல்றேன் இப்பகூட நீ, என்னை எப்படி பார்க்க விரும்பறியோ அப்படி பார்க்கலாம்." ஜான்சனுக்கு அந்த பதில் ஆச்சரியமளித்தது. மனதில் அவன் எப்பொழுதாவது சர்ச்சுக்கு போகும் போது பார்க்கும் இயேசு கிறிஸ்துவின் சிலுவை சுமந்த பிம்பம் ஞாபகத்தில் மின்னியது.

அடுத்த நொடியே பக்கத்தில் அமர்ந்திருந்த சக்கரவர்த்தி பரந்தாமன் அது மாதிரி ஒருசில விநாடிகள் தோன்றிப் பின் இயல்பான மனிதரானார்.

ஜான்சனுக்கு வியர்த்து விட்டது!

"என்ன பார்த்தியா...?"

"பா... பார்த்தேன்."

"இனியாவது நம்பறியா?"

-அந்தக் கேள்விக்கு பதில் கூற முடியாமல் அவன் அவரையே பார்த்தான்.

அவர் தாடி முடி போட்டபடி சிரித்தார்.

சட்டென்று அவனுக்குள் ஒரு சின்ன விழிப்புணர்ச்சி. உள்குரல் 'இது கண் கட்டு வித்தை' என்றது.

"என்ன கண்கட்டுன்னு நினைக்கறியா?"-ச.ப. அவன் நினைவையே கேள்வியாக்கி மடக்கினார்.

அவனிடம் மேலும் திணறல். கார் போய்க்கொண்டே இருந்தது.

அவனிடம் அமைதி.

"என்ன ஜான்சன்...பேசு."-ச.ப அவனைத் தூண்டினார். உன்மத்தமாகச் சிரித்தார். ஒரு சில காட்சிக்கே இந்த அளவிற்கு சுருண்டு விட்டாயே என்கிற மாதிரி...

இருந்தும் ஜான்சன் தன் திணறலில் இருந்து மீண்டான்.

"சார்..."

"சொல்லு."

"நீங்க கடவுள்னா இந்த உலகத்து அக்ரமங்களை வேடிக்கை பார்க்கலாமா?"

"எது அக்ரமம்?"

"இப்போ கார்கில்ல நடக்கற யுத்தம்."

"அதை நான் வேடிக்கை எங்கே பாக்கறேன்."

"அதை தடுக்க, இல்ல அதுல நாம ஜெயிக்க என்ன செய்திருக்கீங்க?"

"எவ்வளவோ?"

"அது என்னன்னு..."

"பட்டியல் போடச் சொல்றியா?"

"ஆமாம்."

"இந்த யுத்தமே ஏற்படாம தடுத்திருக்க முடியும் என்னால... ஆனா ஏற்பட்றது நல்லதுன்னு தான் தடுக்கல."-ஆச்சரியமான பதில் ச.ப.'விடம்.

"எப்படி?"

"இப்ப பார்... எல்லாரும் கார்கில் கார்கில்னு அதை பத்தியே சிந்திக்கிறாங்க. தேசிய உணர்வு சின்னவங்கள்ல இருந்து பெரியவங்கவரை பரவி இருக்கு. இந்த யுத்தம் மட்டும் நடக்கலேன்னா இளைய சமுதாயத்துக்கு யுத்தம்னா என்ன, சமாதானம்னா என்னன்னே தெரியாம

போயிருக்கும். 1971க்கு பிறகு எந்த யுத்தமு
நடக்கலையே...? அப்ப ஜெய் பங்களாதேஷ்ங்கற வார்த்தை
ரொம்ப பிரசித்தம்.''

''அப்ப தெரிஞ்சு தான் விட்டு வெச்சுருக்கீங்களா?''

''ஆமாம்.''

''சரி யுத்தத்துக்கு இப்படி பதில் சொல்லிட்டீங்
வறுமை கடன் இதுக்கெல்லாம்...?''

''இதெல்லாம் இந்த தேசத்தோடு வினைப்பாடு, இ
சரி செய்ய எனக்கே அதிகாரம் கிடையாது.''

''தேசத்துக்கு இப்படி ஒரு பதில் தனிமனிதனா
எனக்கு?''

''யாரா இருந்தாலும் விதியையும் வினையையும் நா
மாற்ற முயற்சிக்க மாட்டேன்.''

''அப்ப உங்களை வணங்கறவங்களுக்கு நீங்க த
வரம்.''

''ஆசிகள்.''

''அது இருந்தா போதுமா...?''

''நிச்சயமா என் ஆசி உள்ள ஒருவன் மிகப் பெ
பலவான்.''

''எந்த வகைல...''

''எல்லா வகையிலையும்...''

'இப்படி சாமர்த்தியமா பதில் சொன்னா எப்படி
மெடீரியலிஸ்டிக்கா சொன்னா புரியும்.''

''அப்படியா... நீ என்னை நம்பு வணங்கு துதி செய். எ
புகழைப் பரப்பு அதன் பிறகு நான் உனக்கு வரம் தரே
அப்ப தெரியும் அதோட சக்தி.''

''ஆகக் கூடி உங்களுக்கு துதி செய்தா தான் நல்லது
நடக்கும். இல்லேன்னா அவஸ்தைதான்.''

''அது உன் வினைப்பாட்டை பொறுத்த விஷயம்.''

''உங்களுக்கு எதிரா பேசறவங்கள பத்தி...''

''அவர்கள் பாவம் அவர்களை அப்படி பேசவைத்து
மேலும் பாவியாக்குகிறது.''

''அப்ப உங்களை மதிச்சு பக்தி செய்யறவங்க புண்ணியம்
செய்யறவங்களா?''

''புண்ணியம் செய்தவங்களும் கூட...''

''அப்ப அவங்களுக்கு நீங்க என்ன தந்தீங்க...?''

அவங்க பக்தியைப் பொறுத்து அவங்க சிக்கலை நான்
தீர்த்து வைக்கறேன்.''

''எல்லாத்துலையுமே அப்ப அளவுகளோட தான்
செயல்படுவீங்களா?''

''நிச்சயமா... அளவற்ற எதுவுமே ஆபத்தானது.''

''2000த்துல உலகம் அழியுமா?''

''நான் அழிய விட மாட்டேன்...''

''எங்க பத்திரிகை வாசகர்களோட சிக்கல்களுக்கு விடை
காண உதவுவீங்களா?''

''நிச்சயமா... ஆனா ஒரு கண்டிஷன்.''

''என்ன?''

''ஒரு வாரத்துக்கு ஒருவருக்குத்தான் உதவுவேன்.''

''இது என்ன கணக்கு?''

''கணக்குதான். எல்லோர்க்கும் கருணை காட்ட விதியில
இடம் இருக்கணும்.''

"ஒருத்தருக்கு மட்டும் கருணை காட்ட இடமிருக்கா

"இருக்கு... எத்தனை ஆயிரம் பேர் பிரச்சினைகளை சொல்லியிருந்தாலும் ஒருத்தர் மட்டும் என்னால தேவை செய்யப்படுவார். அவர் நிச்சயம் என் பக்தரா தான் இருப்பார்."

சலிக்காமல் சளைக்காமல் அவனும் கேட்டான். ச.ப.வும் பதில் சொன்னார். எப்படியோ ஒரு பிரச்சினையை தீர்த்து வைப்பதாகக் கூறிவிட்டார். அந்த ஒருவர் பிரச்சினையை வைத்தே இந்த ஆள் லட்சணங்களை எடை போட்டு விடுவது என்றும் அவன் தீர்மானித்தான்.

அவன் நினைப்பதை உணர்ந்து ச.ப.வும் சிரித்தார்.

"உன் அடிமனசு என்னைக் கொஞ்சம் கூட நம்பல. என் சக்திகள் மேல சந்தேகமும் கூட உனக்கு... அதனால என்னை எப்படி மடக்கலாம்னே யோசிக்கறே... இல்ல?"

மிக நேரிடையான அந்தக் கேள்வி ஜான்சனை திணற அடித்தது இல்லை என்று கூறவும் பத்திரிகையாளர் நேர்மை இடம் தரவில்லை. ஆமோதிப்பாக அவரைப் பார்த்து சிரித்தான்.

"என்னை யாராலையும் எதுவும் செய்ய முடியாது. என் இந்த உயிரும் கூட இன்னும் நூறு வருஷம் இந்த பூமியில் வாசம் செய்யற பலத்தை உடையது."

ச.ப. தொடர்ந்தார்.

"அதுக்கு பிறகு?"

"நான் திரும்ப பிறப்பேன். எட்டு வயதுலேயே அப்பா என்னை இந்த உலகம் கடவுள்னு சொல்லும். சொல்லவும் வைப்பேன்."

"அப்ப அந்த இடைப்பட்ட எட்டு வருடங்கள் கடவுள் இல்லாத பீரியடா?"

-கேலியாக ஆனால் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு கேட்டான் ஜான்சன்.

ச.ப'வும் அவனை யோசனையோடு பார்த்தார். சட்டென்று கண்களை மூடி முகத்தை கோணல்மாணலாக்கினார். பின் பளாரென கண்மலர்ந்திட உன் பிறந்த தேதி எட்டா என்று கேட்டார். பதிலுக்கு ஆச்சரியம் விரிந்தது ஜான்சனிடம்.

"ஆமாம்" என்றான்.

"மாதம் பதினொன்னா?"

"ஆமா"-அதிகபட்ச ஆச்சரியத்துடன்.

"வருடம் ஐம்பத்து● எட்டு...?"

"ரொம்ப சரி..."

"உன் பிறந்த தேதி சொன்ன நான் உன் மரண தேதிய சொல்லட்டுமா?"-ஒரு தடாலடி கேள்வி கேட்டார். ஜான்சன் ஆமோதிப்பாய் தலையை அசைத்தான். ஆனால் ச.ப' சட்டென்று சொல்லிவிடவில்லை. அவனையே ஊன்றிப் பார்த்தார்.

"இப்படிப் பார்த்தா எப்படி? சொல்லுங்க..."

"சொல்றேன். சொன்ன நம்பமாட்டியே... எதை சொன்னாலும் நம்பாம ஆராயறதுதானே உன் புத்தி."

"இல்லையே... என் பர்த்டேட்டை சரியா சொன்னீங்களே. ஒத்துக்கத்தானே செஞ்சேன்."

"எப்படின்னு கேக்கலியே...?"

"கேக்கமாட்டேன். ஏன்னா அதை தெரிஞ்சு வெச்சுக்கிட்டு சொல்றது ஒண்ணும் பிரமாதமில்லை. என் ஐடென்டி கார்டுலையே அது இருக்கு. ஒரு நாளைக்கு தினம் நூறு பேருக்கு காட்றேன்..."

"அப்படியா?"-ச.ப' கேட்கும் விதமே மிகவும் எக்காளமாக இருந்தது. இவன் எமகாதகன். இவனை வழிக்குகொண்டு வருவதும் மிகக் கடினம் என்பதுபோல உணர்வுகள் உள்ளோடியதோ என்னவோ... வழக்கம் போல தாடியை நீவி முடிபோட்டார். பின் சிரித்தபடியே சொன்னார்.

"உன் மரணம் நாளைக்கு மதியம் சரியா ஒருமணிக்கு மகனே!"

அவனுக்கு குப்பென்று வியர்த்து விட்டது. இருந்தும் சட்டென்று கேட்டான்.

"என்ன என்னை கொலை பண்ணப் போறீங்களா,"

"நான் எதுக்கு பண்ணணும் எமன் இருக்கும் போது!"-சொன்னபடியே டிரைவருக்கு சமிக்ஞை தந்திட ஓரம் கட்டி நின்றது.

"இறங்கு ஜான்சன். போ... போய் உன் மனைவி மக்களோட பொழுதை சந்தோஷமா செலவழி. இந்த உலகத்துல தன் மரண நிமிடம் தெரிஞ்சு சாகறவங்களை விரல்விட்டு எண்ணிடலாம். நீ அவங்கள்ல ஒருத்தன். நீ செய்த புண்ணியம்தான் என்னை சந்திச்சே. என் தரிசனமும் உன் விருப்பப்படியே நிகழ்ந்தது. உன் மரணமும் அந்த விதிப்படியே நடந்தே தீரும். போ... உன் ஆசிரியரை சந்திச்சு நடந்ததைச் சொல்லி நேரத்தை விரயம் செய்யாதே. அதே போல மரணத்திலிருந்து தப்பிச்சுக்கலாம்னு நம்பி எங்கேயும் போய் ஒளியாதே. எல்லாமே கால விரயம். நேர

விரயம். உனக்கு இனிமேலான ஒவ்வொரு வினாடியும் உன்னதமான வினாடிகள். போ... போய் அந்த நேரத்துல சந்தோஷமா இரு..."

-அவனை இறக்கிவிட்டு அந்தக் கார் சிட்டாக பறந்தது. நடுச்சாலையில் திக்பிரமை பிடித்த நிலையில் ஜான்சன். இந்த விஷயத்தை, சம்பவத்தை எப்படி எடுத்துக் கொள்வது என்றே பிடிபடாத குழப்பத்தில் நடுச்சாலையில் நிற்கிறான் ஜான்சன்!

3

'கால்ப்ரகாஹிகா' ஓர் அற்புதமான ஜோதிட நூல். இதனை குருவோட சேர்ந்து படிக்கத் தெரியவேண்டும். வரிக்கு வரி இதன் பொருள் அர்த்தங்களை மாற்றிக் காட்டும். ஆனாலும் அவ்வளவும் கால ரகசியம். இதை வாசிக்கத் தெரிந்தவன் ஒருவனின் மரண விநாடிகளை புள்ளியிட்டுக் கூறிவிட முடியும்.'

தொலைபேசி அலறியது.

கையில் எடுத்து காதைக் கொடுத்தார் எடிட்டர் வீரபாரதி.

"சார்... நான் ஜான்சன் பேசறேன்."

"சொல்லு... எப்படி போயிட்டிருக்கு?"

"என்னத்த... நாளைக்கு ஒரு மணிக்கு என் விதி முடிய போகுதாம்.

அந்த பெரிய மனுஷன் சொல்லிவிட்டு என்னை நடுவழில இறக்கி விட்டுட்டார்..."

"அவர் கோபப்படும்படி ஏதாவது பேசினியா... கேள்
கேட்டியா"

"சத்யமா, இல்ல. ஆனா, மனசுல ஒட்றதை அந்த ஆ
என்னமோ டி.வி ஸ்க்ரீன்ல படிக்கற மாதிரி படிக்கறான்

"சரி நீ நேர்லவா..." வீரபாரதி பேச்சை நறுக்கென்
முடித்துக்கொண்டார்.

பத்திரிகை அலுவலகம்.

உள்ளே நுழையும் ஜான்சனை முதலில் ஆச்சரியமா
பார்ப்பது ஸ்ரீநாத்தான்.

"என்ன ஜான்சன்... என்ன ஒடிவந்துட்டீங்
கேள்வியே குத்தியது.

நின்று ஒரு சின்ன முறைப்பு-பதில் தர உதடுக
பிரியப்படவில்லை. நேரே நடக்கிறான்.

எதிரில் சீட்டில் வீரபாரதி.

"வா உட்கார்... என்ன நடந்தது..."

-ஜான்சனும் சொல்லத் தொடங்கினான்.

கடற்கரையில் போலீஸிடம் ஆரம்பித்து நடச்சாலையி
இறங்கி நின்ற வரை.

வீரபாரதி பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டி
யோசனை செய்யத் தொடங்கினார்.

நடுவில் 'எக்ஸ்யூஸ்மி...' என்றபடியே ஸ்ரீநாத்தி
பிரவேசம்.

"வா ஸ்ரீநாத்... உக்காரு..."

"என்ன சார் ஆச்சு?"

"சொல்றேன். அந்த ஆள் சரியான மேஜிக் நிபுணனா
இருப்பானோ?"

-வீரபாரதி ஜான்சனைப் பார்த்தபடியே கேட்டார்.

"தெரியல சார். ஆனா சில விஷயங்களை நம்பமுடியல.
பர்டிகுலரா அந்த சில நொடிகள் நான் செய்த ஜீசஸ்
க்ரைஸ்ட் தரிசனம்."

"பயங்கர த்ரில்லா இருக்கே ஜான்சன். இப்படி ஒரு
சுப்ரீம்பவர் உள்ள மனுஷன் ஐமீன் கடவுள் இங்கிருந்தா
இந்த தேசமே சுபிட்சமா இருக்கணுமே...?"

நானும் அதைபத்தி வளைச்சு கேட்டுப்பாத்துட்டேன்
சார். அவ்வளவுக்கும் ரொம்ப சாமர்த்யமான பதில்
வினையையோ விதியையோ நான் மாத்த மாட்டேன்.
என்னை நம்பறவங்களை கைவிடவும் மாட்டேன்னு
பயங்கர சாமர்த்யத்தோட பதில்..."

"மொத்தத்துல அவரை உங்களால புரிஞ்சுக்க முடியல
ஒத்துக்குங்க."

-ஸ்ரீநாத்தின் இடையீடு வீரபாரதியையே நறுக்கியது.

"ஸ்ரீநாத்... என்ன பேச்சு இது. இந்த பேச்சு எதுக்குன்னு
நினைக்கறே? இந்த மாதிரி மனுஷங்கள புரிஞ்சுக்கத்தான்."

"அதான் முடியலயே. குருடன் யானையைத் தொட்டுப்
பார்த்து ஃபீல் பண்ற மாதிரியில்ல இருக்கு உங்க செயல்."

"அதுக்காக நம்பி சரண்டராயிடச் சொல்றியா?"

"என்ன சார் பைத்தியக்காரத்தனம் இது. ஒரு சுப்ரீம்
பவரை மேதையை கடவுளுக்கு சமமானவரை நம்பினா
என்ன தப்புங்கறேன்."

"நோ... இதெல்லாம் இம்பாசிபள். இதுல ஏதோ சூது
இருக்கு."

"ஆமாம் சார்... எல்லாத்தையும் ஆட்டிவைக்கறேன்னு
சொல்றவருக்கு ஏசி கார் இல்லாம இருக்க முடியவில்லை.

ஹார்லிக்ஸ் டீ காபி தேவையா இருக்கு. செல்போ
இல்லாம நம்மோட பேச முடியல.''

-ஜான்சனும் யோசிக்கும்படியாகத்தான் கேட்கிறான்.

''அப்ப இந்த டேலன்ட்லாம் எப்படி சாத்தியம்?''

''தெரியல... அதை தெரிஞ்சுக்கணும். விடக்கூடாது.
விடவே கூடாது. இந்த தேசத்துல ஒரு நாளைக்கு ஒ
சாமியார் முளைக்கறார். அவங்களுக்கும் கூட்டம் சே
எத்த தின்னா பித்தம் தெளியும்னு ஜனங்க அலைகிறாங்
உண்மை பொய்யை தெரிஞ்சுக்கவே முடியல.'' விரலி
உதடு முணுமுணுத்துக் கொண்டே இருந்தது.

''சார்... நம்மகிட்ட இருக்கறது அறிவுக் கர்வம். ஊரு
சாமியார்களும் இருக்காங்க. நான் இல்லேங்க
அப்படி இல்லை. அவர் ஒரு அதிசயப் பிறவி. அவர் ஒ
உலக அதிசயங்கள்ல ஒண்ணு... நம்புங்க...''

''நீ என்ன சொல்றே ஸ்ரீநாத். நம்ம ஜான்சன் நாளைக்
ஒரு மணிக்கு செத்துப் போயிடுவானாம். நம்புறியா நீ''

-ஸ்ரீநாத்துக்கு ஒரு நொடி பக்கென்றது.

''அப்படியா சொன்னார்...?''

''நான் தமிழ்ல தானே சொல்றேன்...''

''சார் அப்ப அது நடந்துடும்...''

''பாக்கலாமா?''

''இது என்ன சவால். நான் நம்பிக்கைல சொல்றே
மிஸ்டர் ஜான்சன். ஐ -ஆம் வெரி சாரி. நான் ஏதாவது தப்
பேசியிருந்தா மன்னிச்சுடுங்க... நீங்க உங்க கண்
-ஆசைகளை ஈடேற்றிக்க பாருங்க. காட்ல இரேன் உங்
கைல பல மணிநேரங்கள் இருக்கு. போய் ப
லட்சங்களுக்கு நீங்க இன்னொரு கூட... பண்ணிக்கலாம்.''

''போதும் நிறுத்துங்க ஸ்ரீநாத். நான் பல வருஷம்
வாழ்போற ஒருத்தன். அந்த மனுஷன் என் மனசுல
நிலையை மூட்டி அந்த பயத்துலேயே என்ன சாகடிக்க
முடியும்னு நம்பிட்டான் போல...? இட்ஸ் இம்பாஸிபிள்.
நான் எப்பவும் போல இருப்பேன். போவேன். வருவேன்.
என்ன ஆயிடுதுன்னு பாக்கறேன்.''

''என்ன ஜான்சன்... அவரை நேர்ல பார்த்து பல கேள்வி
கேட்டு உங்க இஷ்ட தெய்வமா அவரைப் பார்த்ததும் நீங்க
இப்படி நம்பாம பேசினா எப்படி?''

''ஷட் அப்... அண்ட் ஸ்டிச் ஆன்யுவர் டர்ட்டி மௌத்.
எல்லாமே ஏதோ தில்லு முல்லு. யெஸ் தில்லுமுல்லு.
இதோட மூலத்தை நான் கண்டு பிடிக்காம
விடமாட்டேன்.''

-ஜான்சனும் ஸ்ரீநாத்தும் கட்டி உருளாத குறை.
விரலி நீண்டநேரமாக யோசித்தபடியே இருந்தார். பின் வாய்
திறந்தார்.

''ஜான்சன் எதுக்கும் நீ எச்சரிக்கையா இருக்கறது நல்லது.
வெளிய எங்கேயும் போகாதே. ஏன்னா அந்த -ஆள் வாக்கு
பலிச்சிடிச்சுன்னு இந்த உலகத்தை நம்பவைக்க
யாரையாவது விட்டு கொலை செய்யலோ, இல்லை
ஆக்சிடெண்ட் பண்ணவோ முயற்சி செய்யலாம்.

உனக்கு இந்த பத்திரிகை -ஆபீஸ்தான் ரொம்ப
பாதுகாப்பான இடம்.

உன் மனது நாம செத்துட மாட்டோம்னு உறுதியா
நம்பறது இல்லை...''

''நூறு சதம் சார்... ஐ நோ நோ இல்லை. ஐ நோ நோ
மியூச்சர். ஐ நோ நோ கன்சிஸ்டென்ஸி''

"குட்... அதுபோதும் இங்கேயே இரு. அந்தச் சக்கரவர்த்தி பரந்தாமனோட சுயரூபம் தெரிய இது ஒரு நல்ல சந்தர்ப்பம். ஒரு பத்திரிகையாளன் தன்னையே பணயம் வெச்சு செய்யப்போற ஒரு வேள்வி இது. பார்த்துடுவோம் ரெண்டுல ஒண்ணு. ஸ்ரீநாத் இதுபத்தி நீ மூச்சுவிடக் கூடாது. நம்ம வேலைகள் எப்பவும் போல நடக்கணும். எந்த பதற்றமும் இருக்கக் கூடாது.

நாம புத்தியையும், பகுத்தறிவையும் முதலா வெச்சு இந்த உலகத்தோட விஞ்ஞான தத்துவங்களுக்கு உட்பட்டு வாழற மனுஷங்க. நாம அதை மறந்துடக் கூடாது..."

-வீரபாரதி அழுத்தம், சிந்தனை, மெய், பொருள் அத்தனையும் காட்டினார் தன்பேச்சில்.

ஸ்ரீநாத் தவித்தான்.

"சார்... தவறா எடுத்துக்காதீங்க... நீங்க சொல்ற சிந்தனைகள் எனக்கு இல்லாம இல்லை. அதேசமயம் இந்த உலகம் எல்லாத்தையும் புரிஞ்சு வைச்சிருக்குன்னும் சொல்ல முடியாது. விளக்க முடியாத விஷயங்களும் உலகத்தில் இருக்கு சார். அதுக்கும் மரியாதை தரணும்."

"சரி இப்ப என்ன செய்யணும்கறே."

"ஒரு பக்கம் இவர் இறப்பையும் நம்பி அதுக்கானதை"

"அதுதான் என்ன?"

"வாழ்ந்து இவர் சாதிக்க நினைக்கற விஷயங்களை இந்த சில மணிகள்ல இவர் செய்ய நீங்க அனுமதி தரணும்."

"சில மணிகள்ல ஒருத்தன் எப்படி தன் வாழ்நாள்ல சாதிக்க நினைக்கறதை செய்ய முடியும்? உளர்றியே..."

"சார்... முதல்ல இவரை இன்ஷ்யூர் பண்ணச் சொல்லுங்க. நாளைக்கு இவர் வரையில் இந்த உலகம்

அழியப் போகுது. உறுதியா அழியப்போகுது. இவருக்கும் அது தெரியும். அப்ப இவர் என்ன செய்வார் அதை செய்யணும்..."

"நோ... பேத்தல்... பயங்கர பேத்தல். அப்படி நான் நினைச்சுட்டாலே செத்தவனாயிடறேன். சார் முதல்ல இவரை எழுந்து வெளியே போகச் சொல்லுங்க..."

-ஜான்சன் அலறினான். வீரபாரதியும் அவனை முறைத்துப் பார்த்தார். இறுதியாக ஒரு முடிவுக்கு வந்தார்.

"ஜான்சன் நீ உன் வேலையைப் பார். நான் ஸ்ரீநாத்தை பார்த்துக்கறேன். ஸ்ரீநாத் என் கூட வெளிய வா..."- அழைத்தபடி வெளியேறினார்.

ஜான்சன் பலி கோழிபோல தலையை உதறிக் கொண்டான்!

4

'அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு நடுவில் அமானுஷ்ய ஆராய்ச்சிகளும் நடந்து கொண்டு தானிருக்கின்றன. ஒரு சாரார் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளை உலகறியச் செய்யலாம். அமானுஷ்ய ஆராய்ச்சி முடிவுகள் மட்டும் அனுபவ அறிவாகவே இன்னும் இருக்கிறது. என்றும் இருக்கும். அதுதான் அதன் தனித்தன்மை.'

வெளியே வந்த எடிட்டர் ஸ்ரீநாத்தின் தோள் மேல் கைபோட்ட படி அந்தப் பத்திரிகை அலுவலக மொட்டை மாடிக்கு அவனை அழைத்துச் சென்றார். ஸ்ரீநாத் பதற்றத்தில் இருந்தான்.

"ஸ்ரீ... நீ என்ன நினைக்கறே இப்ப சொல்." மொட்டை மாடியில் இருந்து கொண்டு அக்கம் பக்க கட்டடம் மற்றும் தென்னைமரக் கூட்டங்களைப் பார்த்தபடி கேட்டார்.

"சார்... ச.ப' நம் அறிவுக்கு அகப்பட முடியாத ஒருத்தர். நம்பிக்கையால மட்டும் தான் அவரை அறிய முடியும். நான் அப்படி அறிஞ்சவன். உங்களுக்கு ஒரு சேதி அவர் இப்படி ஒரு மரணச் செய்தியை எனக்கு முன்பே சொல்லியிருக்கார். நானும் ஜான்சன் போல நம்பல. ஆனா நடந்த பிறகு ஆடிப் போயிட்டேன்."

"சரி... நீ நம்பறவனாவே இரு. இந்த நிமிஷம் நீ ஒரு ஜான்சன். அவரை நம்பக் கூடிய ஜான்சன். உன் மரணம் நாளைக்கு ஒரு மணின்னா என்ன செய்வியோ அதை எல்லாம் செய்யலாம் நீ..."

"தெரியுது சார்... நீங்க எங்க இரண்டு பேருக்கும் அதாவது நம்பிக்கை அவ நம்பிக்கை இரண்டுக்குமே சம அளவு இடம் தந்து எடையிடப் பார்க்கறீங்க?"

"வெச்சுக்கோயேன். சரி என்ன செய்யப் போற?"

"ச.ப'வை சரணடையப் போறேன் சார். ஜான்சன் தப்பிக்க வழி இருக்கான்னு கேக்கப் போறேன்."

"உம் அப்புறம்?"

"ஜான்சன் குடும்பம் அவரை இழந்து வாடிடக் கூடாது சார். அதுக்கு என்ன உண்டோ அதை செய்வேன்."

"பொருளாதார ரீதியாவா?"

"ஆமாம். அவரது ஆத்மார்த்த ஆசைகளை ஈடேற்றுவேன்."

"அவர் உயிர் பிழைச்சாலே இது எல்லாம் நடந்துடுமே...?"

"அதுவும் சரிதான். நான் இப்பவே அவரை சரணடையறேன். ஜான்சன் உயிரைக் காப்பாற்றும்படி கேட்கறேன்."

"அவர்தான் விதியை என்னால மாத்த முடியாதுன்னு சொல்வாராமே?"

"மார்க்கண்டேயன் கதை எதுக்கு சார் சொல்லப் பட்டிருக்கு. சத்யவான் சாவித்ரி கதையோட தத்துவம் என்ன சார்... விதி ஒரு கதவை அடைச்சாலும் மதியால அதை திறக்கலாம்னு தானே...?"

"ஓஹோ... அப்படி ஒரு கோணம் இருக்கோ... சரி முயற்சி செய். ஆனா பார்த்து இதை கசிய விட்டு பரபரப்புக்குண்டான விஷயமாக்கி ஊர் பார்க்கும்படி பேசும்படி செய்திடாதே.

நல்லதோ கெட்டதோ நாம உணர்ந்தா போதும்.

"நிச்சயமா சார். இது காதும் காதும் வெச்ச மாதிரி நடக்கணும். நடக்கும். நடத்துவேன்."

"பார்த்து... நான் ஒரு மணிக்கு பிறகுதான் எந்த ஒரு முடிவுக்கும் வருவேன். அதாவது ஒரு பத்திரிகை ஆசிரியனா... ஆனா ஒரு சக மனுஷனா சொல்றேன். நீ ஏமாறப் போறே. ஜான்சன் சாதிக்கப் போறான். அந்த ச.ப' தன் தலையை தொங்கப் போட்டுக்கப் போறார்."

"பார்ப்போம் சார்..." ஸ்ரீநாத் பேசிவிட்டு அங்கிருந்து பரபரப்போடு கிளம்பினான்.

5

'காலம் ஒரு விசித்திரமான சக்கரம். மனிதன் அதில் கிடந்து சுருளுபவன். சில நேரம் வண்ணக்

காட்சி சில நேரம் குருட்டுத் தன்மை இது தான் மனித அனுபவங்கள்! இதற்கு மேல் எதுவுமேயில்லை..'

'ச.ப' தியானத்தில் இருந்தார்.

கண்களைத் திறக்கும் போது பக்கத்தில் அவரது நேர்முக உதவியாளன் சக்தி.

''சக்தி... என்னை பார்க்க ஸ்ரீநாத் வந்திருக்கான் அவனைக் கூப்பிட்டு வா.'' என்றார்.

சக்தியும் அவரது அறையை விட்டு வெளியே சென்றான். பிரேயர் ஹாலில் பெரும் கூட்டம். அதில் ஸ்ரீநாத் பதற்றத்தோடு தெரிந்தான்.

சக்தி கச்சிதமாக அவனைப் பார்த்து சைகை காட்டி அழைத்தார். ஸ்ரீநாத்துக்கு புரிந்து விட்டது. தன் வருகை தெரிந்து ச.ப. அழைப்பது...

உள்ளே செல்கிறான்.

தேவலோகம் போன்ற சூழல்.

நடுவில் சொர்ணப்பிழம்பாய் பட்டு மெத்தைமேல். ச.ப.

''வணக்கம் ஸ்வாமி...'' சொல்லியபடியே ஸ்ரீநாத் தரைமேல் விழுகிறான்.

''வா ஸ்ரீநாத்... என்ன உன் நண்பர் சாவை பற்றிய சஞ்சலமா?'' கச்சிதமாகக் கேட்டார்.

''ஸ்வாமி...'' அவன் உதடு தழுதழுத்தது.

''உட்கார்...''

''இருக்கட்டும் ஸ்வாமி.''

''என்ன விஷயம் சொல்.''

''உங்களுக்கு தெரியாதா, பாவம் ஸ்வாமி ஜான்சன்.''

''சரி பரிதாபப்படு...''

''இப்படி சொன்னா எப்படி... இதை தவிர்க்க முடியாதா?''

''முடியும்னு நீ நம்பறியா?''

''நான் நம்பறேன். என் ஸ்வாமி நீங்க மனசு வெச்சா...''

''உன் பக்தியும் நம்பிக்கையும் எனக்கு தெரியும் ஸ்ரீநாத். ஆனா விதியை மாத்த முடியாதே...''

''இல்ல ஸ்வாமி... எனக்கு ஒரே நம்பிக்கை தான். அது உங்களால் எதுவும் முடியும்ங்கறது தான்.''

''அப்படியா?''

''இப்படிக் கேட்டா எப்படி ஸ்வாமி ஜான்சன் பிழைக்கணும். பாவம் அவன்.''

''இதை அவனல்லவா உணரணும்?''

''உணர நீங்க வாய்ப்பு தராம அவன் எப்படி உணர முடியும்?''

''தந்துருக்கேன். அதனால்தான் நீ வந்திருக்கே...''

''ஸ்வாமி...''

''ஸ்ரீநாத், ஒருவன் தன் உடலை தானே கூறுபோட்டு பார்த்துக்க ஆசைப்படலாமா?''

''தெரியல ஸ்வாமி...''

''அப்படிச் செஞ்சா என்னாகும்...?''

''அவன் உயிர்போகும்...''

''அப்ப அவன் எப்படி பார்க்கமுடியும்?''

''உண்மைதான்...''

''நம்பிக்கை சார்ந்த விஷயங்களும் அப்படித்தானே.''

"அப்படி நினைக்காததாலே தானே ஸ்வாமி ஆராய்ச்சிகள் ஆசைகள்லாம் தொடருது..."

"நம்பிக்கை சார்ந்த விஷயங்கள்ள ஆராய்ச்சிக்கு இடமேது?"

"உண்மைதான் எனக்கு ஏத்த பதில் இது இல்லையே ஸ்வாமி."

"தெரியும். உனக்கு ஜான்சனோட உயிர் வேணும். அவ்வளவுதானே?"

"ஆமாம்..."

"அவன் உயிரை நான் தந்துட்டா அவன் நானே பொய்யின்னு சொல்வானே...?"

"அவன் சொல்றதால நீங்க பொய் ஆயிடமுடியுமா?"

"அப்படி அவன் மீண்டா நான் சொன்னது பொய் ஆகித் தீரணும். கண்ணாடின்னா கீழே விழுந்தா உடையணும் ஸ்ரீநாத். இயல்புகளுக்கு எதுவுமே மாறுபடக் கூடாது..."

"என் நம்பிக்கை அப்ப வீண்தானா?"

"என்னை தர்ம சங்கடப்படுத்திறயே..."

"என்ன ஸ்வாமி இது. மனிதனைப்போல் நங்களும் பேசலாமா?"

"மனித வடிவத்துல அந்த சரீரத்துக்குள் இருக்கும் போது பேசித்தானே தீரணும்."

"இறுதியா என் நம்பிக்கைக்கு நீங்க தரப்போற பதில்..."

"பொறுத்திருந்து பார்... உன் நம்பிக்கை வீண் போகாதபடி செய்யறேன். அதேசயம் விதியும் தன் கடமையைச் செய்யும்."-புதிர் போட்டார் ச.ப...

புரியவில்லை ஸ்ரீநாத்துக்கு... இப்படி புரியாதபடி பல கோலங்கள் அவர் காட்டுவது அவனுக்கு ஒன்றும் புதிதில்லை.

எப்படியோ இந்த மட்டில் அவர் சாதகமாக ஒரு பதிலைச் சொன்ன சந்தோஷம் ஒரு பொன் ரேகையாக அவன் முகத்தில் மின்னியது. திரும்ப சாஷ்டாங்கமாக விழுந்துவிட்டு கிளம்பினான்.

6

'உயிர் என்பது எது? ஒரு துளி மூச்சுக் காற்றா... இல்லை கண்ணில் பார்வை சக்தியாக ஒளியோடு இருக்கிறதே அதுவா? குருடர்களும் உயிரோடு இருக்கிறார்களே என்றால் ஒளி இல்லை-வேறா? எது... எது...? எது கருவுக்குள் நுழைந்து கைகால் களை அசைக்கிறது? எது உடலைவிட்டுப் பறந்து வெளியேறுகிறது?'

சுறுசுறுப்பாக செயல்பட்டுக் கொண்டிருந்தான் ஜான்சன்.

அவனுக்கு அவன் சொல்வதைக் கேட்கும் மனது. அதனால் அது எதைப் பற்றியும் கவலைப்படவில்லை.

கண்கள் டி.வி. நியூஸ் பார்க்கின்றன.

கைகள் புரூஃப் திருத்துகின்றன. நடுநடுவே Layout திருத்தங்கள். வீரபாரதிக்கே அவனைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கிறது.

"வாட் எ கிரேட் பர்சனாலிட்டி..."-வியந்து போனார்.

அப்படியே ஸ்ரீநாத் என்ன செய்து கொண்டிருப்பான் என்றும் யோசிக்கையில் செல்லுலரில் அவனே கூப்பிட்டான்.

"என்ன ஸ்ரீ..."

"சார்... கவலைப்படவேண்டாம் சார்."

"என்ன சொல்றே?"

"ஆமாம் சார்... சக்கரவர்த்தி பரந்தாமன் ஸ்வாமியை பார்த்தேன். கால்ல விழுந்தேன். ஜான்சன் உயிருக்கு எதுவும் ஆயிடக்கூடாதுன்னு சொன்னேன்... முதல்ல விதியை மாத்த முடியாதுன்னவர் பிறகு பாக்கறேன்னார்..."

-ஸ்ரீநாத் சொன்ன மறுவினாடி வீரபாரதி கலகலவெனச் சிரித்துவிட்டார்.

"சார்... எதுக்கு சார் சிரிக்கிறீங்க..."

"சிரிக்காம... உன் கடவுள் என்னப்பா பயங்கரமா கண்ணாமூச்சி விளையாட்றார். சரிசரி நீ வா. இனியும் இந்த விவகாரம் பத்தி பேசறதே பைத்தியக்காரத்தனம்..."

-வீரபாரதி குரலில் ஒரு தனி தைரியம் நூறு மீட்டர் ஓட்டம் ஓடியது.

திரும்பவும் சிரித்தார்...

உள்ளே வந்தார்... ஜான்சனை நெருங்கினார்.

அவன் சினிமா விமர்சனத்தில் இருந்தான். குனிந்து பார்த்தான்.

'உலகத்திலேயே சினிமா காதல்போல் கஷ்டமான விஷயம் எதுவுமே இருக்கமுடியாது. வெட்கத்துடனும் ரகசியத்துடனும் உள்ள விஷயம் காதல். அது என்னமோ தெரியவில்லை. சினிமாக்காரர்களுக்கு மட்டும் சுற்றி நூறுபேர் ஆடிப்பாடினால்தான் அது பொங்கிப்

பிரவாகிக்கிறது. ஒரு வரிக்கு ஒரு இடம் போய் பாடுகிறார்கள். நாராசமான கற்பனை இது... ஜனங்களும் ஐம்பது வருடங்களாக இதை ஏன் என்றே கேட்காதபடி ரசிக்கிறார்கள். எப்படி இப்படி அபத்தங்களை ஜனங்களால் ரசிக்க முடிகிறது?

சினிமா... ஆன்மிகம் எல்லாமே இங்கே பிழையாக இருக்கிறது. மிகையாகவும் இருக்கிறது.

-முற்றுப்புள்ளி வைத்துவிட்டு நிமிர்ந்தான். வீரபாரதி தெரிந்தார்.

"சார்..."

"என்ன விமர்சனம் எழுதறியா?"

"ஆமாம் சார்..."

"கொஞ்சம் கூட உனக்குப் பயம் இல்லை?"

"இல்ல சார், எதுக்கு சார் பயப்படணும். பயந்தால்லாம் பத்திரிகையாளனா இருக்க முடியுமா?"

"குட்... நான் பத்திரிகையாளர்களை ஜவான்களுக்கு சமமா நினைக்கிறவன். அவங்க கைல துப்பாக்கி. நம் கைல பேனா. நாட்டுக்குள் எல்லையை மீறுகின்றவர்களை நாம் சுட்றோம். மொத்தத்துல அவங்க எல்லை பாதுகாப்பு. நாம் உள்ளுக்குள்ளே பாதுகாப்பு. இந்த விஷயத்துக்கு தைரியம் தெளிவு இரண்டும்தான் பிரதானம். இரண்டும் உன்கிட்ட இருக்கு. ஐ வில் அப்ரிஷியேட் யூ" தோள் தட்டினார்.

"என்ன சார் ரொம்ப பாராட்றீங்க... வேண்டாம் சார் இதுதான் பயத்தை தருது" என்றான் ஜான்சன்.

"இல்ல ஜான்சன் இது என் மனமார்ந்த பாராட்டு... பை த பை அந்த ச.ப.'ங்கற சக்கரவர்த்தி பரந்தாமன் உன்

உயிரை காப்பாத்தறதா சொல்லிட்டாராம். ஸ்ரீநாத் போன் பண்ணினான். எனக்கு சிரிப்பு வந்திடுச்சு...''

''போகாத உயிருக்கு இவர் பாதுகாவலராமா... வேடிக்கையாதான் சார் இருக்கு...''

''எப்படியோ இந்த விஷயமே போதும் அவர் ஒரு போலி மனிதர்ங்கறத நிரூபிக்கறதுக்கு. முதல்ல மிரட்டறது... அப்புறம் கால்ல விழுந்தா காப்பாத்தறேங்கறது... வேடிக்கையா இருக்கு...''

-வீரபாரதி சிரிக்கத் தொடங்கும்போது திடுமென்று ஜான்சனுக்கு நெஞ்சையடைத்தது. முகத்தில் சரங்கள் விழுந்தது.

''என்ன ஜான்சன்... என்னாச்சு?''

''நெஞ்சு... நெஞ்சுவலிக்குது சார்.''

''என்னப்பா சொல்றே?''

''சார்... சார்...''-ஜான்சன் சுருள ஆரம்பித்தான். வீரபாரதி ஆடிப் போகிறார். கைகள் பரபரக்கின்றன கத்துகிறார். சிலர் எட்டிப் பார்க்க ஒருவன் டாக்டருக்கு போன் போட்டான்.

அதற்குள்ளாகவே கிணற்றில் விழுந்து எழுந்தமாதிரி வியர்த்துவிட்டது ஜான்சனுக்கு.

'மை குட் நெஸ்... இது ஹார்ட் அட்டாக்!'

-வீரபாரதி கச்சிதமாக புரிந்து கொள்கிறார். அதுவரை உதட்டில் இருந்த எக்காளம் கேலி தைரியம் எல்லாம் ஒரு வினாடி நின்று ஆட்டம் போட்டன.

ஜான்சனை படுக்க வைத்து தண்ணீர் கொடுத்து நெஞ்சைத் தடவி விட்டு...

∴ ∴ ∴

டாக்டர் வந்தபோது கிட்டத்தட்ட மரவட்டையாகச் சுருண்டுவிட்டிருந்தான் ஜான்சன்.

''இட்ஸ் எ சிவியர் அட்டாக்... இன்டென்சிவ்கேர்ல அட்மிட் பண்ணணும்.''-டாக்டர் தந்தியடித்தார்.

அடுத்த சில நிமிடங்களில் அவனைச் சுமந்தபடி ஒரு ஆம்பூலன்ஸ் ஆஸ்பத்திரிக்கு பறந்தது.

மனைவிக்கும் செய்தி போனது...

ஸ்ரீநாத் வந்த செய்தியறிந்த போது அவனுக்கு எதுவுமே பேசத் தோன்றவில்லை. ஒரு ஓரமாக போய் உட்கார்ந்து விட்டான்.

''ச.ப. சொன்னால் சொன்னது தான்''-உள்ளுக்குள் ஒரு குரல் உரத்து சொல்லி முடிந்தது.

'இனியாச்சும் நம்புங்க எடிட்டர் சார்...' ஒருவெட்ட வெளியில் நின்று சற்றே முதுகை வளைத்து வானத்தைப் பார்த்துக் கத்த வேண்டும் போல் தோன்றியது.

''சார் நீங்க ஹாஸ்பிடலுக்கு போகல...''-ஒரு சகா கேட்கிறான்.

''போகணும். போகணும். ஆமா ஜான்சனுக்கு இதுக்கு முந்தி ஹார்ட் அட்டாக் வந்திருக்கா?''

''இல்ல சார். இதுதான் முதல் தடவையாம்.''

''என்ன... எதாவது ரொம்ப உணர்ச்சி வசப்பட்ட நிலைல இருந்தாரா?''

''அதெல்லாம் இல்லை சார்.. நல்லாதான் இருந்தார். எடிட்டர் கூட சிரிச்சு பேசிக்கிட்டிருந்தார்...''

-காதில் விழும் விளக்கங்கள் ஸ்ரீநாத்துக்கு அது விதியின் வேலை தான் என்பதை ஊர்ஜிதம் செய்கின்றன. எழுந்து ஆஸ்பத்திரிக்கு புறப்பட ஆயத்தமாகிறான்!

∴ ∴ ∴

ஹாஸ்பிடலில் ஜான்சனின் மனைவியும் மகளும் வந்திருந்தனர். வீரபாரதி ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார். சூழ்நிலையை சற்று சகஜப்படுத்த பெண்ணிடம் பேச்சு கொடுக்க ஆரம்பித்தார்.

"உன் பேர் என்ன பாப்பா?"

.....

"பேசு... நான் உன் தாத்தா மாதிரி..."

"சார் சார்... அவளால பேச முடியாது. அவ பிறவியிலேயே ஊமையா..." ஜான்சன் மனைவி மென்று துப்பினாள்.

"அப்படியா... ஜான்சன் என்கிட்ட சொன்னதே யில்லையே..."

"ஆமாம். அவருக்கு மகள் எப்படியும் பேசிடுவாங்கற நம்பிக்கை அதனால ஊமைங்கற வார்த்தையையே பயன்படுத்தமாட்டார். இப்படி ஒரு பொண்ணை கொடுத்துட்டு இவர் இப்படி படுத்திட்டாரே சார்..". அந்தப் பெண் சரசரவென்று கண்களை அருவியாக்கினாள். வீரபாரதிக்கு வலித்தது. நிறையவே...

"ஆமா இப்படி இதுக்கு முந்தி எப்பவாவது நெஞ்சு வலி..."

"வந்ததேயில்லை. யோகாசனம்லாம் பண்றவர் சார். எந்த கெட்டப் பழக்கமும் கிடையாது."

அப்படியானால் எப்படி?

ஒருவேளை சக்கரவர்த்தி பரந்தாமன் சொன்னது உள்ளே ஒளிந்திருந்து ஒரு அழுத்தம் கொடுத்து இப்படி செய்துவிட்டதோ?

வராண்டாவில் நடக்கும்போது அவருக்குள் விதம் விதமான எண்ணங்கள்.

இப்படி ஒரு அசைன்மென்டே தந்திருக்கக் கூடாது. நரி இடம் போனால் என்ன, வலம் போனால் என்ன என்று விட்டிருக்க வேண்டும். செய்தது பெரிய தவறு என்றும் தோன்றும் போது டாக்டர் எட்டிப் பார்த்தார்.

சினிமா டாக்டர் போல சரியான சமயத்துல வந்தீங்க என்று சொல்லாமல் வந்து காலருகில் சன்னமாக 'இட் ஈஸ் எ சிவியர் அட்டாக்' என்றார்.

"பொழைச்சிடுவார்ல..."

"ட்ரை அவர்லெவல் பெஸ்ட்."

"பொழைக் கணும் டாக்டர். பொழைச்சாதான் பல விஷயங்களுக்கு உயிர் வரும்..."

"என்ன சொல்றீங்க?"

"என்ன சொல்ல... ஜான்சன் ஒரு எக்ஸலன்ட் கேரக்டர். பத்திரிகையாளர்கள்ல ரத்னம்னு சொல்வேன். பிழைச்சா நல்ல எழுத்தும் பார்வைகளும் இந்த சமுதாயத்துக்கு கிடைக்கும் அதைச் சொன்னேன்..."

-வீரபாரதி சொல்ல டாக்டர் தோள்மேல் கை போட்டபடி தன் அறை பக்கம் அவரை தள்ளிக்கொண்டு போக ஆரம்பித்தார்.

டாக்டர்களுக்கே உரித்தான அளவு...

சுவரில் மெடிகல் ரெப்புகள் கொண்டு வந்து ஒட்டியிருக்கும் ஸ்டிக்கர்கள். டேபிள்மேல் வகை வகை தொகையில்லாத காம்பிளிமென்ட்டுகள் நடுவில் மேஜை கண்ணாடிக்கு கீழே சக்கரவர்த்தி பரந்தாமனின் ஆசீர்வதிப்பது போன்ற படம்.

அதை பார்க்கவும் பச்சென்றாகிவிட்டது வீரபாரதிக்கு.

''என்ன வீரபாரதி... எனிதிங் ராங்.''

''நத்திங்... ஆமா இதென்ன போட்டோ?''

''சுவாமி ச.பா... உங்களுக்கு தெரியாது . கேள்விப்பட்டதில்லை நீங்க?''

''உம் பட்டுருக்கேன்... இந்த நாட்டுல பாதிபேருக்கு மேல் இவர் பக்தர்கள்தானே...''

''வெரி கிரேட் மேன். நிஜமாலுமே தெய்வப்பிறவி.''

''ஒரு டாக்டர் நீங்களே இப்படிச் சொல்றது ஆச்சரியமாயிருக்கு.''

''ஒரு பத்திரிகையாளர் நீங்க. இப்படித்தான் சொல்வீங்க. ஒருமுறை அனுபவப்பட்டுட்டா மாறிடும்...''

''அனுபவப்பட்டுட்டா... அனுபவப்பட்டுட்டான்னா எப்படி புரியல.''

''அது வந்து... எனக்கு சொல்லத் தெரியல வீரபாரதி. ஆனா ஒண்ணு நமக்குமேல ஒரு சக்தி இருக்கு. அதோட பிரதிநிதி இவர். எனக்கு சந்தேகமில்ல...''

''அதான் எப்படி?''

''என் ட்ரீட்மென்ட்ல ஒரு கேன்சர் பேஷண்ட். 99 சதம் அவர் பிழைக்கமுடியாதுன்னு நாங்க நாள் குறிச்சுட்டோம். அவர் ஒரு ச.ப. பக்தர். அவர் நம்பிக்கை அந்த பக்தரை

காப்பாத்தி அந்த 99 சத சான்சே இல்லாம செய்திடிச்சுன்னா பாத்துக்கயேன்...''

''இது தற்செயலா கூட நடந்துருக்கலாமில்லையா?''

''இருக்கலாம். ஆனா எப்பவும் தற்செயல்ங்கறது ஒரு தடவை நடப்பதுதான். பல தடவைகள் நடந்தா?''

''எது பல தடவை நடந்திருக்கு?''

''ச. பாவோட திருவிளையாடல்...'' வீரபாரதிக்கு எரிச்சல் வந்தது.

''ஏன் டாக்டர் இந்த மாதிரி அற்புதம்லாம் இந்தியால மட்டும்தான் நடக்கணுமா... இந்த உலகத்துல வேற எங்கேயும் நடக்காதா... அங்கெல்லாமும் ஜனங்கள் வாழ்க்கைகள் இருக்குல்ல...?''

''ஏன் நடக்காம... நடந்துகிட்டுதான் இருக்கு வீரபாரதி. ச.ப. இருக்கும் போதே அமெரிக்காவுலே ஒரு பக்தர் முன்னால தோன்றியிருக்கார்.''

''புடலங்கா. இவ்வளவு சக்தியுள்ளவரை வெச்சிட்டு, கார்கில் சண்டையில் எவ்வளவு மரணங்கள்... தேவையா? இவர் நவாஸ் ஷெரீப் மனசுல புகுந்து நட்போட இருக்கற எண்ணத்தை வலுப்படுத்தியிருக்கலாமே''

''இதுக்கெல்லாம் சரியான பதில் இருக்கு வீரபாரதி. இந்த யுத்தம் மரணம்லாம் கசப்பான அனுபவங்கள்தான். ஆனா இதனால எவ்வளவோ நல்லதுகளும் கண்ணுக்கு தெரியாம நடக்கலாம் இல்லியா?''

''சப்பைக்கட்டு... சரியான சப்பைக்கட்டு. மைடியர் டாக்டர் சார். மனுஷ சக்திக்கு ஒரு எல்லை இருக்கு. பயலாஜிகலா சில கணக்கு இருக்கு. அதை கூறுகட்டி பிரிச்சுப் பார்க்கமுடியும். மத்த எல்லாம் சுத்த ஹம்பக்...''

"அப்ப ச.ப. வோட சாகசங்கள் உங்க வரைல சித்து விளையாட்டா...?"

"இந்த சித்து விளையாட்டே ஒரு குழப்பமான விஷயம்தானே?"

"ஓ.கே... நாம இதைப்பத்தி பேசி ஏன் மண்டையை உடைச்சிக்கணும். நீங்க எதுக்கும் உங்க சப் எடிட்டர் விஷயத்துல மோசமான முடிவும் வரலாம். மனச திடப்படுத்திக்குங்க..."

டாக்டர் இறுதியாக இப்படி கீறிப் பார்க்கவேண்டாம். வீரபாரதி முகத்தில் கவலை குழப்பம் ஹீரோ ஹீரோயின் கணக்காக டூயட் பாடிற்று.

கைகட்டியபடியே வெளியே வந்தார்.

ஸ்ரீநாத் நுழைந்து கொண்டிருந்தான்.

"சார்..."

"ப்ச்ச!"

"என்ன சார்... நான் சொன்னப்ப நம்பலையே நீங்க இப்ப பார்த்தீங்களா?"

"வேண்டாம் ஸ்ரீநாத் தயவு செய்து நீயும் அந்த சாமியார் தொடர்பாக எதுவும் பேசவேண்டாம். வர்ற வார மேட்டர்லாம் டேபிள்ல அப்படியே இருக்கு. கலெக்ட் பண்ணி ஃபிக்ஸ் பண்ணுங்க. இங்க நான் பாத்துக்கறேன்."

"அதை நான் பாத்துக்கறேன். ஆனா திரும்பவும் சொல்றேன். உங்களுக்கு இந்த ஈகோவும் கர்வமும் ஆகாது சார். வரேன்."

வந்த சுவடு தெரியாதபடி கிளம்புகிறான். அவன் சொல்வதிலும் உண்மை இருக்கிறதோ? வீரபாரதி பார்த்தபடியே நிற்கிறார்.

7

'நாம் பிறக்கும் முன்பே இந்த உலகம் இருந்தது. நாம் போன பிறகும் இது இருக்கும். வந்து போகிற நாம் காலக் கணக்கில் கரைந்து போகிற புள்ளிக்கும் கீழானவர்கள். புள்ளிகளால் உலகை புரிந்து கொள்ள முடியாது. ஆனால் புள்ளி உலகில் கரையும் போது அதுவும் உலகமாகிறது. அப்பொழுது புரியுமோ?"

துள்ளாடியபடி வந்திருக்கிறார் அந்த மனிதர். முகம் கொள்ளாத தாடி. அழுக்கு வேட்டி சட்டை. ரிசப்ஷனில் இருக்கும் ஸ்ருங்காரமான பெண்ணைப் பார்த்து "வீரபாரதி இருக்காரா?" என்று கேட்டார்.

"யார் எடிட்டரா?"

"ஓ... அவன் எடிட்டரா இங்க..."

"நீங்க...?"

"நான் உங்க எடிட்டருக்கு எடிட்டர். அதாவது அவனோட பள்ளிக்கூட வாத்தியார்."

"பேர்..."

"பிரம்மானந்தம்."

"சார் ஹாஸ்பிடலுக்கு போயிருக்கார். இன்னிக்கு வரமாட்டார்."

"என்ன உடம்புக்கு?"

"அவருக்கு ஒண்ணுமில்லை. எங்க ஆபீஸ் சப் எடிட்டர் ஒருத்தருக்கு ஹார்ட் அட்டாக். அதான்."

"அப்படியா... நான் அவசியம் அவனைப் பார்க்கணும்மா..."

"அப்ப ஹாஸ்பிடலுக்கு போய் பாருங்க..."

"எந்த ஹாஸ்பிடல்?"

அந்த பெண் பேரைச் சொன்னாள். அவரும் திரும்பத் தொடங்கினார். நடையில் சரியான சாராயத் தள்ளாடல். ஆனால் இங்கே போதை இல்லை முதுமை.

அந்த ஆட்டோ ஹாஸ்பிடலில் தேங்கி அந்த பெரியவரை உதிர்த்து விட்டு மீட்டருக்கு மேல் காசு பார்த்து விட்டுத்தான் நகர்ந்தது.

"நான் ஏழைப்பட்டவன்பா... என்னை ஏமாத்தாதே..." என்று அவர் சொன்னது ஆட்டோ டிரைவர் காதிலேயே விழவில்லை.

தடுமாறியபடி நடக்கிறார். மருந்துவாடை, ஸ்ட்ரெச்சர் ஓட்டம், அழுகை பிலாக்கணம் எல்லாம் காதிலும் மூக்கிலும் எதிரொலிக்க கண்ணில் படுகிறார் வீரபாரதி.

"சார்ர்ர்ர்..."-ஓடி வருகிறார்.

"எப்படி இருக்கே?"

"நல்லா இருக்கேன். எங்க சார் இவ்வளவு தூரம்?"

"ஒண்ணுமில்லப்பா உன் கிட்ட ஒரு உதவி கேட்டு வந்துருக்கேன்."

"நான் இங்க இருக்கறது எப்படி தெரியும் உங்களுக்கு?"

"உன் பத்திரிகைல சொன்னாங்களே..."

"ஐய்யோ அங்க போயிருந்தீங்களாக்கும்..."

"ஆமாம்பா..."

"வாங்கோ இப்படி உக்காருங்க. என்ன விஷயம்?"

"ஒண்ணுமில்லப்பா. எனக்கொரு பேரன் இருக்கான். திடீர்னு காணாம போயிட்டான். நானும் தேடாத

இடமில்லை. உன் பத்திரிகைல ஒரு விளம்பரம் அது சம்பந்தமாக கொடுக்கணும்."

"அதுக்கென்ன கொடுத்துட்றேன் சார். ஆமா என்ன வயசு பேரனுக்கு?"

"ஆறு வயசுதான். தலைச்சன் குழந்தைப்பா. யாராவது பலி கிலி கொடுக்க தூக்கிட்டு போய்ட்டாங்களோன்னு ரொம்ப பயமா இருக்கு..."

"பலியா... என்ன சார் இது அப்படியெல்லாம் இருக்காது..."

"அப்படி எல்லாம் சொல்லாதே. என் கிராமத்துல அந்த மாதிரி பல சம்பவங்கள் நடந்திருக்கு. அதான் பயமா இருக்கு."

'பல சம்பவங்களா... இது வெளி உலகுக்கு தெரியுமா?"

"அரசல் புரசலா தெரியும். ஆனா அதைப்பத்தி பிரஸ்தாபிக்க யாருக்கும் தைரியம் கிடையாது, ஏன்னா பலி கொடுக்கற மனிதர்கள் ரொம்ப அபாயகரமானவங்க..."

"ஆமாம். அவங்க அபாயமான அரக்கங்கதான். அவங்களை விடக் கூடாது. சரியான மூட நம்பிக்கை பிடிச்ச பிசாசுப் பசங்க..."

"என்னப்பா பண்ணச் சொல்றே? கெட்ட ஆவிகளை சமாளிக்க இப்படி எல்லாம் சிலர் பண்ணிட்றாங்க..."

ஆசிரியர் பிரம்மானந்தம் தன் பேச்சின் போக்கில் கெட்ட ஆவி என்று பேசியது வீரபாரதியை காலரைப் பிடித்து திருப்பியது.

"என்ன சொன்னீங்க... கெட்ட ஆவிகளா?"

"ஆமாம்பா... நீ கேள்விபட்டதில்லையா?"

"இந்த ஆவி சமாசாரத்தை நம்பறீங்களே சார்..."

"அடப்பாவி... இருக்கறது எப்படி இல்லேன்னு சொல்ல முடியும்?"

"எங்க சார் இருக்கு... நீங்க வேற?"

"என்கூட வா காட்றேன். பாத்தா அரண்டு போயிடுவே."

"வேண்டாம் சார், எதாவது புகையை பார்த்துட்டு நீங்களும் பயந்து போய் மத்தவங்களையும் பயமுறுத்தாதீங்க. அதெல்லாம் பொய். கப்சா. அதை விடுங்க. உங்க பேரனைப் பத்தின டீடெய்ல்ஸ் தாங்க. போட்டோ இருக்கா."

"எல்லாம் இந்த கவர்ல இருக்கு. இதோ பார் வீரபாரதி நான் இப்ப சொல்றத நல்லா கேட்டுக்கோ. சில விஷயங்களை எல்லாம் அனுபவிச்சாதான் மனுஷங்க நம்புவாங்க. இந்த ஆவி சமாசாரமும் அப்படிதான். என் கிராமத்துக்கு பக்கத்துல இருக்கு கலிங்கமேடுன்னு ஒரு இடம். அங்க ஒருத்தன் இருக்கான். ஆவிகளை கைக்குள்ள வெச்சுகிட்டு அவன் காட்ற வித்தையை பார்த்தா அரண்டு போயிடுவே..."

"என்ன வித்தையெல்லாம் சார் அவர் காட்றார்?"

"நீ யார்... என்ன பண்றே... என்ன நினைக்கறே எல்லாத்தையும் புட்டு புட்டு வெச்சிடுவான்."

"இதுக்கு ஃபேஸ் ரீடிங் தெரிஞ்சா போதுமே. எதுக்கு ஆவி புகையெல்லாம்?"

"டேய்... நான் இதெல்லாம் யோசிக்காதவனா? உனக்கு சைன்ஸ் சொல்லிக் கொடுத்தவன் நான். இந்த கேள்வியெல்லாம் கேட்டுக்காம இருப்பேனா என்ன..."

"அப்ப அதெல்லாம் உண்மையா..."

"உண்மைங்கறதாலதான் பல சாமியார்கள் வண்டி இன்னிக்கு ஓடிகிட்டு இருக்கு. கேரளாவுல எனக்கு தெரிஞ்சு ஒரு நம்பூதிரி இருக்கான். அவன் இந்த ஆவி, பூத பிசாசுகளை பிடிச்சு வெச்சிருப்பவன்.

வருஷத்துக்கு ஒருதடவை இவனை சில சாமியார்கள் போய் பார்த்து பணம் கட்டுவாங்க, பதிலுக்கு அவனும் எதாவது ஒரு ஏவல் தேவதையையோ, ஆவியையோ அவங்களுக்கு ஏவல் செய்ய பணிப்பான், இவங்களும் திரும்பிவந்து அவை துணையோட அருள்வாக்கு சொல்லி இங்க பிழைப்பை ஓட்டுவாங்க."

-பிரம்மனாந்தம் சொல்வதில் அங்கும் இங்குமாக நிஜங்களும் பொய்யும் கலந்து தெரிந்தது.

அப்படியே இந்த விஷயத்தை சக்கரவர்த்தி பரந்தாமனுக்கு பொருத்திப் பார்த்தார்.

தன்னோடு பேசும்போது கூட உங்கள் பேத்தி வயதுக்கு வந்துவிடுவாள் இன்று என்றாரே... எதிரில் டீ கப்பில் டீ இருப்பதை கூட சொல்ல முடிந்ததே...

ஒருவேளை ஆசிரியர் பிரம்மானந்தம் சொல்வது போல எல்லாம் ஆவிகள் செயலோ? அப்படியானால் ஆவி என்பது நிஜமோ?

தன்னை மறந்து சிலையாகி யோசித்தபடி அமர்ந்து விட்டவரைப் பார்க்கவும் பிரம்மானந்தத்துக்கு இடித்தது.

"என்ன வீரபாரதி... என்ன சிந்தனை?"

"ஒண்ணுமில்லை நீங்க சொன்னமாதிரி இங்க ஒருத்தர் இருக்கார். அதான் யோசிச்சேன்."

"ஒருத்தரா. ஊருக்கு நூறுபேர் இருக்காங்க. நேத்து கூட ஊர் மயானத்துல ஒருத்தன் வந்து உக்காந்துகிட்டு

கடாவெட்டி தள்ளிகிட்டு இருந்தான். சட்டி சட்டியா ரத்தம். கேட்டா முனிக்கு சாந்தி பண்றானாம்.

இப்படிப்பட்டவங்க கையிலெல்லாம் என் பேரன் சிக்கிட்டா என்ன பண்றதுன்னுதான் யோசிக்கறேன். குலை நடுங்குது வீரபாரதி.''

''கவலைப்படாதீங்க. நான் பாத்துக்கறேன். நல்லா பளிச்சுன்னு போட்றேன். டி.வி.க்கும் சொல்லிட்றேன்.''

''செய்யப்பா உனக்கு புண்ணியமா போகட்டும். நான் வராட்டா...''

-பிரம்மானந்தம் கிளம்பத் தயாரானார். வீரபாரதியும் ஒரு கும்பிடு போட்டு அனுப்பிவிட்டு திரும்பினார்.

செல்போன் கூப்பிட்டுது.

காதைக் கொடுத்தபோது ஒரு நல்ல செய்தி.

''அப்பா நம்ம ரம்யா பெரியவளாயிட்டா.'' அந்தச் செய்தி வீரபாரதியை ஒரு ஓரமாக சுருட்டி உட்கார்த்தி விட்டது. அந்த க்ஷணம் சக்கரவர்த்தி பரந்தாமனைப் பற்றிய எண்ணத்தில் புதுப்புது பரிமாணங்கள்.

ஆசிரியரை மட்டும் சந்திக்காமல் இருந்திருந்தால் அவர் மட்டும் அந்த ஆவி பேய் சமாசாரங்களை பற்றி பேசாமல் இருந்திருந்தால் இப்பொழுது நிச்சயம் சக்கரவர்த்தி பரந்தாமன் ஒரு தெய்வமாகவே ஆகியிருப்பாரோ என்னவோ...

நடுவில் டாக்டரிடம் இருந்து அழைப்பு வந்தது. பல்ஸ் டவுன் ஆகிவருவதை கூறியவர் நம்பிக்கையிருந்தால் கடவுளைப் பிரார்த்திக்க சொன்னபோதுதான் ஒரு மாதிரியாகிவிட்டது.

ஜான்சன் மனைவி அழுதபடியே இருந்தாள்.

அந்த ஊமைப்பெண் அம்மா அழுவதற்கான காரணமே தெரியாமல் அவளைப்பார்த்தபடி உட்கார்ந்து கொண்டிருந்தது.

''ஜான்சன் நீ செத்துவிடக்கூடாது. உனக்கு எதுவும் ஆகிவிடக்கூடாது'' வீரபாரதி தீர்மானப் பின்னல் போட்டுக் கொண்டு எழுந்தார்.

அவளை நெருங்கினார்.

''இதோ பாரும்மா தைரியமா இரு. நான் ஒரு முக்கியமான வேலையா போறேன். போய்ட்டு வந்துட்றேன்.''

-வெளியே காத்திருக்கும் மாருதியை கிளப்பினார். அது நேராக சக்கரவர்த்தி பரந்தாமனின் ஆஸ்ரம இருப்பிடம் நோக்கித்தான் போனது.

நேருக்கு நேர் சக்கரவர்த்தி பராந்தாமனிடமே சில விஷயங்களைப் பேசி பார்த்து விடுவது நல்லது என்று தோன்றியதால் வந்த விளைவு.

ஆஸ்ரம வாசலில் அதிசயமாக யாரையும் காணவில்லை. வழக்கமாக கூட்டம் கட்டி ஏறும். காரும் ஆட்டோவும் புகை கக்கித்தள்ளும். இன்று என்னாயிற்று? காரைவிட்டு இறங்கி உள்ளே நுழையவும் எதிர்ப்பட்டான் ஒருவன்.

''ஸ்வாமிஜி இல்லையா?''

''இல்லையே... அவர் கேரளா போயிருக்கார்...''

''கேரளாவுக்கா... அங்க எங்க?''

''அதெல்லாம் தெரியாது.''-அவன் போய்விட்டான். வீரபாரதி நெற்றியில் டிராகன் வால் விழுந்து புரள்வது போல ஒரு நமைச்சல்.

ஆசிரியர் பிரம்மானந்தம் மனதின் மைதானத்தின் நடுவில் நின்று பேசுவது போலவும் ஒரு பிரமை.

சக்கரவர்த்தி பரந்தாமன் கேராளவுக்கு ஒருவேளை பிரம்மானந்தம் சொன்னது போல எவனாவது நம்பூதிரியைப் பார்க்கத்தான் போயிருக்கிறாரோ?

அவன் தரும் பேய் பிசாசு சமாசாரங்களை வைத்துக் கொண்டுதான் இங்கே டிகால் வேலையெல்லாம் காட்டுகின்றாரோ?

நின்றபடியே யோசிக்கிறார்.

''என்ன சார் போகலையா... நாளைக்கு வந்துடுவார் ஸ்வாமி கேரளா பக்கம்தான் ஆலப்புழைவரை போயிருக்கார்''-ஒருவன் கேட்டபடி தாண்டிப்போனான்.

ஆலப்புழை வரைக்குமா... எதற்காக இருக்கும்... விடக்கூடாது விடவே கூடாது. மனதிற்குள் கேரளத்து நிருபர் அச்சுதன் குட்டி ஞாபகத்துக்கு வந்தான்.

அச்சுதன் குட்டி உனக்கொரு அசைன்மென்ட்!

8

'இந்த உலகத்தில் அறிவதில் பிரதானமானது தன்னை அறிவதே... அந்த முயற்சியை ஒரு வன் மேற்கொண்டால் ஏழு பிறப்பையும் அறிந்து கொள்ள ஜாதகம் துணை செய்யும். அதோடு தியானமும் தவமும் சேர்ந்துவிட்டால் காற்றைப் பார்க்கும் அளவு கண்களுக்கு ஒளிவரும். வந்திருக்கிறது. அதற்குப் பெயர்தான் ஞானதிருஷ்டி.

மணி ஆறாகிவிட்டிருந்தது.

அச்சுதன் குட்டி தொலைபேசி மூலம் செய்தியறிந்த போது மிகச்சாதாரணமாக அதை எதிர்கொண்டான்.

''இதெல்லாம் ரொம்ப சாதாரணமான விஷயமாச்சே சார் இங்க.'' என்றான்.

''என்ன சாதாரணமோ... நீ எப்படியாவது சக்கரவர்த்தி பரந்தாமனை ஃபாலோ பண்ணி அந்த ஆள் யாரை சந்திக்கிறான் என்ன பண்றாங்கறதை கண்டுபிடிச்சு சொல்.''

இங்க ஜான்சன் நிலை ரொம்ப மோசம்.

ஜான்சனுக்கு வந்துருக்கற ஹார்ட் அட்டாக் இயல்புக்கும் வயசுக்கும் மீறின ஒண்ணு. அஃப்கோர்ஸ் ஹார்ட் அட்டாக் யாருக்கும் வேணும்னாலும் எந்த வயசுலையும் வரலாம். இருந்தாலும் இப்ப இந்த சம்பவத்துக்கு பிறகு என்னால கேஷுவலா இருக்க முடியல.

ஜான்சனை அந்த சக்கரவர்த்தி பரந்தாமன்தான் எதாவது செய்வினை செய்து படுக்கவெச்சுட்டாரோன்னுல்லாம் தோணுது.''

''இருக்கலாம் சார்... சில சாமியார்கள் தங்களோட இமேஜை காப்பாத்திக்க எந்த எல்லைக்கும் போவாங்க. நம்பி நாம கால்ல விழுற வரை விடமாட்டாங்க...''

''நானும் இந்த மந்திர தந்திரங்களை விடப்போறதில்ல. எது உண்மையோ அது எனக்கு தெரிஞ்சாகணும். ஜான்சனும் பிழைச்சாகணும்.''

''நீங்க கவலைப்படாதீங்க... இங்க எனக்கு தெரிஞ்சு ஒரு பெரியவர் இருக்கார். வேதநாராயண நம்பூதிரின்னு பேர்... நூத்து பத்து வயசு. இன்னிக்கும் மனுஷன் அதிகாலைல புழாவுல பச்சைத் தண்ணில குளிக்கறவர். நல்ல காரியங்களுக்கு மட்டுமே மந்திர தந்திரங்களை பயன்படுத்தறவர். நான் அவரைப் போய் பார்த்து ஜான்சனுக்கு உதவ முடியுமான்னு பாக்கறேன்.''

"முதல்ல அதைச் செய் அச்சுதா, உனக்கு புண்ணியமா போகும். அரசியல்வாதிகளோட மிரட்டல்களையும், ரவுடிகள் சமூக வீரோதிகள் மிரட்டல்களையும் ஒரு பத்திரிகையாளன் சந்திருச்சிருக்கான். ஆனா ஒரு சாமியார் மூலமா வந்துருக்கற இந்த மாதிரியான மிரட்டல் எனக்கு கொஞ்சம் புதுசுதான். இதுல நான் ஜெயிச்சே தீரணும்."

"கவலைப்படாதீங்க... நான் பாத்துக்கறேன்..."

"யூ ஹேவ் வெரி ஃப்யூ அவர்ஸ் ரொம்ப வேகமா இருக்கணும் உன் செயல்..."

"பாத்துக்கறேன் விடுங்க ஜனாதிபதியையே நான் செக்யூரிட்டியை மீறி சந்திச்சு பேட்டி எடுத்திருக்கேன். இது என்ன..."

"ஓ.கே. ஆல் த பெஸ்ட்..."

அச்சுதன் போனை வைத்தான். நிமிர்ந்தான். தன் வீட்டை விட்டு வெளியே வந்தான். தென்னை சூழ்ந்த பச்சைக் கேரளத்தின் மலைப்பாங்கான வீதிகளின் சரிவில் ஆட்டோக்களின் ஊடுருவல்கள்.

ஒன்றை கை தட்டி அழைத்து ஏறி அமர்ந்தான். "வேதபுரம் போய்க்கோ..." என்றான்.

வேதபுரம்.

வேத நாராயண நம்பூதிரி இருக்கும் இடத்தின் பெயர். ஆறும் கடலும் சங்கமிக்கும் அழகான இடத்தை ஒட்டி ஆயிரமாயிரம் தென்னைக்கு நடுவில் குளிரக் குளிரக் கிடந்தது. ஆட்டோ குளிர் நடுக்கக்காரனாய் குலுங்கியபடி உள்ளே நுழைகிறது.

உள்ளே ஒரு ஓட்டுக் கூரை வீடு... ஆனால் மாடி போல் உயரம். சீட்டுக் கட்டு போல் அடுக்கு. பளிங்குக்கல் தாழ்வாரத்தோடு ஜிலு ஜிலுப்போடு... கூடவே மின்சார

விளக்கே இல்லாத அந்த காலக் கோயில் போல ஒரு வித இருட்டு.

அச்சுதன் நுழைகிறான்.

அங்கங்கே மூங்கில் பிரம்பு நாற்காலிகள் ஒருவித தசாங்க வாசம் பரவிய காற்று. ஊடே "ஆரானு" என்கிற கேள்வி.

கேள்வி வந்த திக்கைப் பார்த்த போது ஒரு மூலையாக தீட்டுப் பெண் போல ஒரு கிழட்டு உருவம் பனை ஓலைப் பாய் ஒன்றின் மேல் தெரிந்தது. காஞ்சிப் பெரியவர் திரும்ப வந்து விட்டாரோ என்று எண்ணத் தோன்றியது.

"நம்பூதிரி... நான் அச்சுதன் நீங்கள காணாமின்னு."

"எந்தா விஷயம்."

அவன் அவர் அருகே பவ்யமாக அமர்ந்து விளக்கி முடித்தான். சரியாக காது கேட்காதபடியால் வேத நாராயண நம்பூதிரியும் காதருகே கை வைத்துக்கொண்டு ஒலியை கூட்டிப் பிடித்து கேட்டுக் கொண்டார்.

பின் முகத்தில் சுருக்கம் பரவ மோடு பார்த்தார். இனி அவர்களது மலையாளம் நமது தமிழில்... ஆமாம் இப்ப என்ன மணி?"

"ஆறு முப்பத்தஞ்சு."

"ஒரு நிமிஷம் இரு. பிரஷ்ணம் பாக்கறேன், நீ வந்த இந்த நிமிஷத்தில் குளிகன சஞ்சாரமிருந்தால் இது விஷமிக்க வேண்டிய சமாசாரமே, இல்லைன்னா கவலைப் படாண்டா..."

எழுந்து போய் ஒரு ஓலைப் பெட்டியை சுமக்க மாட்டாது சுமந்து வந்தார் அந்த கிழட்டு மனிதர். அதனுள்ளே சோழிகள். அதில் கூடவே ஒரு யந்திரம் வரையப்பட்ட மரப்பலகை.

எடுத்து விரித்து அதன்மேல் சோழிகளை கைகளை கூப்பி நமஸ்கரித்து விட்டு விட்டெறிந்தார். பல சோழிகள் குப்புறவும் சில நிமிர்ந்தும் விழுந்தது. கூட்டியதில் நிமிர்ந்தது எட்டாகவும் குப்புற விழுந்தது எட்டாகவும் இருந்து அவரை மிரட்டியது.

கண்களில் அதிர்ச்சி பரவியது. கன்னத்து தசை நார் பரப்பு சுருங்கி தளதளத்து கோழிக் கொண்டை போல ஆடியது.

"என்ன நம்பூதிரி..."

"குளிகன் சஞ்சாரமிருக்கு... சனியின் பாதசாரம் வேறு. சாயா கிரகங்களான ராகு கேது தோஷம் வேற... அந்த ஜான்சன் மறிக்கப் போவது சத்யம். அது விதிப்பாடே! யாதொரு ஏவலோ பில்லியோ துஷ்டப் பிசாசோட செயல்பாடோ இல்லை..."

வேதநாராயண நம்பூதிரி விளக்கம் அச்சுதனை மிரட்டியது.

"நம்பூதிரி இது நடக்கான் பாடில்ல. நடக்கக்கூடாது. தங்கள் ஏதாவது செய்ய இயலுமோ?"

"முடியாது மோனே... எனக்கு மட்டுமல்ல யார் கிட்டேயும் அதற்கான சக்தி இல்லை. அந்த சக்கரவர்த்தி பரந்தாமன் சொன்னது வாஸ்தவமே..."

"பின்னே காத்து ரட்சிப்பதாகவும் சொன்னாரே அவர். எப்படி?"

"தெரியல... உயிர் நாள மதியம் ஒரு மணிக்கு பிரியணும். அதுவரைக்கும் ஜீவ சக்கரம் சுழற்சி இருக்கு. பின்னே அது சுழலுணும்னா அந்த நாராயணன் அணுக்ரஹிச்சால்தான் சாத்யம்..."

"நாராயண அனுக்ரகம் உண்டோ... பாத்து சொல்லணும்."

"உண்டுன்னுதான் சொல்லணும் இல்லேன்னா இது குறிச்சு நீ பிரஸ்தாவிக்க மாட்டாய் அந்த சன்யாசியும் ஒப்புதல் தந்திருக்க மாட்டான்."

"சரி... அந்த சன்யாசி அதாவது சக்கரவர்த்தி பரந்தாமன் சத்யமான சன்யாசியா... இல்லை கள்ளச் சன்யாசியோ...?"

"அவன் சத்யமானவன். ஆனால் அவனது ஆதாரங்கள் கள்ளத்தனங்கள். ஒரு காலத்தில் என்னிடத்திலும் வித்தையறிய வந்தவன் அவன்."

"இப்போ நான் என்ன செய்யட்டும்?"

"ஒண்ணும் செய்யாதே. நான் ஒரு ரட்சை தரேன். அதை அந்த ஜான்சன் கைல கட்டு. தேவகருணை கிடைக்கலாம்."

"நல்லது..." கை நீட்ட வேதநாராயண நம்பூதிரி ஓலைப்பையில் இருந்தே ஒரு ரட்சையை எடுத்து நெற்றிமேல் வைத்து தியானித்து விட்டு தந்தார்.

வாங்கிக் கொண்டான்.

விழுந்து வணங்கிவிட்டு வெளியே வந்தான்.

ஒரு டாக்சி பிடித்தாவது சென்னை பயணப்பட்டுவிட வேண்டும். எவ்வளவு சீக்கிரமாகச் செல்ல முடியுமோ அவ்வளவு நல்லது என்கிற வேகம் காலைக் கவ்வியதோடு பிடரியையும் பிடித்து முன்னே தள்ளியது.

9

'சரீரத்திலேயே பஞ்ச பூதங்கள் உள்ளன. ரகசியமாக ஒன்பது கிரகங்கள். இவை நடுவே

இவற்றை இயக்குகின்றன. இதில் மாரக தசையின் போது விழும் கதிர்கள் இதய ஓட்டத்தை மெல்ல நிறுத்த எல்லா முயற்சிகளும் செய்யும். நாடிகள் கூட அதற்குண்டான வேகத்தில் துடிக்காது. விஞ்ஞானம் இதற்கு காரணம் முதுமை இல்லையேல் வியாதி அதுவுமில்லை செல்களின் செரிவின்மை எனும்.'

எல்லா வேலைகளும் முடிந்து விட்டது. ஸ்ரீநாத் கிளம்பத் தயாரானான். அதற்கு முன்பாக ஜான்சனின் உடல் நிலை பற்றி தெரிந்து கொள்ளும் ஆசை வந்தது.

எடிட்டர் வீரபாரதியின் செல் நம்பரைத் தொடர்பு கொண்டான். அவரும் காதில் பாய்ந்தார்.

"சார்... ஓர்க் ஓவர்."

"சரி நீ கிளம்பு."

"ஜான்சனுக்கு எப்படி சார் இருக்கு?"

"இருக்கு..."

"கவலைப்படாதீங்க சார்... ச.ப. எனக்கு வாக்களிச்சிருக்கார். ஜான்சன் பிழைச்சுடுவார்."

"உம்... பார்ப்போம்..."

வீரபாரதியின் குரலில் சுரத்தில்லை.

"எனக்கு நம்பிக்கை இருக்கு சார். அவருக்கு கருணை அதிகம்."

"சரி ஸ்ரீநாத் உன் பரந்தாம பஜனையை இத்தோட நிறுத்திக்கோ. அவரை கடவுள் சக்திதான்னு சொல்றதையும் நிறுத்திக்கோ. அவர் எப்படி ஒவ்வொரு விஷயங்களையும் முன் கூட்டியே சொல்றார்னு எனக்கு தெரிஞ்சு போச்சு..."

"அது தவசக்திதான்."

"வெளக்கெண்ணை. எல்லாம் மாந்திரீக தந்திரம்யா. கேரளா போகவேண்டியது. யாராவது ஒரு மாந்திரீகனை பார்க்க வேண்டியது அவங்ககிட்ட இருக்கற துஷ்ட சக்தி ஒண்ணை ஹயர் பண்ணிக்க வேண்டியது. இப்படித்தான். ஜான்சன் விஷயத்துல அந்த மனுஷன் புலிவாலைப் பிடிச்சுட்டார். அதை போக போக தெரிஞ்சுக்குவார்."

அதற்குமேல் ஸ்ரீநாத்துக்கு அவரிடம் பேசத் தோன்றவில்லை.

தொலைபேசியை துண்டித்து விட்டு கிளம்பினான். நடக்க ஆரம்பித்தான்.

எதிலோ ஆரம்பித்த பேச்சு எங்கோ போய் எப்படி எப்படியோ ஆகிவிட்ட வருத்தம் நடையில் இருந்தது.

எதையும் நம்பாதவர் ஏதோ துஷ்டசக்திகளின் வேலை என்றாவது இறங்கி வந்திருக்கிறாரே...?

நடந்தபடி சட்டைப் பையில் கையை விட்டான்.

பர்ஸ் அகப்பட எடுத்து விரித்தான். அதில் ச.ப. சிரித்தார். 'ஸ்வாமி... நீங்கள் நிஜத்தில் யார்? எனக்கே குழப்பமாக இருக்கிறது' என்பது போல பார்த்தான். என்ன நினைத்தானோ மனது உடனேயே முழு நம்பிக்கைக்கு தாவியது.

'ஸ்வாமி... என்னை கைவிடாதீர்கள். ஜான்சன் இறந்தால் அதை விதி என்று நம்ப இப்பொழுது யாரும் தயாராக இல்லை. பிழைத்தாலும் உங்கள் அருளால் என்று கருதவும் ஒருவரும் தயாராக இல்லை. விஷயம் ஒரு மாதிரி திருகிக் கொண்டு விட்டது.

எது எப்படியோ உங்கள் தெய்வாம்சமும் பழுதுபடக் கூடாது. ஜான்சனும் பிழைத்தெழ வேண்டும். என்ன செய்யப் போகிறீர்கள்... எப்படி செயல்படப் போகிறீர்கள்?

-கேள்விகள் மனதில் பிதற்றலாய் பீறிட்டது. அழுகை கூட வரும்போல தோன்றியது.

விடிந்து விட்டது.

கிழக்கில் சூரியனும் ஆஜர்.

ஆஸ்பத்திரி வராண்டாவை விட்டு வீரபாரதி அப்படி இப்படி போகவில்லை.

ஆஸ்பத்திரியே ஆச்சரியப்பட்டது.

ஒரு துணை ஆசிரியனுக்காக ஒரு ஆசிரியர் இவ்வளவு கூடவா துடிப்பார்?

சிலருக்கு பெருமையாக இருந்தது.

ஜான்சன் மனைவி கூட சர்ச்சுக்கு போய்விட்டு வருவதாகச் சொல்லிவிட்டு போயிருந்தாள்.

எட்டிப்பார்க்கிறார்.

வீர நடைபோட்ட ஜான்சன் தீயில்பட்ட வாழை இலையாட்டம் கிடக்கிறான் படுக்கையில். மூக்கில் ஆக்சிஜன் குழாயின் ஊடுருவல்.

''சாரி ஜான்சன்... நீ இப்படி படுத்திருக்க நானும் ஒரு காரணம். கொந்தளிப்பான பிழைப்பு நம்ம பிழைப்பு. அதுக்கு இதயமும் ரத்தமும் சரியா ஒத்துழைக்கணும். இல்லேன்னா இப்படித்தான்...''

-அவர் கசிந்துருகும்போது செல்போனில் சிணுங்கல். காதில் பாய்கிறான் அச்சுதன்.

''சார் நான் அச்சுதன்... மெட்ராஸ்ல இருந்துதான் பேசறேன். வந்து கிட்டேயிருக்கேன்.''

''அச்சுதா என்ன இது... நீயே கிளம்பி வந்துட்டே?''

''காரணம் இருக்கு நேரில் சொல்றேன்.''

-செல்போனை முடக்கிவிட்டு சற்று பரபரப்பானார். வீரபாரதி. டீ சாப்பிட்டால் நன்றாக இருக்கும்போல தோன்றியது. கேன்டீன் எங்கே என்று தேடிப் பிடித்துப் போனார். டீயை வாங்கிச் சூப்பும்போது எதிரில் சக்கரவர்த்தி பரந்தாமன் படம் தெரிந்தது. இங்கேயுமா?

அதற்கு மாலை ஊதுபத்தி என்கிற அமர்க்களம் வேறு... டீயை சூப்பும்போதே பார்வை படத்தை வெறித்தது. ஊரையே கெடுத்து குட்டிச்சுவராக்கி வெச்சுருக்கீங்கய்யா... திரும்பினார் எதிரில் ஒரு ஆட்டோ. அதில் முருகன் துணை எனும் வாசகம். எரிச்சலிடம் இரட்டைப்பெருக்கம். ஒரு இந்தியனும் துணையில்லாமல் இயங்க முடியதாக்கும்? கனன்ற சிந்தனையோடு காசை விட்டெறிந்துவிட்டு வெளியில் வந்தார்.

பேப்பர் பார்க்கும் ஆசை வந்தது.

பத்திரிகையாளனின் கட்டாயக்கடமை ஆயிற்றே.

பெட்டிக்கடையை தேடியது பார்வை. அகப்பட்டது அதுவும். முகப்பில் போஸ்டர்களின் வவ்வால்தனம். பார்த்தபடியே நான்கு தினசரிகளை வாங்கி கக்கத்தில் இறுக்கிக் கொண்டு நடந்தார்.

தூக்கம் விழிப்பு-மனச்சலனம்-எல்லாவற்றின் காரணமாக கண்கள் மேல் கரிப்பு.

எதற்கும் ஜான்சனை ஒரு பார்வை பார்க்கும் ஆசை வந்தது. போய் எட்டிப் பார்த்தார்.

மானிட்டரில் மழைச் சொட்டு வளைவுகளாட்டம் ஒளிக்கோட்டின் போக்கு.

ஜான்சன் அசையாமல் கிடந்தான்.

பரிதாபம் நிறைய தந்தான்.

வெளியே வந்தார். அச்சுதனின் ஆட்டோவும் அவனது பிரவேசமும் அப்பொழுது நிகழ்ந்தது.

"சாரே..."

"வா...வா..."

"எந்தா... எப்படி இருக்கு ஜான்சனுக்கு?..."

"இருக்கு... முன்னேற்றமும் இல்ல. பின்னேற்றமும் இல்ல."

"சார் நான் வேதநாராயண நம்பூதிரியை சோதிச்சேன். பிரஷ்ன ஜோதிடம் பார்த்து இது விதிதான்னு பறைஞ்சார். அவர் சொன்னால் சரியாயிருக்கும்..."

"அப்ப அந்த ச.ப' உளறினது உண்மைதானா?"

"ஆமாம்... ச.ப' கூட நல்ல மனுஷன்னு பறைஞ்சார்."

"நல்ல மனுஷன் எதுக்கு கேரளா போகணும்."

"நான் சோதிச்சு... அங்க அவருக்கு ஒரு பிரசங்கம்."

"பிரசங்கம்கற சாக்குல நீ சொன்ன மாதிரி, என் வாத்யார் சொன்னமாதிரி தந்திர வேலை எதாவது பாக்க இருக்கும்..."

"என்ன இது... நீங்கள் இது எதையுமே நம்பாதவர் இப்ப போய் இப்படி பேசறீங்களே. வாங்க முதல்ல நான் ஜான்சனை பாக்கணும்."

"எதுக்கு?"

"வேதநாராயண நம்பூதிரி ஒரு ரட்சை தந்துருக்கார். அதை கட்டணும்."

"இதை கட்டினா எமன் வர மாட்டானாக்கும்" எதுலையும் ரிசல்ட்ட பார்க்கணும். நதி மூலம் ரிஷி மூலம் நோக்காண்டா... வரு சாரே..."

-அவன் அவர் கைகளை பிடித்துக் கொண்டு இழுத்துச் சென்றான். படுக்கையில் நெருங்கி ரட்சையைக் கட்டினான்.

அதற்கு முன்பே ஒரு அதிசயம் போல ஜான்சனிடம் முன்னேற்றம் ஏற்பட்டு கைகால்களில் நல்ல அசைவு தெரிந்தது.

"யோவ் என்னய்யா... உன் ரட்சைக்கும் சக்தி இருக்கு போல..."

"பின்னே..."-அச்சுதனிடம் பெருமிதம்.

வெளியே வருகின்றனர். நின்று நடந்ததில் காலில் வலிவேறு. பேசாமல் போய் காரில் உட்காரலாமா என்று தோன்றவே காரை நோக்கிச் சென்றார்.

காரில் ஏறி உட்கார்ந்தார் வீரபாரதி.

"ரொம்ப நன்றி அச்சுதா. ரட்சைக்காக இல்லே இது. உன் முயற்சி, மனிதாபிமானம் இதுக்காக..."

அச்சுதன் சிரித்தான்.

"பேடிக்கண்டா... ஜான்சன் மூச்சு பிழைக்க வழி இருக்குன்னும் நம்பூதிரி பறைஞ்சது. எப்படின்னு தான் தெரியல..."

"ஹார்ட் அட்டாக் வந்தவங்க திரும்ப பிழைக்கற தில்லையா. அப்படி இருக்கலாம். எதுவா இருந்தாலும் சரி ஒரு மணிதான் கெடு. அப்புறம் இருக்கு அந்த சக்கரவர்த்தி பரந்தாமனுக்கு..."

அந்த ஆளோட ஆதி அந்தத்தை விடபோறதில்ல. கேரளா போய் யாரெல்லாம் இதுக்கு உடந்தை அது என்ன வித்தைங்கறதுல இருந்து எல்லாம் பாக்கப் போறேன்...''

வீரபாரதி மனது சமாதானமே ஆகாமல் பேசிக் கொண்டிருந்தது. நடுநடுவே அந்த ஊமைக்குழந்தையின் பிம்பம் தோன்றித் தோன்றி மனதை மிரட்டியது. கெடிகாரத்தை பார்த்தார் மணி ஏழேகால். நியூஸ் கேட்கும் ஆசை தோன்றவே உள்ளேயே ரேடியோவை திருகினார்.

காதில் ஒரு சீர் பெற்ற குரல்... கார்கில் சண்டை... வாஜ்பாய் பேச்சு... அரசியல் கூட்டணி... சு. சாமிக்கு ஜெ கொடுத்த அல்வா... என்று சரமாரியாக போய் விட்டு இறுதியாக ஒரு சேதியை சொன்ன போது சுரீர் என்று இருந்தது வீரபாரதிக்கு...

'பிரபல ஆன்மிக பிரமுகருக்கும் தெய்விக மனிதன் என்று போற்றப்படுபவருமான ஸ்வாமி சக்கரவர்த்தி பராந்தமன் இன்று காலை கேரளத்து நதி ஒன்றில் அடித்துச் செல்லப்பட்டார்.

நதியில் நீராட அவர் வந்த போது இந்த விபத்து நேரிட்டதாக தெரிகிறது. அவரது உடலை பக்தர்களும் போலீசாரும் தேடி வருகின்றனர்.

இவர்தான் இன்னும் நூற்றாண்டுக்கு இந்த உலகில் வாழ்ந்து சிறப்பு செய்வேன் என்று கூறியிருந்தார்.

இவரது மறைவு ஆன்மிக உலகத்திற்கு ஒரு பேரிழப்பாகும் என்று ஸ்வாமி அருளானந்தர் கூறியுள்ளார்.

ஆயினும் அவர் நிச்சயம் வருவார். அவர் மரணிக்க மாட்டார் அவருக்கு மரணமில்லை என்று அவரது பக்தர்கள் பலர் கூறினர்.

-வீரபாரதிக்கு முதுகுத்தண்டில் கந்தகக் குச்சியை தேய்த்த மாதிரி இருந்தது.

"யோவ் அச்சுதன்... பாத்தியாய்யா... நம்ம ஜான்சனுக்கு மரணநேரம் சொன்ன மனுஷனோட நிலையை...''

"ஊருக்கெல்லாம் பலன் சொல்லுமாம் பல்லி. ஆனா அது தான் விழுமாம் கழனிப்பானையில் துள்ளி... அப்படி இல்ல?''

-அச்சுதனும் அதை கேட்டு வாய் பிளந்தான்.

"சாரே... எல்லாமே வல்லிய புதிராக இருக்கு...'' என்று மலையாளமும் தமிழுமாக கலந்தடிக்கிறான்.

வீரபாரதிக்குள் ஒரு புதிய தெம்பு பெருக்கெடுத்திருந்தது. தன்னையே அறியாதவர் சொன்னதற்காகப் போய் நாம் மிகவும் கவலைப்பட்டு விட்டோமே என்று...

ஜான்சனும் நிச்சயம் பிழைத்து விடுவான் என்று தோன்றியது.

அந்த சந்தோஷத்தோடு காரை கிளப்புகிறார்.

"எங்க சார்?''

"வீட்டுக்கு தான்... வா போய் குளிச்சிட்டு சாப்டுட்டு வருவோம். ஜான்சனுக்கு ஒண்ணும் ஆகாது!''

10

'பூமி மிகச் சிறியது. கடவுள் தன் கையெழுத்தின் போது வைக்கும் ஒரு சிறு புள்ளியளவு கூட அது கிடையாது. லட்சக்கணக்கான நடசத்திர மண்டலங்கள் கிரங்கள் அவற்றின் இயக்கங்களின்

முன் பூமியும் அதில் நடக்கும் சில விந்தைகளும் காலகாலமாக நடப்பவைதான்.'

மணி ஒன்று!

ஜான்சன் அருகில் வீரபாரதி அச்சுதன் அவன் மனைவி எல்லாரும். நடுநடுவே உயிர்ப்பிப்பது போல எழப்பார்த்த ஜான்சன் கடந்த அரை மணியாக ச.ப' சொன்னபடி ஆகிவிடுவான் போல் தெரிகிறது.

ஒரு பக்கம் சொன்னவர் போய்விட்டார்.

சொல்லப்பட்டவனும் போய் விடுவானோ?

ஓடிவருகிறான் ஸ்ரீநாத்தும்...

அவன் வரவும் மானிட்டரில் ஒளிப்புள்ளி அறுந்து போகவும் சரியாக இருந்தது.

டாக்டர் நிமிர்ந்தார்.

''எக்ஸ்ட்ரீம்லி வெரி சாரி...'' என்றார்.

வீரபாரதி முகத்தில் ஈயாடவில்லை.

ஜான்சன் மனைவி அழுது புலம்புவது காதில் கேட்கிறது.

கர்ண கடூரமாக இருக்கிறது.

சமாதானம் செய்யவே முடியவில்லை.

வீரபாரதி ஸ்ரீநாத்தை பார்க்கிறார்.

''போய்யா நீயும் உன் பக்தியும். அந்தாளும் இல்லை. இவன் பிழைக்கவுமில்லை. எல்லாம் போயிடிச்சு... என் ஜான்சான் போய்ட்டான். ஒரு அருமையான மனுஷன் போயிட்டான்யா...'' வீரபாரதி கதறினார். கத்தரித்த நர்சின் குரல்.

''சார்...''

''என்ன?''

''ஹி ஈஸ் அலைவ்...''

''எப்படி?''

''வந்து பாருங்க...''

எல்லாரும் ஓடினார்கள். மானிட்டரில் திரும்பவும் ஒளிப்புள்ளிகளின் ஓட்டம். மார்பில் இதயத்திடம் மெத்து மெத்தென்ற சத்தம் வீரபாரதிக்கு சிலிர்ப்பாக இருந்தது.

''சார் நான் சொல்லலை... ச.ப' கைவிடலை. சார் ச.ப' கைவிடலை...'' மெய்சிலிர்த்தான். அதே சமயம் ஜான்சனும் கண் திறந்தான். எல்லாரையும் பார்த்தான். பின் மெல்லிய குரலில் சொன்னான்.

'நான் ஆற்றோடு போகவில்லை. வந்துவிட்டேன். எனக்கு இன்னும் நூறாண்டு பணி உள்ளது! ஸ்ரீநாத்... உனக்கு தந்த வாக்கினையும் காப்பாற்றிவிட்டேனப்பா! மகிழ்ச்சி தானே?'

ஸ்ரீநாத்துக்கு மயக்கமே வந்துவிட்டது.

ஜான்சனின் அந்த புத்தெழுச்சி மாறுபட்ட பேச்சு பார்க்கும் பார்வை எல்லாமே எல்லாரையும் புரட்டிப் போட்டு விட்டது.

டாக்டர்களும் நர்ஸ்களும் ஒருவரை ஒருவர் வியக்கின்றனர்.

வீரபாரதி கைகட்டி தாடையை தேய்த்துக் கொண்டு அவனைப் பார்க்கிறார்.

ஸ்ரீநாத் மட்டும் சிலிர்ப்பின் உச்சத்தில் இருந்தான்.

''சார் நான் சொல்லலை... நான் சொல்லலை. ஜான்சனுக்கு இப்ப கிடைச்சிருக்கறது மறு ஜென்மம் சார். அதே சமயம் மகத்தான ஜென்மம்.

கேரளாவுல ஆத்தோட போயிட்ட ஸ்வாமி சக்கரவர்த்தி பரந்தாமன் இப்ப ஜான்சன் உடம்புக்குள்ள புகுந்து உயிர்த் தெழுந்துட்டார்.

எதையும் நம்ப மறுத்த ஜான்சன் தானே இப்ப அந்த நம்பிக்கை அனுபவங்களின் வடிவம் ஆயிட்டான்.

ஸ்வாமி... நான் உங்கமேல வெச்சிருந்த நம்பிக்கையை நீங்க வீண் போக்கல. அதையும் காப்பாத்தி உங்க பழைய வடிவத்துக்கும் ஒரு இளமையை திரும்பக் கொண்டு வந்துட்டீங்க... சந்தோஷம் ஸ்வாமி-ரொம்ப சந்தோஷம்..."

ஸ்ரீநாத் ஜான்சனை நெருங்கி கைகளை கட்டிக் கொண்டு பேசி முடித்தான்.

டாக்டரும் வீரபாரதியும் பார்த்துக்கொண்டே நிற்க ஜான்சன் ச.ப' எப்படி கைகளை உயர்த்தி ஆசீர்வதிப்பாரோ அதைப்போல ஸ்ரீநாத்தை பார்த்து ஆசீர்வதிக்கிறான்.

அப்பொழுது எல்லாரையும் ஒதுக்கித் தள்ளிக் கொண்டு முன் வந்தாள் ஜான்சனின் மனைவி ஷிலா. கூடவே அவனது குழந்தை இருவரும் விம்மலோடும் அவன் எதிரில் வந்து நின்றனர். ஜான்சன் இருவரையும் பார்த்தான். கைகளை உயர்த்தி ஆசிர்வதித்தான்.

''என்னங்க... நல்லாயிட்டீங்களா. அது போதுங்க... அது போதுங்க...'' என்றாள் அவள் விசும்பலோடு.

''நான் எப்பொழுதுமே நன்றாயிருப்பவன் தானே... எனக்கு என்ன ஆகிவிட முடியும். என்னை யார் என்ன செய்துவிட முடியும்?'' அவன் கேள்வியும் அந்த தூய தமிழும் அவளுக்கு வியப்பை தந்தது. மலங்க மலங்கப் பார்த்தாள்.

வெளியே சென்று நிற்கத் தொடங்கினார் வீரபாரதி. கூடவே டாக்டரும்.

''என்ன வீரபாரதி... என்ன சொல்றதுன்னே தெரியலியா?'' ஆமோதிப்பு வீரபாரதியின் முகத்தில்.

''எனக்கும் இது புது அனுபவம்தான். என் ஆஸ்பத்திரியில செத்துட்ட ஒருத்தருக்கு உயிர் வந்துருக்கறது இது இரண்டாவது தடவை.

ஏற்கனவே ஒருமுறை ச.ப,'வோட பக்தர் ஒருவர் இறந்து அவர் அருளாலே பொழைச்சிருக்காரு. இப்ப இரண்டாவது...''

''அது சரி... வந்துருக்கறது ச.ப.' வாச்சே நீங்களும் அவரோட பக்தர். விழுந்து கும்பிடலை...?''

''நினைச்சேன். இப்படி கேப்பீங்கன்னு நினைச்சேன் எனக்கு என்னவோ இது ச.ப.'வா இருக்கும்னு தோணலை.''

''என்ன டாக்டர் இது... பேச்சு பாவனை எல்லாம் அப்படியே இருக்கே?''

''இருக்கலாம்... சில சமயம் பேஷண்ட்ல வியாதியின் போது உள்ளது உண்டு. சிலர் என்னை எமதூதர்கள் கையை பிடிச்சு இழுத்துக்கிட்டு போனாங்கன்னுலாம் சொல்லியிருக்காங்க. ஆகையால இது புத்தி பேதலிப்பா கூட இருக்கலாம்னு ஒரு பக்கம் நினைக்கறேன்.''

''பேதலிப்பா?''

''ஆமாம்... நிறைய வாய்ப்புகள் இருக்கு அதுக்கு. ஜான்சன் ச.ப' நினைப்பா இருக்கும்போது வந்ததுதானே ஹார்ட் அட்டாக். அவர் சொன்ன விதி முடியப் போற துங்கற விஷயத்தால வந்த விபரீதம்னுகூட சொல்வேன்.

பகல் பொழுதில் நம் பார்வைல பட்டு மனசை பாதிச்ச விஷயங்கள் இரவுல கனவுல வேறு வேறு வடிவத்துல

வெளிப்படும். அந்த மாதிரி எண்ணங்களோட அழுத்தம் இப்படி ஏன் வெளிப்படக் கூடாது...''

''ரொம்ப ஆச்சரியமா இருக்கு டாக்டர் உங்க பேச்சு. இந்த விஞ்ஞான பார்வை ஏன் ஜான்சனை நான் அட்மிட் பண்ணும் போது இல்ல?''

''எப்பவும் இருக்கும் அது இடத்திற்கும் விஷயத்திற்கும் தகுந்த மாதிரி வேலை செய்யும். இப்ப இவ்வளவு பேசறதால நான் ச.ப' பக்தன் இல்லேன்னு அர்த்தமில்லை. என்வரைல அவர் மரணமில்லாதவர். ஒரு ஆற்று வெள்ளமெல்லாம் அவரைக் கொண்டு போய் உயிரை வாங்க முடியாது.''

''அப்படின்னா...?''

''ச.ப.' உயிரோட எங்கியோ இருக்கார். இங்க ஜான்சன் அவர் பாதிப்புல தன்னையே ச.ப.'ன்னு நினைச்சு பேசிக்கிட்டிருக்கான்...''

டாக்டரின் விளக்கப்படியும் இருக்குமோ? கூடவே பொறி தட்டினார் போல ஒரு கேள்வி இருக்க முடியாது என்றது.

ஏனென்றால் ஹார்ட் அட்டாக்கில் விழுந்த ஜான்சனும் ச.ப.' கேரளத்து ஆற்று வெள்ளத்தில் போனதே தெரியாதே அப்படி இருக்க எப்படி இங்கே உயிர்மூச்சு ஒழுங்குபட்ட நிலையில் அத்தனைச் சரியா எழுந்து நான் மரணமில்லாதவன். ஆற்று வெள்ளத்தில் போனாலும் திரும்ப வந்து விட்டேன் என்பது போல பேசினான்?

அதை கேள்வியாக்கும்போது டாக்டரும் ஆமோதிப்பாரி தலையை ஆட்டி கேட்டுக் கொண்டார்.

குழம்பிப் போனார். சடாரென்று தன் அறைக்குள் நுழைந்து டேபிள் கண்ணாடிக்குள் அடைபட்டு கிடக்கும் படத்தைப் பார்த்து கைகளைக் கூப்பி ''ஸ்வாமி... இது என்ன குழப்பம் எனக்கு ஒண்ணும் புரியல. நீர்தான் புரிய வைக்கணும்.'' என்று பலமான முணுமுணுப்போடு வேண்டிக் கொண்டார்.

வீரபாரதிக்கு எல்லாமே புதிராக இருக்கும்போது ஜான்சனின் அறையில் இருந்து அச்சுதன் ஓடி வந்தான்.

''சார்... சார்...''

''என்ன அச்சுதா... என்னாச்சு?''

''ஜான்சன் மயக்கமாயிட்டான். எகெய்ன் ப்ராப்ளம்?''

-அடுத்த நொடியே டாக்டரும் வீரபாரதியும் அங்கே ஓடினார்கள்.

ஜான்சன் படுக்கையில் தூங்குவது போல கிடந்தான். இடப்பக்கமாக ஸ்ரீநாத்தும், வலப்பக்கத்தில் அவன் மனைவியும் குழந்தையும் நின்று கொண்டு விதிர் விதிர்ப்போடு பார்த்தனர். டாக்டர் பல்ஸ் பார்த்துவிட்டு மார்பின் மேல் காதை வைத்துப் பார்த்தார். இதயம் இயங்குவதை சப்தம் காட்டிக் கொடுத்தது. நிமிர்ந்தார்.

வீரபாரதி பதற்றத்தோடு கேட்டார்.

''என்ன டாக்டர்... திரும்பவும்...''

''நத்திங்... நத்திங்...'' என்றபடி எல்லாரையும் வெளியே போகச் சொல்லிவிட்டு ஆக்சிஜனை எதற்கும் இருக்கட்டும் என்று அப்ளை செய்யத் தொடங்கினார்.

சக டாக்டர்கள் வந்து குழுமி நடந்த சகலத்தையும் பேசி ஆச்சரியமாச்சரியங்களுக்கு உள்ளாகத் தொடங்கினர்.

மருத்துவ உலகம் நிறைய விந்தைகளைப் பார்த்திருக்கிறது.

இறந்துவிட்டதாக் கருதி சுடுகாடு வரை தூக்கிச் சென்ற ஒருவர் சிதையில் தீ பட்டதும் சூடு தாளாமல் தூங்கி எழுந்தவர் போல எழுந்து ஓடி வந்த நிஜங்களும் பல உண்டு.

மார்ச்சுவரியில் பிணங்களோடு பிணங்களாக கிடந்தவர்களும் அவர்களை கூறு போடத் தொடங்கும் போது கண் விழித்து என்னை எப்படி இங்கே கொண்டு வரப் போயிற்று? என்று கேட்ட கதைகளும் உண்டு.

ஜான்சன் விஷயம் இது எந்த ரகமாகவும் இல்லாமல் புது விதமாக இருக்கிறது.

புதிர் மூட்டையாக கனக்கிறது.

ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதமாகப் போட்டுக் குழப்பி எடுக்கிறது.

திரும்பவும் வார்டுக்கு வெளியே கண்ணீர் சிந்திக் கொண்டு நிற்கிறாள் ஷீலா. அருகில் ஆறுதலாக வீரபாரதி.

"சார்... அவர் இப்படியெல்லாம் பேசி நான் கேள்விப் பட்டதேயில்லை. எனக்கு எல்லாமே ஆச்சரியமா இருக்கு எங்களை அவர் மூணாம் மனுஷர் மாதிரிதான் பார்த்தாரு அவருக்கு உண்மையில என்ன சார்...? அவர் பொழைச்சுடுவார்தானே?"

-வீரபாரதியை ஷீலா அரற்றி எடுக்க ஆரம்பித்தாள். அச்சுதனுக்கே அதைப் பார்க்க என்னவோ போல் இருந்தது நடுவில் ஓசைப்படாமல் வீரபாரதியின் தோளைப் பற்றி தனியே அழைத்தான்.

"என்ன அச்சுதன்?"

"சார் நீங்க டாக்டரோட வெளியே போயிருக்கும் போது ஜான்சன் ஐ மின் ச.ப.' என்னைக் கூப்பிட்டு ஒரு விஷயம் சொன்னாரு."

"அவர் உடம்பு தலைச்சேரி குடவல்லிப் புழா ஆத்து வெள்ளத்துல அடிச்சிட்டுப் போய் கடல்ல கலக்கற இடத்துல ஒரு புதருக்குள்ள இருக்காம். அதை யாருக்கும் தெரியாம என்னை பத்திரப்படுத்தச் சொன்னார்..."

"என்னய்யா சொல்றே... இத சொன்னது யார்?"

"ஜான்சன். அதாவது ஜான்சன் உடம்பு மூலமா நம்ம கூட பேசற சக்கரவர்த்தி பரந்தாமன்."

"அச்சுதா... என்ன நீ மேலும் குழப்பறே. டாக்டரே இது ஜான்சனோட உளறலா இருக்கலாம். மன அழுத்தமா இருக்கலாம். இது ஒரு வித Split Fash னு சொல்றார்ப்பா."

"இல்ல சார். படிச்ச கூட்டம் அப்படித்தான் புது புது பேர் வெச்சு எதையாவது சொல்வாங்க. நான் போய் பாக்கறேனே?"

"சரி எதுக்குன்னு சொல்லலையா?"

"சொல்லலை. போய் பாக்கறேன். ஆப்ஷன்ஸை எப்பவும் விடக்கூடாது. அட்டெண்ட் பண்ணி பார்த்துடணும்."

"என்னவோ போ... நான் ஜான்சனை இந்த ச.ப' விஷயத்தை நோண்ட அனுப்பிச்சது தப்போன்னு தோணுது. ஒரு பக்கம் இன்டர்நெட் வாழ்க்கை-மறுபக்கம் இப்படி மாயாபஜார். என்ன எழவுய்யா இது?"

-வீரபாரதி கொந்தளிக்கும் போது எமர்ஜென்சி வார்டில் இருந்து டாக்டர்கள் சலசலப்போடு வெளியே வந்தனர்.

'வீரபாரதி... வீரபாரதி...' என்று சீஃப் டாக்டர் அழைப்பதும் கேட்டது.

ஓடினார் வீரபாரதி.

ஜான்சன் விழித்தபடி இருந்தான். அவரைப் பார்த்து "சார்..." என்றான்.

"ஜான்சன்..."

"சார்... சாரி சார் உங்களை எல்லாம் ரொம்பச் சிரமப்படுத்திட்டேன் போல இருக்கு..."-என்றான். அதற்குள் உள் நுழைந்த மனைவி குழந்தைகளை பார்த்து ஷீலா... மரியா என்று உருகினான். இருவரும் நெருங்கிட அப்படியே படுத்த நிலையில் அணைத்துக் கொண்டான். மகள் மரியா அவன் அருகே அமர்த்தப்பட்டாள். அவன் கரங்கள் அவள் தலையை வருடி விட்டன.

"என்ன ஜான்சன் ரொம்ப பயமுறுத்திட்டியேப்பா. முந்தி கண்விழிச்சப்போ நான் தான் சக்கரவர்த்தி பரந்தாமன்னு சொன்னே... இப்போ இயல்பா பேசறே?"

"அப்படியா... எனக்கு எதுவும் தெரியலையே சார். அப்படியா பேசினேன்...?"

"நல்லாருக்குபோ. எனக்கு ஒண்ணுமே புரியல. ஒரு கணம் ஆடிப் போயிட்டேன். எனிவே இப்பவாவது நல்ல விதமா பேசறியே... தேங்க் காட்!"

"சார் மணி என்ன இப்ப?"

"மணி... மணி... இரண்டு பத்து!"

"ஒரு மணிக்கெல்லாம் செத்துடுவேன்னு சொன்ன அந்த சக்கரவர்த்தி பரந்தாமனுக்கு உடனே ஒரு போன் போடுங்க சார். நான் பேசறேன்..."

"வேண்டாம் உணர்ச்சிவசப்படாம இரு. ஸ்ட்ரெய்ன் பண்ணாதே. அதை பிறகு பார்த்துக்கலாம்."

"என்ன சார் ஸ்ட்ரெய்ன்... நான் நல்லா எனர்ஜெடிக்காதான் ஃபீல் பண்றேன்."

"புடலங்கா. நேத்து மதிய சாயங்காலத்துல இருந்து இப்ப வரை நீ எங்களை படுத்தினபாடு எங்களுக்குத்தான் தெரியும். டேக் ரெஸ்ட் ஃபர்ஸ்ட். ச.ப' பத்தி நீ இனி நினைச்சுட பார்க்கக் கூடாது..."

-வீரபாரதி உணர்ச்சி ததும்ப பேசிவிட்டு வெளியே வந்தார். சீஃப் டாக்டரும் அச்சுதனும் கூட சேர்ந்து வெளியே வந்தனர்.

வெளியே டாக்டர்கள் கூட்டம் ஜான்சன் விஷயம் பற்றிய ஒரு பெரிய சர்ச்சையில் இருந்தது.

"நான் சொன்னது சரியா போச்சா வீரபாரதி. ஜான்சன் மென்டல் ஸ்ட்ரெஸ்லதான் முன்ன கண்விழிச்சப்ப அப்படி பேசியிருக்கான்."

"என்ன சார் மென்டல் ஸ்ட்ரெஸ், ச.ப.' ஆத்தோடு போன விஷயம் ஹவ் ஹி வாஸ் நோ? இட் ஈஸ் நாட் ஸ்ட்ரெஸ் ஆர் எனி அதர் டைப் ஆஃப் டிசீஸ். இட் ஈஸ் பியூர்லி ச.ப'ஸ் திருவிளையாடல்.

தன் சக்தியை புரூஃப் பண்ண அவர் நடத்தின திருவிளையாடலே தான்.

"இஃப் யூ ஹேவ் எனி டவுட் அவர் சொன்ன அந்த பிளேசுக்கு போனா நாம நிச்சயம் அவர் பாடிய பாக்கலாம்."-அச்சுதனோடு ஸ்ரீநாத்தும் சேர்ந்து பேசி வக்காலத்து வாங்க அரைமனதாக வீரபாரதி தலையை அசைத்து போய் பார்த்து வாருங்கள் என்றார். பின் என்ன நினைத்தாரோ தானும் வருவதாகக் கூறி அவர்களுடன் கிளம்பத் தயாரானார்.

11

'மூக்காலும் வாயாலும் சுவாசிப்பதைப் பற்றித்தான் உலகமறியும். ஆனால் நமது குறியாலும் நாம் முயன்றால் சுவாசிக்கலாம்.

சக்தி வழிபாடு புரியும் சாக்தர்கள் இந்தக் கலையில் வல்லவர்கள். இவர்கள் புணர்ச்சியின் போது தங்கள் விந்தினை வெளியே விடுவது போல் விட்டு பெண்விந்தோடு சேர்ந்து பின் உள் இழுத்துக் கொண்டு விடுவர்.

இந்த யோகம் புரிபவர்களுக்கு உடம்பிலிருந்து உயிரைப் பிரிப்பது, கூடுவிட்டு கூடுபாய்வது எல்லாமே சாதாரண விஷயங்கள். ஆனால் இதற்காக மனதையும் உடலையும் அடக்க எஃகுப் பயிற்சி பெற்றாக வேண்டும். அது கோடியில ஒருத்தருக்கு மட்டுமே சாத்தியம்.'

அந்த கார் கேரள மலைத்தலத்தில் பயணத்துக் கொண்டிருந்தது. செம்மண் கரளை பூமி. பாக்கும் தேக்கும் பார்க்குமிடங்களெல்லாம் தெரிந்து பச்சை கொட்டியது.

உள்ளே தீவிர சிந்தனையில் இருந்தார் வீரபாரதி.

"என்ன சார்... எவ்வளவு தான் நிதர்சனமா விஷயங்கள் நடந்தாலும் அறிவு மறுபக்கத்துல அது உண்மையா இருக்க வழியில்லை வழி இல்லைன்னு சொல்லுதுல்ல..." அச்சுதன் பேச்சை தொடங்கினான்.

"ஆமாம் அச்சுதன். அதுதான் உண்மை."

"அந்த உணர்ச்சி உண்மையா இருக்கலாம். எல்லாம் படிச்சதோட பாதிப்பு. விஞ்ஞான பழக்கத்தால வந்த பாதிப்பு..."

"அதுல தப்பென்ன?"

"நிறைய இருக்கு சார். இந்த விஞ்ஞானம் மட்டும் எப்பவும் நிதர்சனம் நிதர்சனம்னு அலையும். இந்த ராமர் பிள்ளை பெட்ரோலை எடுத்துக்குங்க. அது பெட்ரோல் இல்ல. சம்திங் ஏதோன்னு சொல்லி ஒதுக்கிடலை?"

"போகட்டும் அது பெட்ரோல் இல்லாமலே... பட் அது எரிஞ்சதில்லே? அது ஒரு எரிபொருள். இந்த தேசத்துக்கு அது தேவைன்னு ஒத்துக்கலாம்ல?"

"நீ என்ன சொல்றே?"

"நம்ம மெய்ஞான விஷயங்கள் முன்னே விஞ்ஞான விஷயங்கள் சுண்டைக்காய்."

"டேய் போய்கிட்டிருக்கறது ஒரு விஞ்ஞான கண்டுபிடிப்பான கார்ல. போட்டுக்கறது ஒரு விஞ்ஞான கண்டுபிடிப்பான காஸ்ட்லி சட்டை. நீ வேலை பாக்கறதும் அதோட தொடர்புள்ள ஒரு மீடியாவுல. நடுவுல இது சுண்டைக்காயா?"

"ஆமாம்... இவ்வளவு இருந்தென்ன பிரயோஜனம்? ஒரு நெல்மணியை சைன்ஸ் க்ரியேட் செய்யுமோ?"

"வேண்டாம் அச்சுதன். இந்த மாதிரி அபத்தமான கேள்விய நீயும் கேட்காதே. போதும் உன் மெய்ஞான ஜால்ரா. பேசாம வா. அந்த உடம்பு கிடைக்குதான்னு பார்ப்போம்."

"கிடைச்ச பின்னே என்ன செய்வீர்கள் சாரே? ச.ப' வாக்கு சத்யவாக்குன்னு ஒப்புதல் தருமோ நீங்கள்..."

"கிடைக்கட்டும். பிறகு பார்க்கலாம்."

"கிடைக்கும் சார். நிச்சயம் வீண் போகாது. உங்களுக்கு இன்னும் ஏன் சார் இத்தனை சந்தேகம் ச.ப.' சொன்ன எது இந்த நிமிஷம் நடக்கல...?" இது ஸ்ரீநாத்.

"நினைச்சேன். நீ இன்னும் வாயைத் திறக்கலைன்னு நினைச்சேன். ஆரம்பிச்சுட்டியா..."

"பின்ன என்ன சார். எந்த ஒரு விஷயத்துக்கும் ஒரு முற்றுப்புள்ளி உண்டு சார். ஜான்சன் விஷயத்துல அது விழுந்தாச்சு ச.ப.'வும் காரணமில்லாம அவர் உடம்ப பத்தி நம்மகிட்ட சொல்லல. இதன் மூலமா இந்த உலகத்துக்கு அவர் எதையோ சொல்ல நினைக்கறார்.

சில உண்மைகளை கண்ணால பார்த்து, காதால கேட்டும் புரிஞ்சுக்க மறுத்தா நாம கண் இருந்தும் இல்லாதவங்க ஆயிடுவோம் சார்..."

ஸ்ரீநாத் கொந்தளித்தான். நடுவில் அச்சுதன் டிரைவரிடம் ஏதோ சொல்ல அவன் ரேடியோவை திருப்பினான். பாடல் ஒன்று காதில் விழுந்தது. ஓடும் காருக்குள் ஒரு காற்றில் கரைந்து ஓடவிடாத இசை வடிவம்.

ரசித்தார் வீரபாரதி.

அப்படியே "இந்த மாதிரி எளிமையா புரிஞ்சுக்க முடிஞ்ச விஷயமா நம் வாழ்க்கை பற்றின விஷயங்கள் இல்லையே ஸ்ரீநாத். அதை யோசிச்சியா நீ." என்றார்.

"எந்த மாதிரி சார்...?"

"இந்த ரேடியோ மாதிரி... இந்த காத்துல அதோட அலைவரிசை இருக்கு. அதை ட்யூன் பண்ணும்ளே போது பாக்ஸ்ல இருக்கற விஷயங்கள் அதை ரீசீவ் பண்ணி கன்வெர்ட் பண்ணி நமக்கு தேவையான அளவு

சவுண்ட்டோட கொடுக்குது. சுலபமா புரிஞ்சுக்க முடியுது. எப்பவும் எங்கேயும் இந்த ரேடியோ சிஸ்டம் யாரையும் குழப்பறது இல்லை. மாறுவதும் இல்லை. ஆனா இந்த ஆவி உயிர் சமாசாரங்கள் அப்படியா? அவற்றோட அனுபவங்கள் எல்லாமே நிதர்சனமாவே இல்லையே..."

"நிதர்சனமா இல்லையா? நோ சார்... ஜான்சன் ச.ப' மாதிரி பேசினானே. அது போதலையா?"

"அதை ஸ்ட்ரெஸ்னாலையும் கூட இருக்கலாம்கறாரே டாக்டர்."

"என்ன சார் நீங்க... ஜான்சனுக்கு ச.ப. ஆத்தோட போனது எப்படி தெரியும்?"

"அந்த ஒரு கேள்விதான் என்னை இவ்வளவு தூரம் இழுத்துவிட்டு வந்துருக்கு. ஜான்சன் சொன்ன மாதிரி அதாவது ஜான்சன் ச.ப.' மாதிரி வந்து பேசினப்போ சொன்ன மாதிரி உடம்பு இருக்கிற இடம் தெரிஞ்சிடட்டும் அப்ப ஒத்துக்கறேன் விஞ்ஞானம் சுண்டக்காய்னு... அப்ப ஒத்துக்கறேன் ச.ப.' நிஜமாலும் இந்த உலகத்தையே பந்தா உருட்டி விளையாட முடிஞ்சவர்னு... அப்ப ஒத்துக்கறேன். மகான்கள் முன்னால விஞ்ஞான கண்டு பிடிப்பெல்லாம் ரொம்ப அல்பம்னு... நம்ம பத்திரிகையிலையும் ஆன்மிக கட்டுரைகள் தேடல்களுக்கு இடம் ஒதுக்கிட்றேன்."

வீரபாரதி ஏதோ ஒரு வழியாக முடிவுக்கு வந்து விட்டார் போல பேசினார். ஸ்ரீநாத் கை கூப்பி பிரார்த்தித்துக் கொண்டான்.

'ச.ப... உங்களை நான் நம்புகிறேன். என் எடிட்டர் இப்பொழுதுதான் வழிக்கு வந்திருக்கிறார். அவரை இதில் நிரந்தப்படுத்த உங்கள் கருணை வேண்டும். செய்யுங்கள்.

ஜான்சனுக்கு திரும்ப உயிர் தந்தமைக்கு உங்களுக்கு என் நன்றி.'

''என்ன ஸ்ரீ... உன் கடவுள் மனிதர்கிட்ட பிரார்த்தனையா?''

''ஆமாம் சார்... இது நடக்கறதுலதானே சார் என்னோட எடிட்டர் பதவியும் இருக்கு?''

வீரபாரதி சிரித்து விட்டார்.

''நீ பெரிய ஆள்தான்பா... உன் குடுமி சும்மா ஆடலை. காரணத்தோடதான் ஆடுது...'' சொன்னபடி வெளியே பார்த்தார். இருட்டிக் கொண்டிருந்தது.

''ஏம்பா அச்சுதா... இந்த நேரத்துல போய் பாடிய தேடினா கிடைக்குமா...'' ஸ்ரீநாத் நம்பிக்கை இழக்காதபடி கேட்டான்.

''அதெல்லாம் கிடைக்கும். பெட்ரோமாக்ஸ், டார்ச் எல்லாம் எடுத்துப் போகலாம். முன்னே நாராயணன் நம்பூதிரியை கண்டும் பேசணும்.''

''எதுக்கு?''

''எதுக்கா? வல்லிய ஒரு மனுஷர் அவர். மகாஞானி கண்டு நோக்கிட்டு பின்ன சொல்லுங்கள்.''

''அச்சுதா... நேரமாகப் போகுதப்பா...''

''சாரே... எந்தா இது? கேரளம் வந்து மகா புருஷரை காணாது போவது நல்லதில்ல அவரும் ஒரு மாந்திரீக தாந்திரீகராக்கும். ஜஸ்ட் ஒரு பதினஞ்சு நிமிஷம்...''

அச்சுதன் விடவில்லை. அவன் விருப்பப்படியே கார் அந்த இரவுப் போதில் மலைநாட்டின் எல்லையைக் கடந்து உள் பாகத்தில் அசுர வேகம் எடுத்தபடியே போய்

அதிகாலை வேளையாக நாராயணன் நம்பூதிரியின் வனத்திலும் நுழைந்து நின்றது.

பேசிக் கொண்டும் தூங்கிக் கொண்டும் வந்த களைப்போடு முழிப்புதட்டி கதவைத் திறந்து கொண்டு மூவரும் இறங்குகின்றனர்.

நல்ல பனிப்பொழில்.

காதுமடலில் ஜில்லிப்பு பிடித்து திருகிற்று.

உஸ்ஸ்' என்று ஸ்ரீநாத் சிலிர்த்துக்கொண்டான்.

சுற்றிலும் மரக் கூட்டம் நடுவே லேசாய் வெளிச்சம் பட்டுத் தெரியும் தடாகம் போன்ற ஒரு நீர்த் தேக்கம். அதில் நீரலைகள் அசைவுகள் சலசல சப்தம். கூடவே ஒரு குரல்.

''யாரானு அவ்விட...?' நம்பூதிரியின் குரல் அது. அச்சுதன் புரிந்து கொண்டு பதில் சொன்னான்.

''நம்பூதிரி... நான் அச்சுதன்...''

''எந்தா இது... ஈ வேளையில்?'' அவர் கேள்வியோடு எழுந்து ஈரவஸ்த்ரத்துடன் நடந்து வந்தார். தடாகக் கரைமேல் ஒரு ஓரமாக சின்னதாக ஒரு தூமாட்டி தீப விளக்கு. எடுத்து கை அக்குளில் பிடித்துக் கொண்டால் முன்னே தொங்கியபடி ஒளியைக் கொட்டும்.

அதையும் எடுத்துக் கொண்டு அவர்களை நோக்கி வந்தார் நம்பூதிரி.

உடம்பில் துளிகூட நடுக்கமோ பதற்றமோ குளிரோ குடைச்சலோ இல்லை.

''நமஸ்காரம் நம்பூதிரி.'' நெருங்கிவிட்டவரை நமஸ்கரித்தான் அச்சுதன். அவர் தூமாட்டி தீப ஒளியில்

சுற்றி நிற்பவர்களை தன் பூஞ்சை விழிகளால் பார்த்தார். இனி அவனது மலையாள சம்பாஷனை நமது தமிழில்...

"நம்பூதிரி இவர் ஆசிரியர் வீரபாரதி..."

"நமஸ்காரம்!"

"நமஸ்காரம்..."-நம்பூதிரி தன் மனை நோக்கி நடையிட்டபடி சொன்னார். அச்சுதன் பின் தொடர்ந்தபடியே சொன்னான்.

"நம்பூதிரி... அந்த ஜான்சன் பொழச்சுட்டான். அவனுக்கு ஜீவன் வந்துடுச்சு. ஆனா அவன் முழிச்சி எழுந்ததும் அந்த சக்கரவர்த்தி பரந்தாமனைப் போலவே பேசினான்."

-நம்பூதிரி படி ஏறும்போது அதை கேட்டுவிட்டு நின்றார். பின் தொடர்ந்தார்.

மினுக் மினுக்கென்று அங்கங்கே உரி தீபங்கள். மிகச் சன்னமான வெளிச்சம். பிசைந்து பிடித்து நிறுத்தினது போல இருட்டு.

நம்பூதிரிக்கு நடக்கும்போது தடுமாற்றமேயில்லை. ஆனால் வீரபாரதிக்கு மிகத் தடுமாற்றமாக இருந்தது. உடன் நடக்கும் ஸ்ரீநாத்துக்கும்... குளிர்வேறு கூடவே ஊஊ என்று உதட்டைச் சூப்ப வைத்திருந்தது. நம்பூதிரி நடந்து ஒரு மேடை மேல் போய் அமர்கிறார். ஈர உடையை..மாற்றிக் கொள்ளக் கூட தோன்றவில்லை. அச்சுதன் அருகே போய் கைகட்டிக் கொண்டான். பேச்சை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தான்.

"முதல்ல ச.ப' மாதிரி பேசின ஜான்சன் திரும்ப மூர்ச்சையானான். திரும்பவும் எழுந்தப்போ சகஜமா பேசினான். அவனுக்கு ச.ப.' மாதிரி பேசின ஞாபகமே துளிகூட இல்லை.

ச.ப. மாதிரி பேசினப்போ ஒரு முக்கிய விஷயம் சொன்னான்..."

-அச்சுதன் பேச்சை நிறுத்திவிட்டு நம்பூதிரியை பார்த்தான். அவர் கேட்டபடியே தன் தலை கொள்ளாத முடியை முடிச்சுப் போட்டு இடப்பக்கமா அமுக்கியபடி வைத்துக் கொண்டிருந்தார். அவன் பேச்சை நிறுத்தவும் கைகளால் சைகை காட்டி சொல் என்றார்.

அவன் தொடர்ந்தான்.

"ச.ப. இப்போ உயிரோடு இல்ல... இ கேரளத்து குடவல்லி ஆற்றில் ஸ்நானம் செய்கையில் வெள்ளம் கொண்டு போனத அறியும் தானே?"

"அந்த உடம்பு இப்போ ஆறும் கடலும் சங்கமிக்கற இடத்துல ஒரு புதர்ல இருக்கறதா சொன்னார்."

"அப்படியா?"

"அதை எடுத்து பத்ரப்படுத்தும்படி ரகசியமாயிட்டு உத்தரவு போட்டார்."

"ஓஹோ?"

"அதே ஆ பிரேதத்தை கண்டெடுக்க வேண்டி வந்திருக்கோம். இதெல்லாம் நிஜமா பொய்யான்னு காணான் வேண்டி ஆசிரியரும் இ ஸ்ரீநாத்தும் வந்திருக்காங்க."

"செரி போய் நோக்கிட்டு வா..."

"நம்பூதிரி ஆசிர்வதிக்கணும். பிரேதம் கிட்டுமோ?"

"என்ன சோதிச்சால்...?"

"இது என்ன கேள்வி நம்பூதிரி. ச.ப' பத்தி சர்வ மூலமும் தாங்கள் அறியும். அதே நான் தங்களை சோதிச்சு..."

"எ டோய்... அந்த ச.ப. விஷயம் பயங்கர கள்ளமானு... மறிச்ச ஒருவன் ஒரு உடம்பில் நுழைஞ்சு பேசுதல் அசாத்யம்."

"அப்படியானால் ஜான்சன் பேசினது..."

"அது உள் காயம்!"

"உள் காயமோ... பின்னே எப்படி ஜான்சன் ச.ப. மறிச்சு ஆத்தோட போனதை எல்லாம் அறிஞ்சு சொன்னான்."

"எல்லாம் கள்ளம். பயங்கர தற்செயல். யாரிங்கே எடிட்டர்..."

"நான் தான்..."-வீரபாரதி முன் வந்தார்.

"உங்களுக்கு எந்த சோலி இல்லியோ... சக்கரவர்த்தி பரந்தாமன் கொச்சு மந்திர தந்திரம் அறிஞ்ச ஆள். நீங்களும் சில திவசம் இங்கு தங்கி அப்யாசிச்சால் அது போல செய்யலாம். அவ்வளவே. அது ஒரு வித்தை. மனம் வாக்கு காயம் சம்பந்தப்பட்ட வித்தை. சத்தபூர்வமானது அது. மத்தபடி ச.ப.' ஒரு கயவாளி. மறிச்சு பின்னே ஜீவன் கொண்டு வருவது காலத்தில் அசாத்யம்."

-நம்பூதிரியின் விளக்கம் வீரபாரதியை நிமிர்த்தியது. நம்பூதிரிமேல் நம்பிக்கை படரவிட்டது. அச்சுதன் முகமும் ஸ்ரீநாத்தின் முகமும் மட்டும் மிகவும் மாறிப் போய்விட்டிருந்தன.

"சரி சரி நீ போய் பிரேதம் கிடைக்குதான் நோக்கிட்டுவா. அது கள்ளம். ஜான்சன் பறைஞ்சதும் பிராந்தப் பேச்சு. மகா தற்செயல்..."

-நம்பூதிரி பேசிவிட்டு எழுந்து போயே போய்விட்டார். இருளில் மூவரும் மெலிதான விளக்கொளியில் ஒருவரை

ஒருவர் பார்த்தபடி நிற்க வீரபாரதி மட்டும் தெம்புடன் சொன்னார்.

"என்ன அச்சுதன்... அந்த சக்கரவர்த்தி பத்தி உன் நம்பூதிரி ரொம்ப நல்லவிதமா சொன்னதா சொன்னே? என்ன இப்ப இப்படி சொல்றார்?"

"எனக்கும் புரியல சார்..."

"சரி சரி வா. நேரமாகுது அங்கேபோய் தேடிப் பார்ப்போம். முதல்ல ஒரு மணிக்கு செத்துப்போவான்கற விஷயம் உண்மையா பொய்யான்னு பிரட்டி எடுத்தது. இப்ப உடம்பு கிடைக்குமா, கிடைக்காதாங்கற விஷயம் உண்மையோ பொய்யோ, பிரட்டி எடுக்க ஆரம்பிச்சிருக்கு.

எனிவே... எனக்கு நல்ல எக்ஸ்பீரியன்ஸ்தான்!"-வீரபாரதி பேசிக் கொண்டே தடவித் தடவி நடந்தபடி அங்கிருந்து கிளம்பினார். அவர்கள் தொடர்ந்தனர்.

12

'வானிலிருந்து வருவது ஒளி ஒன்று மட்டும் தான். மற்றதெல்லாம் பூமியிலேயே துளிர்த்து பூமியிலேயே முடிந்தும் விடவேண்டும் அதில் சடலம்தான் மிக ஈனமான ஒன்று. இதை மண் தின்றால் மண் சார்ந்தும் நெருப்பு தின்றால் விண் சார்ந்தும் பிறப்பும் மறுதவிப்புகளும் நிகழும். இதில் ஒரு சடலம். இது எதற்கும் உள்ளாகாமல் போகும் பட்சத்தில் அதன் பிராப்தம் மிகக் கொடியதாகும். பெரும்பாலும் மந்திர தந்திரங்களில் வித்தகர்கள் நல்லபடி மரணித்து -முக்தி நோக்குவது இல்லை.

அவர்களின் இயற்கைக்கு மாறான செயல்கள் அவர்களை தண்டித்து விடுகின்றது.'

விடிந்து விட்டது.

கிழக்கு வானில் ஒளிப்பந்தாய் ஆதித்தன்.

கேரள மலைநாடே புத்தொளியோடு தெரிகின்றது. கீச்சு வீச்சு என்ற பறவைகள் சப்தம். அமைதியாக ஓடிக் கொண்டிருக்கிறது குடவல்லி ஆறு. நிறைய இறால் மீன்கள் நீந்தும் நீரும் மழை நீரும் கலந்த ஆறு. ஓரமாய் கோரைப் புற்கள்.

அதன் மேல் கட்டு மரங்களில் கரிய மார்பு மலையாளிகள் தலைக்கு ஒரு கமுகுப் பாகை தரித்தபடி கோடு கிழிப்பது போல் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். ஒரு கட்டு மரத்தில் ஸ்ரீநாத், வீரபாரதி, அச்சுதன்... கட்டு மரம் செலுத்துபவன் நீண்ட கழியால் குடவல்லி ஆற்றின் ஆழத்தை வெளிக்காட்டியபடி புதர்களை ஒட்டியே அதை அழுத்திச் செலுத்தினான்.

கட்டுமரம் கோரைப் புதர்களில் மோதித் திரும்பி உள்ளே விளக்கி எல்லாம் காண்பித்துக் கொண்டிருந்தது. அந்த மலையாளி அடிக்கடி உதட்டை பிதுக்கி,

"பிரேதம் இங்கிருந்தால் கருடன் வந்திருக்கும். இங்க எங்கேயும் இல்லை." என்று அடிக்கடி சொல்லிக் கொண்டே இருந்தான்.

வீரபாரதிக்குள் மெல்ல குழப்பம் அடங்கி தன்னம்பிக்கை பெருக்கெடுக்கத் தொடங்கியது.

புரியாத ஒரு புதிருக்குள் புரண்டு எழுந்து குழம்பியதற் கெல்லாம் ஒரு விடிவு கிடைக்கும் போலத் தோன்றியது.

அவர்களின் தேடலை மற்ற கட்டுமரம் ஓட்டிகளும் கேள்விப்பட்டு அவர்களும் நாலாபக்கமும் புதர்களைக் குடாய்ந்தனர்.

அப்படியே கடல் முகத்துவாரம் வரை போய் கிட்டத் தட்ட மதியம் ஒரு மணி வரை அந்த தேடல் நிகழ்ந்தது. இறுதியில் பிரேதமும் இல்லை ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை என்று முடிந்தது.

"போதும்பா... இனியும் டயத்த வேஸ்ட் பண்ண நான் தயாரில்லை. ஜான்சன் பேசினது வெறும் உளறல். ஐ ஹேவ் நோ டவுட். அதே போல அந்த ஒரு மணி சாவான்னு ச.ப.' சொன்னதும் ஏதோ சித்து வேலை. அவன் பிழைச்சுட்டான் அது போது எனக்கு. நான் கடவுள் பலவடிவம் எடுத்துவருவேன். அதை பண்ணுவேன். இதை பண்ணுவேன்னு சொன்ன நபரோட உடம்பு கூட கிடைக்கல. அதை மீன்கள் எப்பவோ தின்னு ஜீரணம் பண்ணியிருக்கலாம்னுதான் நினைக்கறேன். எனிவே ஒரு சந்தர்ப்பம் கொடுத்துருந்தா உண்மை தெரிஞ்சிருக்கும்கற குற்றச்சாட்டுக்கு என்கிட்ட இனி இடமில்லை. போதும்... கிளம்புங்க. என்ன ஸ்ரீநாத் மைடியர் யங்மேன் என்ன சொல்றே இப்போ?"

"என்னத்த சார் சொல்ல? ச.ப. சொன்னது உண்மை சார். சத்யம்."

"அப்ப எங்க உடம்பு? அவர்தானே சொன்னார், உடம்பு இங்க இருக்கறதா. சல்லடை போட்டுட்டோமே. இல்லையே..."

"அப்படின்னா..."

"கிளம்புவோம். ஆன்மிகமும் அது சார்ந்த விஷயங்களும் எப்பவும் குழப்பமாவே இருக்கணும்னு காலம் நினைக்கறப்போ நாம என்ன பண்ண முடியும்?"

ஸ்ரீநாத் பதில் பேசாமல் அவரோடு கிளம்பினான். மூவரும் காரில் ஏறி பயணித்தார்கள். நடுவில் ஒரு எஸ்.டி.டி. பூத்தை நெருங்கி ஜான்சன் உடல் நிலை பற்றி கேட்டு தெரிந்து கொண்டார் வீரபாரதி.

"சார் நான் நல்லா இருக்கேன். நீங்க எங்க சார் கேரளா பக்கம் போய்ட்டீங்க..."

"சும்மாதான். ஒரு அசைன்மென்ட்."

"ஆமாம். அந்த ச.ப. செத்துட்டாராமே அப்படியா சார்?"

"ஆமாம்பா..."

"வேடிக்கைய பாருங்க சார். நான் செத்துடுவேன்னு சொன்ன நபர்தான் உசுரோட இல்லை. இருந்திருந்தா போய் கிழிச்சிருப்பேன்..."

"கிழிச்சதெல்லாம் போதும். ரெஸ்ட் எடு, டெம்ப்ட் ஆகாதே. நாங்க கிளம்பி வந்துகிட்டிருக்கோம்..."

"ஓ.கே. சார்..." அவன் அங்கே தொலைபேசியை முடக்க இங்கே வீரபாரதி முடக்குகிறார்.

குளிர் நிலவும் நிலையிலும் முகத்தை ஒத்தி எடுத்துக் கொள்கிறார்.

அவர்கள் கார் கிளம்பி திரும்ப நாராயண வனத்துக்குள் நுழைகிறது.

நம்பூதிரி எதிரில் ஏமாற்றத்தோடு மூவரும் போய் நிற்கின்றனர்.

நம்பூதிரி இருந்தார். செம்பட்டு உடுத்தி குங்குமம் தரித்து பார்க்க பெண் போன்ற தோற்றத்தில். ஸ்ரீசக்ர பூஜை செய்தபடி...

"நம்பூதிரிக்கு நமஸ்காரம்" அச்சுதன் வணங்குவது போல அவரை அழைத்தான்.

★ ★ ★

ஸ்ரீநாத் பதில் பேசாமல் அவரோடு கிளம்பினான். மூவரும் காரில் ஏறி பயணித்தார்கள். நடுவில் ஒரு எஸ்.டி.டி. பூத்தை நெருங்கி ஜான்சன் உடல் நிலை பற்றி கேட்டு தெரிந்து கொண்டார் வீரபாரதி.

"சார் நான் நல்லா இருக்கேன். நீங்க எங்க சார் கேரளா பக்கம் போய்ட்டீங்க..."

"சும்மாதான். ஒரு அசைன்மென்ட்."

"ஆமாம். அந்த ச.ப. செத்துட்டாராமே அப்படியா சார்?"

"ஆமாம்பா..."

"வேடிக்கைய பாருங்க சார். நான் செத்துடுவேன்னு சொன்ன நபர்தான் உசுரோட இல்லை. இருந்திருந்தா போய் கிழிச்சிருப்பேன்..."

"கிழிச்சதெல்லாம் போதும். ரெஸ்ட் எடு, டெம்ப்ட் ஆகாதே. நாங்க கிளம்பி வந்துகிட்டிருக்கோம்..."

"ஓ.கே. சார்..." அவன் அங்கே தொலைபேசியை முடக்க இங்கே வீரபாரதி முடக்குகிறார்.

குளிர் நிலவும் நிலையிலும் முகத்தை ஒத்தி எடுத்துக் கொள்கிறார்.

அவர்கள் கார் கிளம்பி திரும்ப நாராயண வனத்துக்குள் நுழைகிறது.

நம்பூதிரி எதிரில் ஏமாற்றத்தோடு மூவரும் போய் நிற்கின்றனர்.

நம்பூதிரி இருந்தார். செம்பட்டு உடுத்தி குங்குமம் தரித்து பார்க்க பெண் போன்ற தோற்றத்தில். ஸ்ரீசக்ர பூஜை செய்தபடி...

"நம்பூதிரிக்கு நமஸ்காரம்" அச்சுதன் வணங்குவது போல அவரை அழைத்தான்.

★ ★ ★